வ.உ.சி.

வாலேஸ்வரன்

செ.திவான்



Tamilnad Mercantile Bank Ltd.
Customer Oriented & Committed to Excellence
5/161, Theni Main Road, Nagamalai
Pudukottai - 625 019.
NPVAN IFS Code : TMBL0000015
CLEARING SUB MEMBER AT MADURAI
Date : 22-8-12
PAY செ. திவான் அவர்கள் या धारक को OR BEARER
रुपये RUPEES ஐநூறு மட்டும்
अदा करें ₹ 500/-
CBS
0151007104003974
Validity Period of Cheques is Changed as 3 Months from the Date of Issue with effect from 01-04-2012
PAYABLE AT ALL OUR BRANCHES
⑈331595⑈ 625060005⑆ 31

நூலாசிரியர் செ.திவான் அவர்களின் பேரன் எம்.ரெகான் சுலைமான் பிறந்தபோது வ.உ.சி.வாலேஸ்வரன் அன்பளிப்பாக அளித்த மாற்றப்படாத காசோலை

நூலாசிரியர் குடும்பத்தாருடன் வ.உ.சி. வாலேஸ்வரன்

வ உ சி வாலேஸ்வரன்

வரலாற்றாசிரியர்

செ.திவான், எம்.ஏ.,எம்ஃபில்.,

வ.உ.சி.குறித்து நூலாசிரியரின் 18வது நூல்

நூலின் தலைப்பு	:	வ.உ.சி. வாலேஸ்வரன்
பொருள்	:	வரலாறு
நூலின் ஆசிரியர்	:	செ.திவான், திருநெல்வேலி–627002
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	2015
உரிமை	:	ஆசிரியருக்கே
பக்கங்கள்	:	128
அச்சிட்டோர்	:	சிவசக்தி ஆர்ட்ஸ், சிவகாசி
நூல் வடிவமைப்பு	:	அப்துல் நசீர், நெல்லை, 9489115236
விலை	:	ரூ.100/–

வெளியீடு
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்
தாயகம்,
12, ருக்மணி இலட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை–8
தொலைபேசி: 044–28516565, 044–28516566

உள்ளே.....

வக்கீலய்யா வீடு 07

வந்த கடிதங்கள் 33

வாலேஸ்வரன் 63

வரலாற்று நிகழ்வுகள் 89

வ.உ.சி. உயில் 118

எண்ண அலைகள்

அகிலம் அஞ்சா நெஞ்சர் வ.உ.சி.யைப் பற்றி முழுமையாக இதுவரை அறியவே இல்லை எனலாம்.

தமிழ் இலக்கிய இலக்கணப் புலமை பெற்ற வ.உ.சி. படைப்பாசிரியராகவும், உரையாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும், மொழிபெயர்ப்பாசிரியராகவும் பணியாற்றித் தமிழ் மொழிக்குப் பெருந்தொண்டாற்றியிருக்கிறார். வ.உ.சி. சிறந்த கவிஞர், பார்அதிரக் கவிபாடிய பாரதியாரைப் போல தேசியப் பாடல்களைப் புனைந்திட வ.உ.சி. நாட்டம் கொள்ளவில்லை. பண்டையத் தமிழ்மரபுக் கவிஞராகவே வ.உ.சி. விளங்கினார்.

அகிலம் போற்றும் அரசியல் தலைவராகவும், அறிஞர் பெருமகனாராகவும், விடுதலைப்போராட்ட வீரராகவும், புகழ்வாய்ந்த புனிதராகவும் வாழ்ந்திட்ட திருவிளக்கு, தென் தமிழகம் தந்த தவப்புதல்வர் வ.உ.சி.

அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து வலிமை வாய்ந்த குரலை எழுப்பிய வ.உ.சி.யின் மங்காப் புகழ் அழியாது நிலைநிற்க வேண்டுமென்ற ஆவலிலும், காலகதியில், வ.உ.சி.யின் நூற்கள் மறைந்துவிடக்கூடாதென்ற ஆதங்கத்திலும் வ.உ.சி.யின் அச்சில் வராத ‘அழகும் ஆரோக்கியமும்‘ என்ற கட்டுரைகளைத் தேடி எடுத்துப் பதிப்பித்தேன். அது போன்றே ‘துன்பத்தின் கற்பனை’ என்ற கட்டுரைத் தொகுப்பையும் வெளியிட்டேன்.

1927–இல் சேலம் ஜில்லாவில் நடைபெற்ற மூன்றாவது அரசியல் மாநாட்டில், செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. ஆற்றிய உரையினை ‘சேலம் அரசியல் மாநாட்டில் எனது பெருஞ்சொல்’ என்று எட்டணா விலையில் வ.உ.சி. வெளியிட்ட நூலை ‘வ.உ.சி.யின் அரசியல் பெருஞ்சொல்’ எனும் நூலாக மறுபதிப்புச் செய்தேன்.

ஈரோட்டுப் பகலவன், சுயமரியாதை இயக்கப் பிதா, தந்தை ஈ.வெ. ரா. அவர்களுக்கும், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி.க்கும் இடையில் நிலவிய நட்பை, உறவை விவரித்திடும் வண்ணம் ‘வ.உ.சி.யும் பெரியாரும்‘ எனும் நூலாக எழுதி வெளியிட்டேன்.

தேசியத்தின் மூச்சுக் காற்றாய், வெள்ளை இருட்டை விரட்டத் தோன்றிய சுதந்திர வீரர்களின் தாரக மந்திரமாய்த் திகழ்ந்த வ.உ.சி. அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே அவர்களது புகழினைப் பாடிய

முன்னோடிகளின் பாடல்களை 'வ.உ.சி. புகழ் பாடிய முன்னோடிகள்' என்னும் நூலாகத் தொகுத்து வெளியிட்டேன்.

வ.உ.சி.யின் வாழ்க்கைச் சரிதத்தை 1940–களிலேயே தந்த பெருமைக்குரியவர் பரலி. சு. நெல்லையப்பர். அறுபது ஆண்டுகளுக்கு முன் அவர் தந்த 'வ.உ.சிதம்பரம்பிள்ளை சரித்திரம்' எனும் நூலினையும், பரலி. சு. நெல்லையப்பரின் சரித்திரத்தை அடியேன் எழுதியும், அதனை 'வ.உ.சி.யும் பரலி. சு. நெல்லையப்பரும்' எனும் நூலாக வெளியிட்டேன்.

வ.உ.சி.யின் 'பாடற்றிரட்டு' நூலினை மறுபதிப்புச் செய்து வெளியிட வேண்டுமென்ற அவா நிறைவேறி ஏறத்தாழ 85 ஆண்டுகளுக்குப் பின் தமிழகத்தில் வ.உ.சி. பாடல்கள் மீண்டும் உலா வந்தது.

1946–இல் வ.உ.சி.யின் புதல்வர் வ.உ.சி.சுப்பிரமணியன் அவர்கள் வெளியிட்ட 'வி.ஓ.சி. கண்ட பாரதி' எனும் வ.உ.சி.யின் நூலினை வ.உ.சி. பிறந்த தின வெளியீடாக வெளியிட்டேன்.

வஉசியின் முதல் மனைவியான திருமதி வள்ளியம்மை அவர்களின் சரித்திரத்தினை (1915–இல் முதற்பதிப்பு) மீண்டும் வ.உ.சி. நினைவு தின வெளியீடாக 18.11.2000 இல் வ.உ.சி.யின் வள்ளியம்மை சரித்திரம் எனும் நூலாக வெளியிட்டேன்.

சென்னை சூடாமணி பதிப்பகம் திரு.அருணகிரி எனது வ.உ.சி. நூற்கள் நான்கினைத் தொகுத்து 'வ.உ.சி. நூற்கோவை' எனும் தனி நூலாக வெளியிட்டார். ஜனவரி 26, 2001–இல் வ.உ.சி.க்கும் தொல்காப்பியருக்கும் இருந்த தொடர்புகளை விளக்கி 'வ.உ.சி.யும் தொல்காப்பியமும்' என்ற நூலை வெளியிட்டேன்.

வ.உ.சி.க்கும் திருக்குறளுக்கும் இடையே இருந்த தொடர்பினை விளக்கி, 'வ.உ.சி.யும் திருக்குறளும்' எனும் நூலாக வெளியிட்டேன். வ.உ.சி. தனது வாழ்நாளில் இருமுறை வெளியிட்ட (1917, 1930) 'பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான இன்னிலை' விருத்தியுரையினை வெளியிட்டேன். வ.உ.சி.யின் சுயசரிதையை மறுபதிப்புச் செய்தேன்.

தேசத்திற்காகவே தன்னை அர்ப்பணித்து மறைந்த செம்மல் வ.உ.சி.யின் இறுதிக் காலத்தில் அவர் எழுதிய உயிலை அண்மையில் அவரது புதல்வர் போற்றுதலுக்குரிய பண்பாளர் ஐயா வ.உ.சி. வாலேஸ்வரன் அவர்கள் எனக்குத் தந்தார்கள். அதனைப் படித்தபோது,

அன்று இரவு முழுவதும் அடியேன் தூங்கவில்லை. வ.உ.சி.யின் சோக வரலாற்றினை, தியாக சரித்திரத்தை, உலகம் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். பகட்டும், படாடோபமும் நிறைந்த இன்றைய அரசியல் உலகில் தூய அப்பழுக்கற்ற கண்ணிய வாழ்வை நடத்தி கடைசியில் கடனிலும், கண்ணீரிலும் மறைந்த அந்தப் புனிதத் தலைவரின் வாழ்க்கையின் இறுதிப் பக்கங்களை வாசிக்கின்றபோது வரலாற்று உண்மைகள் எவ்வளவு வியப்பானவை !நாட்டுக்கு உழைத்திடும் நல்லவர்களை எதிர்காலத்தில் சமுதாயம் கண்டுகொள்ளாமல் விட்டுவிடக் கூடாதே என்ற ஆதங்கத்தில் வ.உ.சி.யின் உயிலினை முதல் முறையாக சிறு நூலாக வெளியிட்டேன். சுதந்திரச் சங்கநாதம் சுப்பிரமணியசிவா சிறைவாசம், வ.உ.சி. வாலேஸ்வரன் ஆகிய 18 நூல்கள் இதுவரை வ.உ.சி. குறித்து வெளிவந்துள்ளது. ஒரிரு நூல்களை எழுதியுள்ளேன். அதனை அச்சிட்டு வெளியிட பொருள் வளத்தை எல்லாம் எல்ல இறைவன் அருள்வானாக !

வ.உ.சி.யின் திருமகனார் வாலேஸ்வரன் அவர்களுக்கும் அடியேனுக்கும் இருந்த இருபதாண்டுகால உறவினை வரலாற்றுப்பதிவு செய்ய எண்ணினேன். அந்தப் பெரியவரை நினைவுகூர்ந்து இந்த சிறிய நூலை வெளியிடுகிறேன். இதனை வெளியிட அருளிய எல்லாம் வல்ல இறைவனுக்கும், காலத்திற்கும், நூலை வெளியிடும் மறுமலர்ச்சி திமுகழகப் பொதுச்செயலாளர் கண்ணியத்திற்குரிய அண்ணாச்சி திருமிகு. **வைகோ** அவர்களுக்கும், திருமிகு. **C.A.R. குட்டி @ சண்முகசிதம்பரம்** அவர்களுக்கும், எனது பேரன் ரெகான் சுலைமான் அவர்களுக்கும், நூலை வடிவமைத்த பாளையங்கோட்டை அப்துல் நசீர் அவர்களுக்கும், அச்சிட்ட சிவகாசி சிவசக்தி ஆர்ட்ஸ் குமரேசன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செ.திவான்

வக்கீல் அய்யா வீடு

உலகெல்லாம் வாழும் தமிழர்கள் பெருமை கொள்ளவும் போற்றிப் பாராட்டிடும் வகையிலும் தன்னிகரில்லாத சிறப்புகளைப் பெற்ற தேசபக்தச் செம்மல் வஉசியின் குடும்பம், தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்துவந்த வழக்கறிஞர் குடும்பம் ஆகும்.

தாத்தா, தந்தை, பெரிய தந்தை அனைவருமே வழக்கறிஞர்கள் எனவே இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த வீட்டை **'வக்கீலய்யா வீடு'** என்றே அழைத்தனர்.

ஓட்டப்பிடாரம்

'அருஞ்திறன் நாட்டி ஆங்கிலரோடு அமர்
பொருந்திய கட்டபொம்மு நாயகன்
பாஞ்சால மன்னர் பண்புடன் அமர்ந்த
பாஞ்சால நாகர் மதில் பக்கத்து உள்ளதும்'

என்று வ.உ.சி. தனது சுய சரிதையில் குறிப்பிடும் பாஞ் சாலங்குறிச்சி மன்னன் வீரபாண்டிய கட்டபொம்மன் ஆண்ட பூமியை அடுத்த ஊர் ஒட்டப்பிடாரம் தற்போது தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளது. இவ்வூர் பிடாரிக் கோயில் ஊருக்கு வடக்கே உள்ளது. பிடாரி (காளி) (உலகம்மை) எழுந்தருளிய ஊர் பிடாரம். காலரா போன்ற தொற்றுநோயை ஓட்டும் பிடாரி ஒட்டப்பிடாரியாகி, ஊர்ப்பெயர் ஒட்டப்பிடாரம் ஆயிற்று. பாஞ்சாலப் பெருவேந்தன் ஆட்சிபுரிந்தபோது வீரபாண்டியபுரம் என இவ்வூர் அழைக்கப்பட்டதாக அறிஞர்கள் குறிப்பிடுவர். ஓட்டப்பிடாரத்தின் சிறப்பினை பல வரிகளில் புகழ்ந்து பாடியுள்ளார் வ.உ.சி.

ஒட்டப்பிடாரத்தில் மரபுவழிக் கவிஞர் சிதம்பரம் என்பவர் ஒருவர் இருந்தார். இவருக்கு சிதம்பரம், உலகநாதன், குமாரசாமி என்ற மூன்று ஆண்மக்கள். இதில் சிதம்பரம் மிகப்புகழ்பெற்ற வழக்கறிஞராகத் திகழ்ந்தார். ஆனால் 28 வது வயதிலேயே இவ்வுலக வாழ்வைத் துறந்தார். குமாரசாமியும் இளம் வயதிலேயே மறைந்தார்.

உலகநாதரும் தனது தமையனைப் போலவே சிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்தார். இவரே செக்கிழுத்த தேசபக்தச் செம்மல் வஉசியின் தந்தையாவார். இவர் எட்டயபுரம் அரசரிடம் அரண்மனை வழக்கறிஞராகப் பணிபுரிந்தார். இவரது துணைவியார் பரமாயி அம்மையார். இவர்களுக்கு மகனாக 5.9.1872இல் தோன்றியவர் வ.உ.சி. இளம் வயதில் வீரப்பெருமாள் அண்ணாவியிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றார். வ.உ.சி. தொடக்கப்பள்ளி ஓட்டப்பிடாரத்தில், திருநெல்வேலி மதிதா இந்து உயர்நிலைப்பள்ளி, தூத்துக்குடி உரோமன் கத்தோலிக்கப்பள்ளி, தூத்துக்குடி கால்டுவெல் உயர்நிலைப்பள்ளி இவைகளில் கற்றுத்தேர்ந்த வ.உ.சி. ஓட்டப்பிடாரத்தில் வட்ட ஆட்சியர் அலுவலகத்தில் எழுத்தராகப் பணிபுரிந்தார்.

வ.உ.சி.யின் அரசியல் பிரவேசம்

தனது 21வது வயதில் வ.உ.சி. 1893இல் அரசியலில் பிரவேசிக்கிறார். "எனது அரசியல் குரு திலகர். 1893 முதல் அரசியலில் அவருடைய பேச்சுக்களையும் எழுத்துக்களையும் கூர்ந்து கவனித்து வந்தேன். இந்தியா பிரிட்டிஷாரிடமிருந்து மீட்கப்படுவதற்கான வழிமுறைகளைப் பற்றி என்னுடைய நண்பர்களிடம் விவாதித்தேன்" என்று வ.உ.சி. குறிப்பிட்டுள்ளார். (Reminiscences and Anecdotes of Lokamanya Tilak, Three volumes, Edited and published by S.V.Bapat, Kesari & Mahratta Office, Poona, 1927, Vol III. P.158)

வ.உ.சி.யின் தந்தை உலகநாதர் வஉசியை சட்டம் பயிலத் திருச்சிக்கு அனுப்பினார். கணபதி அய்யர், ஹரிஹர அய்யர் ஆகியோரிடம் சட்டம் பயின்றார். பிப்ரவரி 1894இல் படிப்பை முடித்து 10.4.1894இல் தனது சட்டப்படிப்பின் பட்டம் பெற்றார் வ.உ.சி.

வ.உ.சி.யின் முதல் திருமணம்

1895இல் 23 வது வயதில் திருச்செந்தூர் சுப்பிரமணியனார் மகள் வள்ளியம்மையைத் திருமணம் செய்தார் வ.உ.சி.

வழக்கறிஞர் தொழிலில் ஒழுக்கம், வாய்மை, பிறர் நலம் பேணுதல் முதலானவற்றைக் குறிக்கோளாகக்கொண்டு செயலாற்றினார் வ.உ.சி.

High Court of Judicature, Madras.

Pleadership Examination.

Certificate No. 178

This is to certify that V.O. Chidambaram Pillai who was a candidate for the Pleadership Examination held at Tinnevelly in February 1894, has been declared by the Examination Board to have passed the *Second Grade* Pleadership Examination.

High Court, Madras,
10th April 1894.

Secretary,
Examination Board.

10.4.1894இல் வ.உ.சி. பெற்ற சட்டப்படிப்பின் பட்டம்

வ.உ.சிதம்பரனார் – வள்ளியம்மை

காவல்துறையினர் எவர் மீதாவது பொய் வழக்கு தொடுத்தால் அதை அறிந்த வ.உ.சி. ஓடோடிச் சென்று பாதிக்கப்பட்டவருக்கு உதவிபுரிந்தார். பணக்காரர் ஏழைகளுக்குப் புரியும் அநீதிகள் ஆகியவற்றை எதிர்த்துப் பாதிக்கப்பட்ட ஏழைகளுக்காக வ.உ.சி. நீதிமன்றங்களில் வாதாடினார்.

நீதிமன்றத்தில் வ.உ.சி.

ஏழை எளிய மக்களின் துண்டு நிலங்களைப் படை பலத்தால் ஆக்கிரமித்துக் கொள்ளும் ஜமீன்தார்கள், தங்கள் மனம் போல நடக்காத ஏழை எளிய விவசாயிகளை அடியாட்களால் தாக்கிடும் பணக்காரர்கள் மீது போலீசார் வழக்குகள் தொடராதபோது, ஏழை எளிய மக்களுக்காக பணக்காரர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தும் பணியினை செய்தவர் வ.உ.சி. சில வேளைகளில் தந்தை உலகநாதர் பணக்காரர்களுக்காக வாதிடுவதும், வ.உ.சிதம்பரம் பிள்ளை பணக்காரர்களால் ஏமாற்றப்பட்ட ஏழை மக்களுக்கு வாதாடியதும் உண்டு. (பேராசிரியர் நா.வானமாமலை, வ.உ.சி. முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி 1999, பக்.18)

வ.உ.சி.யின் இத்தகைய நீதிமன்ற நடவடிக்கைகளால் பணக்காரர்களும், போலீசாரும் வ.உ.சி. மீது வெறுப்புக் கொண்டனர். ஊழல் மலிந்த பிரிட்டிஷ் ஆட்சியில் போலீஸ் துறையினர் சிதம்பரம் பிள்ளையை ஏதாவது ஒரு வழக்கில் தொடர்புபடுத்தி பொய்வழக்குப் புனைந்திட சமயம் பார்த்திருந்தனர். ஓட்டப்பிடாரத்தில் ஒரு தலைமைக் கான்ஸ்டபிள் சுப்பிரமணியம் என்பவர் கொலை செய்யப்பட்டிருந்தார். அந்த வழக்கில் வ.உ.சிதம்பரம் பிள்ளையைத் தொடர்புபடுத்தினர் காவல்துறையினர். குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்காக வ.உ.சி. வாதாடாமல் தடுக்க இந்தச் சூழ்ச்சி உருவாகியது. சூழ்ச்சியைச் சூழ்ச்சியால் வென்றிடத்திட்டமிட்டார் வ.உ.சி. எதிரிகளுக்காக தான் வாதாடப் போவதில்லை என்று வாக்குறுதி தந்துவிட்டு வழக்கிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டார் வ.உ.சி.

பின்னர் வழக்கு விசாரணை நடைபெற்றது. யாரும் எதிர்பாராத சூழ்நிலையில் அந்த வழக்கில் வ.உ.சி. வாதாடினார். வெற்றியும் பெற்றார். (வ.உ.சிதம்பரம்பிள்ளை, எம்.சம்பத், பெ.சு.மணி, டில்லி 1995, பக் 51)

ஏழைகளின் வழக்கறிஞர்

ஆத்திரம் கொண்ட போலீஸ் துறையினர் வ.உ.சி. மீது பொய் வழக்கு தொடுத்தனர். வழக்கை விசாரித்த ஆங்கிலேய நீதிபதி வ.உ.சி.யை விடுதலை செய்தனர். அத்தோடு வ.உ.சி.க்கு நஷ்டஈடு தரவும் உத்தரவிட்டார். வ.உ.சி.க்கு தொல்லை கொடுத்து வந்த போலீசாரும் வேலை இழந்தனர்.

நீதிபதி ஏகாம்பரம் அய்யர் (சப் மாஜிஸ்திரேட்) இலஞ் சம் வாங்கியதைக் கண்டு அவர் மீது குற்றச்சாட்டுக்களைப் பொதுமக்கள் கொண்டு வந்தனர். சப் மாஜிஸ்திரேட் மீதான ஊழல் வழக்கில் அஞ்சா நெஞ்சங்கொண்ட வ.உ.சி.யை மக்கள் தங்களுக்காக வாதாட அழைத்தனர். தற்காலத்தில் அதிகாரிகள் மீது வழக்கு கொண்டு வர மக்கள் அஞ்சுகிறார்கள். ஆனால் அந்தக் காலத்திலே அதிகாரிகளின் செல்வாக்கு அபரிதமாயிருந்த வேளையில் வ.உ.சி. அவர்களை எதிர்த்து நீதிமன்றங்களில் வாதாடினார். நீதிபதியின் பெயரைச் சொல்லி இலஞ்சம் வாங்கின வாசுதேவராவ் சம்பளம் குறைக்கப்பட்டு கிளார்க்காக மாற்றப்பட்டார். வழக்கின் இறுதியில் பஞ்சாபகேச அய்யர் வழக்கறிஞர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டார். இவ்வழக்கு முடிந்த வேளையில் வ.உ.சி. பெயரைக் கேட்டாலே அதிகார வர்க்கத்தினர் முழுவதும் அஞ்சி நடுங்கினர்.

ஓட்டப்பிடாரம் முடிமன் என்ற சிற்றூரைச் சேர்ந்த வேதநாயகா எனும் ஒடுக்கப்பட்ட மக்களில் ஒருவர் மீது பொய் வழக்கு போலீசாரால் புனையப்பட்டது. வேதநாயகத்திற்காக வ.உ.சி. வாதாடினார். பொய் வழக்குள் தூள் தூளாயின. **ஏழைகளின் வழக்கறிஞர்** என்று எல்லோராலும் பாராட்டப்பெற்றார் வ.உ.சி.

திறமைக்குப் பாராட்டு

சிதம்பரம் பிள்ளை அவர்கள் பெரும்பாலும் கிரிமினல் வழக்குகளில் எதிரி பக்கத்து வக்கீலாகத் தோன்றி விவாதிப்பது வழக்காகும். குறுக்கு விசாரணை செய்வதிலும், சாட்சிகளை சமயோசிதமான கேள்விகள் கேட்பதிலும் நிபுணராம். அவருக்கு நிகர் அந்த வட்டாரத்திலே இல்லையாம். அவர் விவாதித்து வென்ற வழக்குகள் பல. அவற்றுள் குலசேகரநல்லூர்

கொலை வழக்கு குறிப்பிடத்தக்கது. அதற்கென இரண்டு பெரிய வக்கீல்களை விசேஷ பப்ளிக் பிராசிக்யூட்டர்களாக நியமிக்கப்பட்டது. அவ்வழக்கில் சிதம்பரம் பிள்ளை அவர்கள் எதிர் பக்கம் தோன்றி, போலீஸ் சாட்சியங்களைக் குறுக்கு விசாரணையில் சின்னாபின்னப்படுத்திவிட்டார். முடிவில் எதிரியை விடுதலை செய்ய மாஜிஸ்திரேட் தீர்ப்பு அளித்தார்.

அப்போது, வழக்கை முதலிலிருந்து கவனித்து வந்த உதவி போலீஸ் சூப்பிரன்டெண்ட் பிளாக் ஸ்டோன் என்ற வெள்ளையர், சிதம்பரம் பிள்ளை அவர்களின் வாக்குச் சாதுர்யத்தையும் வாதத் திறமையையும் பாராட்டி அவருடைய கையைக் குலுக்கினார்.

சர்க்கார் தரப்பு அதிகாரி எழுந்து பாராட்டுவதென்றால் வ.உ.சிதம்பரம் அவர்களின் விவாதத் திறமையை என்னவென்று உரைப்பது? (தளபதி வ.உ.சிதம்பரனார் பக்.20)

நேர்மையும் ஏழைகளிடத்து இரக்கமும், மக்களிடம் உயர்வு தாழ்வு பாராட்டாத நடுநிலைக் குணமும் யாவருக்கும் உதவி செய்ய வேண்டும் என்ற பேராவலுமுடையவராய் தாம் மேற்கொண்ட வழக்கறிஞர் தொழிலைச் சிறிதும் வழுவின்றி வ.உ.சி. நடத்தி வந்தார். எனினும் அதிகாரிகளின் பகைமை மட்டும் அதிகரித்து வந்தது. (தா.சிங்காரவேலு வாழும் சிதம்பரம், 1956, சென்னை, பக்கம் 13)

காங்கிரஸ் இயக்கத்தில்

வ.உ.சி. துவக்க காலத்தில் காங்கிரஸ் மகாசபையில் சேர்ந்து பணியாற்றிய செய்தி 15.08.1898 சுதேசமித்திரன் இதழில் காணக்கிடைக்கின்றது.

10.08.1898 புதன்கிழமை மாலை 6 மணிக்கு ஓட்டப்பிடாரத்தில் சபை கூடியது. **வக்கீல் சிதம்பரம் பிள்ளையவர்கள்** *முதலா அனேக பாரி குடித்தனக்காரர்களும் வந்திருந்தார்கள்.* **ஸ்ரீ பழனியாண்டி முதலியாரவர்கள், பாண்டுரெங்கராயரவர்கள், இராஜகோபால அய்யரவர்கள், திருமலை சாஸ்திரிகள்** *ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.*

கூட்டத்தில் வ.உ.சி. "நமது காங்கிரஸ் மகாஜன சபை ஏற்படுத்தப்பட்ட நோக்கம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்."

திருமணப் பத்திரிகை

ஸ்ரீ அகண்டபரிபூரண சச்சிதானந்த பரகாருண்ணியத்தின் திருவருளால்,

எனது ஜேஷ்ட குமாரர் தூத்துக்குடி டிஸ்டிரிக்ட் முன்சீபு கோர்ட்டு பிளீடர் சிரஞ்சீவி,

கவிராஜர் சிதம்பரம்பிள்ளைக்கு

எனது மைத்துனர் ஆழ்வார்திருநகரி மகா-ள-ள-ஸ்ரீ சி. வ. பரம்புபிள்ளை என்ற ஞானதேசிகம்பிள்ளையவர்கள் புத்திரி சௌபாக்கியவதி,

மகாராசி மீனாக்ஷியம்மாளை

விவாகஞ்செய்யநிச்சயித்து நிகழும் பிலவ௵ சிம்மரவி உ௰௪ (8-9-1901) ஆதித்தவாரமும் புனர்பூச நக்ஷத்திரமுங்கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை ௪-க்குமேல் ௬-க்குள்ளாக கன்னியாலக்கனத்தில் தூத்துக்குடி மேலூர் சிவன்கோவில் தெருவில் எனது கிருகத்தில் நடப்பிவிக்கிற திருமாங்கலியதாரண முகூர்த்தத்திற்கும் மறுநாள் நடக்கிற பட்டணப்பிரவேச முதலான சகல வைபவங்களுக்கும் தாங்கள் பந்துமித்திரர்கள் சகிதம் வந்திருந்து சிறப்பிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்.

ஆவணி௴ ௰௨ } தூத்துக்குடி. } வ. உலகநாதபிள்ளை, வக்கீல், ஒட்டப்பிடாரம்.

அவ்வண்ணம் நானும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சி. வ. பா. ஞானதேசிகம்பிள்ளை, ஆழ்வார்திருநகரி.

With the best compliments of
V. O. Chidambaram Pillai, Pleader, Tuticorin.

வ.உ.சிதம்பரனார் – மீனாட்சி அம்மையார் திருமணப் பத்திரிகை

வ.உ.சிதம்பரனார் – மீனாட்சி அம்மையார்

இவ்வருடம் 1898 சென்னையில் நடைபெறும் 14 வருஷ காங்கிரஸ் மகா சபைக்கூட்டத்திற்கு, நமது தாலுகா கிராமங்களிலிருந்து பொருள் உதவி செய்ய முயற்சி செய்ய வேண்டி இங்கு ஒரு சப் கமிட்டி ஏற்படுத்த வேண்டும் என்றார் வ.உ.சி. அதனை **சுவாமிநாதபிள்ளை** ஆமோதித்தார். சப்–கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. பிரசிடெண்டாக **பாண்டுரங்கராயரும்,** செகரிடேரியாகவும், டிரசரராகவும் (செயலாளர் மற்றும் பொருளாளர்)**வ.உ.சிதம்பரம் பிள்ளையும்** தேர்ந்தெடுக்கப்பட்டார். (ஏ.கே.செட்டியார் குமரிமலர், மே 1981, பக் 26,27) சென்னையில் 1898 டிசம்பர் 29,30, 31 நாட்களில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் 614 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அவர்களில் ஒருவர் வ.உ.சி.

வ.உ.சி. மீது அதிகாரிகள் கொண்டிருந்த பகைமையைக் கண்ட தந்தை உலகநாதர் வ.உ.சி.யை வழக்கறிஞர் தொழிலை நடத்திட தூத்துக்குடிக்கு கி.பி.1900இல் அனுப்பி வைத்தார். தந்தை சொல்லை ஏற்று 1900 இல் தூத்துக்குடிக்குச் சென்றார் வ.உ.சி. (மா.ரா. அரசு வ.உ.சிதம்பரனார், பக்.10) கி.பி. 1901இல் வ.உ.சி.யின் துணைவியார் வள்ளியம்மை மறைந்தார். (இது குறித்து நூலாசிரியர் செ.திவான் வ.உ.சி.யின் வள்ளியம்மை சரித்திரம் (1915) என்ற நூலை மறுபதிப்பு செய்துள்ளார்)

வள்ளியம்மையாரின் இளைய பாட்டனார் பேத்தியான மீனாட்சி அம்மையாரை 8.9.1901இல் வ.உ.சி. திருமணம் செய்தார். ஆழ்வார்திருநகரி மாசி வீதி சி.வ.பாப்பு பிள்ளை என்ற ஞானதேசிகம் பிள்ளையின் புதல்வி இவர்.

தூத்துக்குடி வாழ்வின்போது 1903 மே மாதத்தில் வ.உ.சி. நடத்திய கொலை வழக்கு குறிப்பிடத்தக்கது ஆகும். இதுகுறித்து சிறந்த நியாயவாதி என்ற கட்டுரையில் தமிழறிஞர் பரலி. சு. நெல்லையப்பர் எழுதியுள்ளது இதோ.

கொலை வழக்கில் விடுதலை

குலசேகரநல்லூர் என்ற சிறு ஊரில் ஓர் ஆச்சாரி கொலையுண்டதாக வழக்கு. அவனை ஒரு வைக்கோல் போர் உள்ள களத்தில் துரத்தியடித்து வேட்டையாடிக் கொலை செய்ததாக வழக்கு. அதில் எதிரிகள் எழுவர். ஆறு எதிரிகள்

முன்னரே அகப்பட்டுப் பல ஆண்டுகள் சிறைவாசத் தண்டனை அடைந்தனர்.

ஆறுமுகத் தம்பிரான்

ஆனால், முதலாவது எதிரி அகப்படவில்லை. அவர் ஆறுமுகத் தம்பிரான் என்ற சாமியார். போலீசாரின் விண்ணப்பத்தில் அழகப்ப பிள்ளை என்று அவர் பெயர் கண்டிருந்தது. கொலை நடந்தவுடன் அவர் தம் மீது அநியாயமான பழி ஏற்படுமென்று அஞ்சி, திருவாவடு துறை மடத்தில் சேர்ந்து சாமியாராகி ஆறுமுகம் தம்பிரான் என்ற பெயருடன் சிதம்பரத்தில் உள்ள திருவாவடு துறை மடத்தின் தலைவராகிவிட்டார்.

1906ம் ஆண்டு மே மாதத்தில் கொலை நடந்தது. ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் ஓட்டப்பிடாரம் போலீஸ் பெரிய கான்ஸ்டேபிள் சிதம்பரம் பிள்ளையென்பவர் மணியாச்சி ஸ்டேஷனில் தம்பிரானைக் கைது செய்தார்.

கைது செய்து ஓட்டப்பிடாரம் சப் ஜெயிலில் ரிமாண்டில் வைக்கப்பட்டார். அந்தக் காலத்தில் அங்கே பஞ்சாபகேச ஐயர் பி.ஏ.பி.எல். என்பவர் சப் மாஜிஸ்திரேட்டாயிருந்தார். அவர் மிகவும் திறமைசாலி. ஆனால் லஞ்சப் பழக்கம் இல்லாதவராயிருந்ததால் அவர் பெரிய பதவிகளை அடைந்திருப்பார். கொலை வழக்கு இந்த பஞ்சாபகேச ஐயரிடம் விசாரணைக்கு வந்தது. போலீஸாரைத் தவிர மற்ற எல்லோரும் தம்பிரானை நிரபராதி என்று சொன்னார்கள். அவ்வாறிருந்தும் அவர் தம்பிரானை ஜாமீனில் விடுதலை செய்ய மறுத்துவிட்டார். அதற்குக் காரணம் அந்தக் காலத்தில் பலவாறாச் சொல்லிக் கொண்டார்கள்.

சிதம்பரனார் தோன்றல்

தம்பிரான் சிதம்பரனாரின் உறவினர், மைத்துனர் முறை. மேலும் பஞ்சாபகேச ஐயரை மற நெறியில் செல்லாது அற நெறியில் ஒழுகுமாறு செய்ய வேண்டுமென்ற ஆர்வமும் இருந்தது. அந்த வழக்கை நடத்த வேண்டுமென்று தம்பிரானின் உறவினர் ஒருவர் சிதம்பரனாரை வேண்டிக்கொள்ள, அவர் அதற்கு இணங்கினார். ஜில்லா மாஜிஸ்திரேட்டான கலெக்டரிடம்

மனு கொடுத்ததில் அவர் அதனை தூத்துக்குடிக்கு ஜாயிண்டு மாஜிஸ்திரேட் கோர்ட்டிற்கு மாற்றிவிட்டார்.

வாலேஸ் துரையின் நேர்மை

அப்பொழுது தூத்துக்குடி சப் கலெக்டராக இருந்தவர் ஈ.எச்.வாலேஸ் எம்.ஏ., ஐ.ஸி.எஸ்., அவர் சிதம்பரனாரின் சொந்த ஊரான ஓட்டப்பிடாரத்தை அடுத்த புதியம்புத்தூரில் வழக்கை விசாரணை செய்யத் தொடங்கினார். இரண்டு பக்கம் கட்சிக்காரர்களும் சாட்சிக்காரர்களும், உறவினர்களும், நண்பர்களும் சேர்ந்த கூட்டம் ஒரு திருவிழாக் கூட்டம் போலிருந்தது. சர்க்கார் தரப்பில், மதுரை வக்கீல் ரங்காச்சாரியும், திருநெல்வேலி வக்கீல் பழனியாண்டி முதலியாரும், ஸ்பெஷல் பப்ளிக் பிராசிக்யூட்டர்களாகத் தோன்றி வாதித்தனர். அவர்களைச் சிதம்பரனார் குறுக்கு விசாரணையில் திணற அடித்தார். போலீசார்கூடக் குறுக்கு விசாரணையில் தைரியமாகப் பதில் சொல்ல முடியாமல் விழித்தார்கள். ஒன்றிருக்க ஒன்றைச் சொன்னார்கள்.

விடுதலை

வாலேஸ் துரைக்கு வழக்கின் போக்குத் தெரிந்துவிட்டது. எதிரி பக்கம் சாட்சி விசாரணையில்லாமலே வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. தம்பிரானும் விடுதலை அடைந்தார்.

இந்த வழக்கை ஆதி முதல் கவனித்துக் கொண்டிருந்த உதவி போலீஸ் சூப்பிரெண்டெண்டெண்ட் சிதம்பரனாரின் நியாய வாதத்தையும் வாக்கு வன்மையையும் கண்டு வியந்து அவரது கையைப்பிடித்து குலுக்கித் தமது மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார். இந்த பிளாக் ஸ்டோன் பிற்காலத்தில் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவி பெற்றார்.

அந்த காலத்தில் பெருங் கிளர்ச்சியை விளைவித்திருந்த இந்தக் கொலை வழக்கின் முடிவு சிதம்பரனாரின் புகழைத் திருநெல்வேலி ஜில்லாவில் அதிகப்படுத்தியது. தூய வெண்ணீறு அணிந்து, ஆகத்தில் அக்க மணி புனைந்து, உருவின் மிக்க உடம்புகொண்ட சடைமுடித் தம்பிரான் சுவாமிகள் சில ஆண்டுகளுக்குப் பின்னர் தமக்கு நன்றி

செய்த சிதம்பரனாருக்குச் சிதம்பரத்தில் ஒரு சிறந்த விருந்து அளித்தார். பிற்காலத்தில் சிதம்பரனார் சிறை புகுந்து விடுதலை அடைந்தபோது சென்னையில் அவரைப் பரிவுடன் வரவேற்று அவருக்குப் பொன்னாடை புனைந்து போற்றியவரும் இந்த ஆறுமுகத் தம்பிரானேயாவார். (முல்லை முத்தையா, தளபதி வ.உ.சிதம்பரனார் சென்னை, *1959*, பக்.*44–47*)

மாடசாமி நிலவழக்கு

நீதிபதி லயனல் வில்பர்ட் (Lionel wilbert Joint Magistrate) அமர்ந்திருந்த நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நடந்தது. ஒருவர் ஐரோப்பிய வியாபாரியிடம் கடன் வாங்குகிறார். இவருக்கு இடைத்தரகராக ஒருவர் இருந்து கடனைப் பெற்றுத் தருகிறார். கடனை வாங்கித் தந்த தரகருக்கு கடன்பெற்றவரின் சிறு நிலத்தின் மீது கண். அந்த நிலத்தை எப்படியாவது கைப்பற்றிவிடத் திட்டமிட்டார்.

நீதிமன்றத்தில் பொய் வழக்கு புனையப்பட்டது. கடனைத் திருப்பித்தரவில்லை என்று வெள்ளைக்கார வியாபாரி வழக்கு தொடர்ந்தார். ஆங்கிலேய நீதிபதி, ஆங்கிலேய வாதி, அவர் பக்கம் வாதிட்டவர் வஉசியின் தந்தையான பிரக்யாதி பெற்ற வழக்கறிஞர் உலகநாத பிள்ளை வழக்கு விசாரணைக்கு வந்தது. உலகநாத பிள்ளையின் வாதமும் முடிந்தது. மாஜிஸ்திரேட் லயனல் வில்பர்ட் கடன் வாங்கியவரிடம் கேட்டார். உனக்கு வக்கீல் இல்லையா? நீதிமன்றம் முழுவதும் இந்த ஏழைக்காக யார் வாதிட முன்வருவார்கள். இவருக்கும் வக்கீல் வைத்து வாதிடுமளவிற்கு வசதிகளும் கிடையாது. எனவே வழக்கு இத்துடன் முடிந்துவிடும் என்று எண்ணினார்கள்.

வெள்ளைக்கார வியாபாரியும் வழக்கில் வெற்றி பெறப்போவதாக நினைக்கையில், நீதிமன்றத்தில் கணீர் குரலில், இவருக்காக நான் வாதிடுகிறேன் என்று வஉசி எழுந்தார். வாதங்களை முன் வைத்தார், கர்ஜித்தார், கோர்ட் கலங்கியது. நீதிமன்றத்தில் கூண்டில் சாட்சிகளை ஏற்றினார். வெள்ளைக்காரர் தொடுத்தது பொய் வழக்கு. உண்மைக்கு புறம்பானது என்று நிருபித்தார்.

நீதிபதி லயனல் வில்பர்ட் கதியற்ற இந்த ஏழைக்கு சாதகமாகத் தீர்ப்பை வழங்கினார்.

நீதிமன்றத்தில் தனது தந்தைக்கு எதிராகவே வாதிட்டு வெற்றிபெற்ற வஉசியின் திறமையை வழக்கறிஞர் உலகம் போற்றியது. மக்கள் வஉசியை வாழ்த்தினார்கள். இதுவரை வெற்றிகரமாக வழக்கறிஞர் தொழிலை நடத்தி வந்த உலகநாத பிள்ளையை வென்ற அவரது மகன் வஉசியின் புகழ் பரவியது. கதியற்ற அந்த ஏழை வஉசியின் காலில் விழுந்து வணங்கினார்.

மாடசாமி நில வழக்கு

கதியற்ற அந்த ஏழை யார் தெரியுமா? அவர்தான் ஓட்டப்பிடாரம் மாடசாமிப் பிள்ளை. சிறந்த பாரதி ஆய்வாளர். ஆர்.ஏ.பத்மனாபன் தான் ஆங்கிலத்தில் 1977இல் எழுதிய வ.உ.சிதம்பரம் பிள்ளை எனும் 103 பக்கங்களை கொண்ட நூலில் A Poor man Pleader ஏழைகளின் வழக்கறிஞர் தலைப்பில் பக். 23, 24 இல் இந்த விவரங்களைத் தந்துள்ளார்.

ஓட்டப்பிடாம் கடைத் தெரு சுப்பிரமணிய பிள்ளை (ஐயா பிள்ளை) ஆவுடையம்மாள் தம்பதியருக்குப் பிறந்தவர் மாடசாமி. இவர் வஉசியின் சுதேசிக் கப்பல் கம்பெனியில் தீவிரமாகப் பணியாற்றியவர். 17.06.1911இல் மணியாச்சியில் நடைபெற்ற ஆஷ் கொலையில் சம்பந்தப்பட்டவர் (இவரை நல்ல வசதி படைத்தவர் என்று ரகமி தனது மாவீரன் மாடசாமி நூலில் குறிப்பிட்டுள்ளார்.)

தூத்துக்குடியில் சுதேசிப் பண்டக சாலை

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பொருள்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் சுதேசிப்பண்டக சாலை என்ற அமைப்பை நிறுவினார் வ.உ.சி. தூத்துக்குடியில் பல்வேறு சுதேசிய அமைப்புகளை நிறுவிடவும் முயன்றார் வ.உ.சி.

மதுரைச் தமிழ்ச் சங்கத்தில்

1901ஆம் ஆண்டு மே மாதம் 21, 22, 23 ஆம் நாள்களில் சென்னை மாநில அரசியல் மாநாடு மதுரை மாநகரில் கூடியது. அதன் வரவேற்புக் குழுத் தலைவர் பாலவனத்தம் ஜமீன்தார் திரு.பாண்டித்துரைத் தேவர் ஆவார். மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் நிறைவேறிய பின் மதுரையில் தமிழ்ச் சங்கம்





தூத்துக்குடியில் இருந்து வெளியான தமிழ் நேஷனல் பத்திரிக்கை என்ற இதழில் சுதேசிப் பண்டகசாலை குறித்து வெளியான விளம்பரம் இது

தோற்றுவிக்கத்தாம் கருதியிருந்த கருத்தை வெளியிட்டார் *14.09.1901* பகலில் சேதுபதி உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பெற்றது. இச் சங்கத்தில் வ.உ.சி. உறுப்பினராகச் சேர்ந்தார். *25.05.1905*இல் வ.உ.சி.க்கு பாண்டித்துரைத் தேவர் எழுதிய கடிதம் இதோ

உ

திருச்சிற்றம்பலம்

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

12-5-1905.

மகா-ா-ா-ஸ்ரீ வ.உ. சிதம்பரம்பிள்ளை

அவர்களுக்கு.

ஐய,

தாங்கள் இச்சங்கத்தின் கல்வியங்கத்தினருள் ஒருவராயமர்ந்து செந்தமிழ்ப் பாஷாபி விர்த்திக்கு வேண்டுவனவற்றைப் புரிதற்கு மனமுவந்து வரவிடுத்த சம்மதப்பத்திரிகையைக் கண்ணுற்றுப் பெருமகிழ்வெய்தினேன். இவ்வாறு அன்புகூர்ந்து முன்வந்து வாக்குதவிய தங்கட்கு அநேக வந்தனம் அளிக்கின்றேன்.

இங்ஙனம்,

பாண்டித்துரை

அக்கிராசனாதிபதி.

25.05.1905 காலை 9 மணிக்கு சேதுபதி ஹைஸ்கூல் விக்டோரியா மண்டபத்தில் மதுரைச் தமிழ்ச் சங்கத்தின் நான்காம் வருடச் சங்க கூட்டம் பாண்டியத்துரைத் தேவர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட 23 பேர்களில் வ.உ.சிதம்பரம் பிள்ளையும் ஒருவர் ஆவார்.

(தியாகச் செம்மல் வ.உ.சி. சிறைபோன பின் மதுரைத் தமிழ்ச் சங்கம் வ.உ.சி.யைக் கைவிட்ட வரலாற்றை விரிவாகக் காண செ.திவான் எழுதிய வ.உ.சி.யும் மதுரைத் தமிழ்ச் சங்கமும் என்ற நூலில் காணலாம்)



1723 Rs. 25

THE SWADESHI STEAM NAVIGATION COMPANY, LIMITED.

TUTICORIN.

Share Certificate.

CAPITAL RS. 10,00,000, DIVIDED INTO 40,000 SHARES OF RS. 25. EACH.

This is to certify that S. Nagalingampillay of ... the Registered proprietor of Share No. 20662 in the SWADESHI STEAM NAVIGATION CO. LTD. subject to the Memorandum and Articles of Association of the Company and that up to date there has been paid in respect of this Share the sum of Rupees Twenty five only.

Given under the Common Seal of the Company

TUTICORIN. this ... day of ... 190 .

Secretary. Director.

சுதேசிக் கப்பல் நிறுவனத்தின் பங்குப் பத்திரம்

சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி

வானம் பொழியுது, பூமி விளையுது மன்னன் காணிக்கு ஏது கிஸ்தி? என்று வெள்ளையரை எதிர்த்து முழுக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் கயத்தாற்றில் கட்டைப் புளியமரத்தில் புன்னகை பொங்கிட தானே நடந்து சென்று கழுத்தில் தூக்குக் கயிற்றை மாட்டிக் கொண்ட நாள் 16.10.1799. அதனை நினைவு கூறும் வகையில் அக்டோபர் 16ஆம் நாள் தூத்துக்குடியில் சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியை வ.உ.சி. துவங்கினார்.

வாணிகம் செய்ய வந்த வெள்ளையரை வாணிகத்திலே விரட்டிட கப்பல்கள் விடுவதற்கு சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி சார்பில் பங்கு சர்டிபிகேட்டை விநியோகித்து நிதி திரட்டினார் வ.உ.சி.

வெள்ளையர் எதிர்ப்பு உணர்வு நிலவுவதாக ஐயப்படக்கூடிய ஒரே மாவட்டம் திருநெல்வேலி தான் என்று மாவட்ட ஆட்சித் தலைவரின் 1906 ஆம் ஆண்டு அறிக்கை கூறுகிறது.

1907 இல் சூரத் காங்கிரசுக்கு வ.உ.சி.யும் மகாகவி பாரதியும் சென்று திரும்பினர்.

சுதந்திரச் சங்க நாதம் சுப்பிரமணிய சிவா 09.01.1908 நெல்லை வந்தார். வெள்ளையரை எதிர்த்து முழங்கினார். (செ.திவான் எழுதிய சுதந்திரச் சங்கநாதம் சுப்பிரமணிய சிவா சிறைவாசம் என்ற நூலில் இது குறித்து விரிவாகக் காணலாம்)

3.2.1908இல் வ.உ.சி.யை சுப்பிரமணிய சிவா தூத்துக்குடியில் சந்தித்தார். 27.02.1908இல் தூத்துக்குடி கோரல் மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை தொடங்கினர். வஉசி, சிவா முக்கியப் பங்கேற்று முழக்கங்கள் செய்து முன்னணியில் நின்றனர். 07.03.1908 இல் கோரல் மில் தொழிலாளர்கள் கோரிக்கைகள் சில நிறைவேற்றப்பட்டு வேலைக்குத்திரும்பினர்.

விபின் சந்திரபாலர்

இந்திய சுதந்திரப் போரில் கலந்து கொண்டு சிறை சென்ற விபின் சந்திரபாலர் விடுதலையாகும் 09.03.1908 ஆம் நாளை

சுயராஜ்ய நாளாக தூத்துக்குடியில் கொண்டாட வ.உ.சி.யும், சிவாவும் முடிவெடுத்தனர். 14.03.1908இல்அதே விழாவை நெல்லையில் நடத்திடவும் முடிவு செய்தனர். கூட்டங்களை நடத்திட மாவட்ட கலெக்டர் எல்.எம்.விஞ்ச் 144 தடை உத்திரவைப் பிறப்பித்தார். வ.உ.சி.யும், சிவாவும் பத்மநாப அய்யங்காரும் தனது முன்னால் 09.03.1908இல் ஆஜராகவும் உத்திரவு பிறப்பித்தார்.

09.03.1908 தூத்துக்குடி கூட்டத்திற்குத் தானே தடை. அந்த கூட்டத்தை 08.03.1908 தூத்துக்குடியில் நடத்திட தடை கிடையாதே என்று துணிவுடன் 08.03.1908இல் தூத்துக்குடியில் 4000 பேர் கலந்து கொண்ட கூட்டத்தை நடத்தினார் வ.உ.சி., 09.03.1908இல் கலெக்டர் எல்.எம். விஞ்ச் முன்னால் வ.உ.சி., சிவா, பத்மநாப அய்யங்கார் ஆகியோர் ஆஜரானார்கள். கலெக்டர் 10.03.1908 அன்று மாலையில் மீண்டும் நேரில் வர உத்திரவிட்டார்.

14.03.1908 நெல்லையில் நடைபெற இருந்த விபின் சந்திரபாலர் விடுதலை நாள் கூட்ட மஞ்சள் நோட்டிசை வஉசியும் சிவாவும் திருத்தினார்கள். 09.03.1908 இல் நெல்லை தாமிரபரணி ஆற்றுப் படுக்கையில் மாபெரும் முழக்கம், வஉசி, சிவா வீரப் பேருரை நிகழ்ந்தேறியது. 10.03.1908 எல்.எம். விஞ்ச் சொன்னபடி அவரை நேரில் சந்தித்தனர் வஉசியும் சிவாவும். கலெக்டர் வழக்குத் தொடர முடிவெடுத்தார்.

11.03.1908 திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு எதிரில் வஉசியும், சிவாவும், பத்மநாப அய்யங்காரும் விடுதலை குறித்து வீரமுழக்கமிட்டார்கள். 12.03.1908இல் எல்.எம்.விஞ்ச் வஉசியையும், சிவாவையும் கைது செய்ய உத்திரவிட்டார். கைது செய்யப்பட்ட வஉசி, சிவா நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்படாமல் பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டனர். நெல்லையிலும் தூத்துக்குடியிலும் இதனைக் கண்டித்து பேரெழுச்சி நடைபெற்றது.

வஉசி மீது வழக்கு நடைபெற்றது. திருநெல்வேலி மாவட்ட கூடுதல் குற்றவியல் நீதிமன்றத்தில் 1908ஆம் வருடத்திய முதல் வழக்காக வஉசி மீதும் சிவா மீதும் வழக்கு நடைபெற்றது.

அந்த வழக்கு கூடுதல் மாவட்ட நீதிபதி E.H. வாலேஸ் (Wallace) அவர்களால் செசன்ஸ் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

1908 ஆம் வருஷத்திய வழக்கு எண் இரண்டும் அவ்வாறே வாலேஸ் அவர்களால் மாவட்ட கூடுதல் குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

1908 சூலை 7ஆம் நாள் நீதிபதி ஆர்தர் எப் பின்ஹே (Arthur F.Finhey) சரித்திரப் பிரசித்திப்பெற்ற சுதந்திரப் போராட்ட விடுதலை முழக்கமிட்ட வீரர்களின் வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

வழக்கு எண் 1/1908இல் வ.உ.சி.க்கு ஆயுள் தண்டனையும் நாடு கடத்தலும், அதே வழக்கில் சுப்பிரமணிய சிவாவிற்கு 10 ஆண்டுகள் தண்டனையும் நாடு கடத்தலும், வழக்கு எண் 2/1908 இல் வஉசி மீது தனி வழக்கு அந்த வழக்கில் வஉசிக்கு ஆயுள் தண்டனையும், நாடு கடத்தலும் தண்டனையும் விதிக்கப்பட்டது.

(இவைகள் குறித்து செ.திவான் எழுதிய வஉசியும் ஆஷ் கொலையும் நூலில் விரிவாகக் காணலாம்.)

கோவைச் சிறையிலும் கண்னானூர் சிறையிலும் வாடிய வஉசி உயர்நீதிமன்ற அப்பீலுக்குப்பின் 4 வருடம் 11 மாதங்கள் 12 நாட்கள் சிறைவாசத்திற்குப்பின் விடுதலையானார். சென்னை வாழ்க்கை (19.2.1919), (1919 – 1921) கோவை வாழ்க்கை என வஉசியின் வாழ்க்கை கழிந்தது.

வஉசியின் குடும்பம்

கி.பி.1908–இல் நாட்டு விடுதலைக்காக வ.உ.சி. சிறை செல்வதற்கு முன்னர் இரண்டு பிள்ளைகள் வ.உ.சி. மீனாட்சியம்மை தம்பதியருக்குப் பிறந்தன. சிறை சென்று திரும்பியதும் ஆறு பிள்ளைகள் பிறந்தன. மொத்தம் எட்டுப்பிள்ளைகளில் நால்வர் ஆண்கள், நால்வர் பெண்கள்.

வ.உ.சி.உலகநாதன்

வ.உ.சி.–யின் தலைமகன் இவர். சைவ வேளாளர் மரபுப்படி தனது தந்தையார் பெயரை இவருக்குச் சூட்டினார் வ.உ.சி.

உலகநாதன் சென்னை பெரம்பூர் கலவல ராமானுஜம் செட்டி உயர்நிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். 1919–இல் அண்ணல் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்க அறிவிப்பினை ஏற்று இந்தப் பிள்ளையை பள்ளிக்கு வ.உ.சி. அனுப்பவில்லை. 1920இல் கோயம்புத்தூர் லண்டன் மிஷன் உயர்நிலைப்பள்ளியிலும் 1922–இல் தூத்துக்குடி – சரஸ்வதி ஆங்கிலோ வெர்ணாக்குலர் ஹைஸ்கூலில் (எஸ்.ஏ.வி. உயர்நிலைப்பள்ளி) உலகநாதன் படித்தார்.

சிறு வயதில் மிகவும் திறமையோடும், சொல்லாற்றல் மிக்கவராகவும் திகழ்ந்த இவர் தனது 16 வயதுகளில் திலகர் பல்பொடி, திலகர் சவுக்காரம் (சோப்) போன்ற பொருட்களைத் தாமே செய்து விற்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார். இவருக்குத் திருமணம் செய்து வைக்க எண்ணியபோது வ.உ.சி. வாழ்ந்திருந்த காலத்திலேயே நச்சுக் காய்ச்சலில் 1923 டிசம்பர் 19இல் உலகநாதன் மறைந்தார்.

வ.உ.சி. ஆறுமுகம்

தூத்துக்குடியில் வாழ்ந்த வணிகப் பெருமகன் வ.உ.சி.யின் உற்ற நண்பர் சி.த.ஆறுமுகம் பிள்ளை (தனது சுய சரிதையில் இவரைப்பற்றி வ.உ.சி. குறிப்பிட்டுள்ளார். வ.உ.சி. தனக்குப் பிறந்த இரண்டாவது ஆண் குழந்தைக்கு (1905) தனது நண்பர் ஆறுமுகத்தின் பெயரைச் சூட்டினார்.

தமிழ்நாடு அரசாங்கத்தில் கூட்டுறவு இலாகாவிலும், பின்னர் நாட்டுப்புறச் சீரமைப்பிலும், தொடர்ந்து தொழிலாளர் நலத்துறையிலும் அதிகாரியாக 30 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றார். விளாத்திகுளம் அருகே சின்னூரில் வாழ்ந்து வந்தார். சின்னூர் கிராம கணக்குப்பிள்ளை சண்முகசுந்தரம்பிள்ளையின் ஒரே மகள் செல்லம்மாளை 23.6.1925இல் மணந்தார். இவருக்கு நான்கு ஆண்மக்கள் நான்கு பெண் மக்கள். ஆண்மக்களில் மூத்தவரான சண்முகசுந்தரம் 'நவசக்தி' இதழில் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். மீனாட்சி சுந்தரம் (வ.உ.சி.யின் தமையனார் பெயர்) இளங்கோவன் என்ற பெயரில் 'இளவேனில் இரவுகள்' என்னும் கவிதை நூலை வெளியிட்டார். 'நவஇந்தியா', 'தமிழ்நாடு' இதழ்களிலும் பணியாற்றியுள்ளார். மூன்றாவது

மகன் சங்கரலிங்கம், நான்காவது மகன் உலகநாதன், பெண் மக்கள் சிதம்பர வடிவு, கமலா, செண்பகவல்லி, சீதாலெஷ்மி ஆகியோர் ஆவார்.

வ.உ.சி. ஆறுமுகம் அரசியலில் ஈடுபட்டார். 1967–ல் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார். எஸ்.அழகிரிசாமி (இந்தியக் கம்யூனிஸ்ட்) 33311 வாக்குகள். வ.உ.சி. ஆறுமுகம் பிள்ளை (காங்கிரஸ்) 22885 வாக்குகள். பாரதப் பிரதமர் இந்திரகாந்தி அம்மையார், தூத்துக்குடிக்கு வ.உ.சி. சிலை திறப்பு விழாவின் போது 5.9.1972இல் வருகை புரிந்தார். வ.உ.சி.யின் நினைவுத் தபால் தலைகள் தொகுப்பை வெளியிட்டார். அதனை வ.உ.சி. ஆறுமுகமே பெற்றுக்கொண்டார். அதன் பின்னர் சிறிது காலத்தில் அவர் மறைந்தார். (வ.உ.சி. தனது உயிலின் துவக்கத்திலே குறிப்பிடும் மூத்த மகன் ஆறுமுகம் பிள்ளை இவர் தான்.)

வ.உ.சி. ஞானாம்பிகை என்ற ஞானவல்லி

வ.உ.சி. சிறையிலிருந்து விடுதலையானதற்குப் பின், சென்னை வாழ்க்கையைத் தொடர்ந்து, கோவையில் வாழத் துவங்கினார். (1919–1922)

கோவை மாவட்டத்தில் பேரூர்த்தலத்தில் வாழ்ந்திருந்த போது, அங்கிருந்த ஞானாம்பாள் திருக்கோயிலைப் புதுப்பித்து, விழா எடுத்த ஆண்டில் வ.உ.சி.க்குப் பெண் குழந்தை பிறந்தது. அதனால் தனது மூத்தமகளான இவருக்குத் தனது மாமனார் ஞானதேசிகம் பிள்ளை நினைவாகவும், பேரூர் ஞானம்பாள் திருக்கோயிலின் நினைவாகவும் ஞானாம்பிகை என்று பெயரிட்டார். வ.உ.சி. இவருக்குத் திருமணம் வ.உ.சி. வாழ்ந்திருந்த காலத்திலேயே நடைபெற்றது. தமிழக அரசின் கூட்டுறவுத் துறை அதிகாரியான ச.திருஞானசம்பந்த மூர்த்தியாபிள்ளையின் வாழ்க்கைத் துணைவியான ஞானாம்பாள் என்ற ஞானவல்லி, சங்கரநாராயணன் என்ற மகனையும், மீனாட்சி, சிதம்பரத்தம்மாள் என்ற இரு பெண் மக்களையும் பெற்றார்கள். வ.உ.சி. மறைந்த சில ஆண்டுகளுக்குள் இவரும் மறைந்துவிட்டார்.

வ.உ.சி. வேதவல்லி

வ.உ.சி.யின் இரண்டாவது மகள்; குடும்பத்தில் நான்காவது குழந்தை வேதவல்லி. தென்ஆப்பிரிக்கா நாட்டில் வாழ்ந்து வணிகம் செய்து வந்த பெரியார் தில்லையாடி த. வேதியப்பிள்ளை ஆவார். வ.உ.சி.க்கு செய்த உதவிகளுக்கு நன்றி செலுத்தும் வகையில் அவரது பெயரை இந்த மகளுக்கு வ.உ.சி. சூட்டினார். வ.உ.சி.யின் வழக்கு நடைபெறும் வேளையிலும், அதன் பின்னரும் தொடர்ந்து வ.உ.சி.க்கு உதவிகளை செய்தவர் வேதியப்பிள்ளை. அவரது பெயரைத் தாங்கிய வேதவல்லி அம்மையாருக்கும், வ.உ.சி. வாழ்ந்திருந்த காலத்திலேயே கொழும்பு நகரில் வணிகம் செய்து வந்த பணகுடி நிலக்கிழார் அனவரதம்பிள்ளை என்பருக்கும் திருமணம் நடைபெற்றது. இவருக்கு இராமையா, சிதம்பரம் என்ற இரு புதல்வர்கள். வ.உ.சி. மறைந்த சிறிது காலத்திற்குள் வேதவல்லி அம்மையாரும் மறைந்து விட்டார். இவரின் புதல்வரான சிதம்பரம் தற்போது பாளையங்கோட்டையில் என்.ஜி.ஓ. காலனியில் வசித்து வருகிறார்.

வ.உ.சி. ஆனந்தவல்லி

வ.உ.சி. உயிலில் திருமணம் நடைபெற வேண்டிய நிலையில் குறிப்பிடும் ஆனந்தவல்லி அம்மையார், வ.உ.சி.யின் ஐந்தாவது பிள்ளை. வ.உ.சி.யின் மறைவிற்குப் பின்னரே இவருக்குத் திருமணம் நடைபெற்றது. வ.உ.சி. பிறந்த ஓட்டப்பிடாரத்தைச் சேர்ந்த வள்ளிநாயகம் பிள்ளை அரசு ஊழியராக இருந்தவர். அந்த வேலையிலிருந்து பின்னர் விலகினார். வாணிபம் செய்தார். பெருத்த நஷ்டத்திற்கு ஆளானார். பின் நெய்வேலியில் பெயருக்கு சாதாரண வேலை (கேண்டீன் மேனேஜர்) பார்த்து வந்தார். வ.உ.சி.ஆனந்தவல்லியின் கணவர் ஓட்டப்பிடாரம் வள்ளிநாயகம் பிள்ளை ஆவார். இவருக்கு முத்தையா என்ற மகனும், சேதுலெஷ்மி என்ற மகளும் பிறந்தனர். மகளின் கணவரான நெ.சூரியநாராயணன் தூத்துக்குடி ஹார்வி ஆலையில் குறுக்கெழுத்தாளராகப் பணிபுரிந்தவர். (இந்த ஆலையில்தான் வ.உ.சி. 1908–களில் தனது முதல் வேலை நிறுத்தப் போரைத் துவக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது)

வ.உ.சி. மரகதவல்லி

மதுரையில் ஹார்வி ஆலையில் துணைத்தலைமைக் கணக்கராகப் பணியாற்றிய டி.எம்.சுப்பிரமணிய பிள்ளை முதல் மனைவி மறைந்த நிலையில் இருந்தார். அவருக்கு இரண்டாவது வாழ்க்கைத் துணைவியாக விளங்கிய மங்கைநல்லாள் மரகதவல்லி. வ.உ.சி.தனது உயிலில் இரண்டாவது குறிப்பிடும் சௌபாக்கியவதி இவர்தான். வ.உ.சி. மறைந்ததற்குப் பின்னரே இவருக்குத் திருமணம் நடைபெற்றது. சிதம்பரம், மீனாட்சிசுந்தரம், மனகாவலப் பெருமாள் என்ற மூன்று ஆண்மக்களைப் பெற்ற இந்த அம்மையார் இளவயதிலேயே மறைந்துவிட்டார்.

வ.உ.சி. சுப்பிரமணியம்

'இந்திய சுதந்திரப் போரில் தீவிரவாதம்; மணியாச்சி கொலை' எனும் எனது எம்ஃபில் ஆய்வேட்டுப் பணிக்கான கள ஆய்வின்போது சென்னையில் 30.07.1991இல் திரு.வ.உ.சி.சுப்பிரமணியன் அவர்களை நேரில் சந்தித்தேன். வ.உ.சி. தேசத்தின் சுதந்திரத்திற்காகச் சிறை சென்று கோவைச் சிறையில் வாடியபோது, அவரைச் சிறையில் சென்று சந்திக்கவும், உதவிகள் புரிந்திடவும், நீதிமன்றத்தில் வாதாடவும் செய்தவர் கோவை சைவப் பெரியார் சி.கே.சுப்பிரமணிய முதலியார், அந்த நன்றியின், அடையாளமாக அவரது பெயரை வ.உ.சி. தனது ஏழாவது பிள்ளைக்குச் சூட்டினார். அவரே வ.உ.சி.சுப்பிரமணியம் ஆவார்.

இவர் எழுத்துத்துறையில் மிகுந்த ஆர்வங்கொண்டவர். தென்காசி டி.எஸ்.சொக்கலிங்கம் அவர்கள் நடத்திய 'தினசரி' இதழிலும், ஆம்பூர் என்.சிவராமன் ஆசிரியராகப் பணியாற்றிய 'தினமணி' இதழிலும், அதிக காலம் பணியாற்றியவர். வ.உ.சி.யின் வி.ஓ.சி. கண்ட பாரதி, 'சுயசரிதை' ஆகிய நூல்களைப் பதிப்பித்தவர். 1942–இல் நேதாஜியின் சுதந்திர இயக்கத்தில் கலந்து கொண்டு நாட்டிற்காகச் சிறை சென்றவர். அமெரிக்க அரசாங்கத் தகவல் நிலையத்தில் பத்திரிக்கைப் பணித் தமிழ்ப்பிரிவுத் தலைவராக இருந்தவர். இவருக்கு நான்கு புதல்விகளும், இரு புதல்வர்களும் இருக்கிறார்கள். பழகுதற்கும், போற்றுதலுக்குமுரிய பண்பினைப் பெற்ற வ.உ.சி.சுப்பிரமணியம் அவர்கள் சில ஆண்டுகளுக்கு மன் மறைந்தார்கள்.

வ.உ.சி. வாலேஸ்வரன்

தேசபக்தச் செம்மல் வஉசியின் கடைசிப்பிள்ளை, வாலேஸ்வரன், தமிழக அரசின் தொழிலாளர் நலத்துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார் என்ற தகவல் எளியேனுக்குத் தெரிய வந்தது. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யின் புகழ் பாடுவதில் ஆர்வம் கொண்டு, அவரது எழுத்துக்களைத் தேடிக் கண்டுபிடித்து பதிப்பித்து நூல்களாக அடியேன் வெளிக் கொண்டு வந்த நேரம் அது. கன்னடத்தின் போர்வாள் ஹைதர் அலியும், திப்புவும், விருபாட்சி கோபால் நாயக்கரும், வீரன் ஊமைத்துரையும், வீரமங்கை வேலு நாச்சியாரும், வெள்ளையரை எதிர்த்துக் களம் கண்ட பூமி திண்டுக்கல். இங்கு வாழ்ந்து வரும் அய்யா அவர்களைக் காண கி.பி.1996இன் முற்பகுதியில் அங்கு சென்றேன்.

திண்டுக்கல் 1/12பி, கோ ஆப்பிரேட்டிவ் காலனியில் வாலேஸ்வரன் வசித்து வந்தார்கள். அப்போதே அடியேனுக்கு உடல் நலக்குறைவுதான். கையிலே காசு இருப்பும் அதை விடக்குறைவு; கோ ஆப்பிரேட்டிவ் காலனிக்குச் செல்ல ஆட்டோ எடுத்திட்டால் அதிகம் செலவாகுமே என்று திரும்ப நெல்லைக்குச் செல்ல வேண்டுமே என்று எண்ணி சைக்கிள் ரிக்ஷாவில் பயணித்தேன். அய்யா அவர்களைச் சந்தித்தேன். மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள். அய்யா அவர்களின் துணைவியார் அன்னையார் அலமேலு அவர்கள், அடியேனுக்கு வெகு தொலைவில் இருந்து வந்திருக்கிறீர்கள், நல்ல வெயில் கொஞ்சம் மோர் சாப்பிடுங்கள் என்று தந்தார்கள்.

முதல் சந்திப்பு 1996இல் நாள் மாதம் மறந்து விட்டது. அன்னையார் கேட்டார்கள். உங்களுக்குப் பிள்ளைகள்.... ஆமாம் அம்மா நஜாத், சுகைனா என்ற இரு பெண் பிள்ளைகள் ஒன்பது, ஏழு வயது நிரம்பியவர்கள் என்றேன். வீட்டில் 'தயாரித்த சீடை' இருக்கிறது கொண்டு போய் பிள்ளைகளுக்கு கொடுக்கிறீர்களா? என்று பாசத்தோடு கேட்டார்கள்.

உலகம் புகழும் வ.உ.சி.யின் மருமகளின் கரங்களினால் தயாரிக்கப்பட்ட தின் பண்டத்தை எனது பிள்ளைகளுக்கு கொண்டு செல்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன் அம்மா என்றேன்.

ஒரு சிறிய பார்சலில் அதனை நன்றாகக் கட்டித் தந்தார்கள். கட்டித் தங்கம் கிடைத்ததுபோல பாதுகாப்பாக எடுத்துக் கொண்டு பஸ்ஸில் பயணித்தேன். பாளையங்கோட்டைக்கு வந்தேன், பிள்ளைகளுடனும், துணைவியார் டாக்டர் திவானி ஜஹானராவிடமும் அய்யா அவர்களைச் சந்தித்த நிகழ்வுகளை மனம் மகிழ்ந்து சொன்னேன்.

அன்று தொடங்கிய உறவு அய்யா அவர்களின் இறுதி வரை அணு பிசகாமல் நீடித்து நிலைத்து நின்று நிம்மதியைத் தந்து கொண்டிருந்தது.



வ.உ.சி. கோவைச் சிறையில் கைதி எண் 1541

வந்த கடிதங்கள்

வ.உ.சி. வாலேஸ்வரன் அவர்களை திண்டுக்கலில் சந்தித்து விட்டு வந்த பின் அவர்களுக்கு உடனே மடல் எழுதினேன். அதற்கு அவர்கள் தந்த பதில் மடல் இதோ:

திண்டுக்கல்
4.6.96

பேரன்புடைய பெருந்தகையீர்,

வணக்கம். நலம், நலமே விழைவாதாகுக.

உங்கள் அன்பான கடிதம் கிடைத்தது மகிழ்ச்சி அடைகிறேன்.

உங்களுக்கு உதவ ஒருவாய்ப்பு கிடைத்தமைக்கு மகிழ்கிறேன். இத்துடன் 'பாடல் திறட்டை' கூரியரில் அனுப்புகிறேன். தபாலில் அனுப்பினால் அஞ்சல் முத்திரையின் நூலில் தாட்கள் நொறுங்கி விடலாம்.

மதிப்பிற்குரிய எனது தந்தையவர்களின் வரலாற்றினை வெளிக் கொண்டு வரும் உங்கள் முயற்சி வெற்றிபெற உளமாற வாழ்த்துகிறேன்.

அன்பு மறவா
சி.வாலேஸ்

அதன் பின் 17.6.1996 இல் அய்யா அவர்கள் அடியேனுக்கு எழுதிய கடிதம் இதோ:

பேரன்புடையீர், வணக்கம். நலமே விளைவதாக. உங்கள் 14.06.1996 தேதிய கார்டு இன்று கிடைத்தது. நீங்கள் அன்புடன் அனுப்பிய "வஉசியும் பெரியாரும்" நூலின் இரு பிரதிகள் கிடைக்கப் பெற்றேன். நன்றி மகிழ்ச்சி.

4.6.96 ல் கூரியர் மூலம் "வஉசி பாடற்றிரட்டு" என்னும் நூலை உங்களுக்கு அனுப்பினேனே! கிடைத்ததா என்று உடன் எழுதுங்கள். தயவு செய்து உடன் எழுதுங்கள். ஏனெனில் அந்நூல் அபூர்வமானது.

அன்பு மறவா
சி.வாலேஸ்

அதன் பின் 29.6.1996 இல் அய்யா எழுதிய கடிதம்

தன்னுடைய வாழ்க்கையையே மதிப்பிற்குரிய எனது தந்தையவர்களின் வரலாற்றினையும் நூல்களையும் வெளியிடவே செலவழிக்கும் பெருந்தகையீர்,

வணக்கம். நல்ல நேரத்தில் நீங்கள் என் வீட்டிற்கு வருகை தந்ததால் நான் இரு நாட்களில் தங்கள் இல்லம் வந்து அருமைச் சகோதரியையும், அன்புச் செல்வங்களையும் சந்தித்து உங்களுடன் உரையாடி மகிழும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றதற்கு மகிழ்ச்சி அடைகிறேன்.

எனது தந்தையவர்கள் மீது, தந்தையவர்களுக்கு பல புலவர்கள் எழுதிய பாடல்களை தூத்துக்குடி வேலாயுதம் பிரிண்டிங் பிரஸ் உரிமையாளர் திரு.பி.வேலாயுதம் பிள்ளையவர்கள் 1935ல் வெளியிட்ட 4 அணா விலையிடப்பட்ட நூல் ஒன்று என்னிடமுள்ளது. அந்நூலின் பிரதி உங்களிடம் இல்லையெனில் எனக்கு எழுதுங்கள். அந்நூலை கூரியர் சர்வீஸில் அனுப்பி வைக்கிறேன்.

உத்தமபாளையம் சமீபமுள்ள கோம்பை அஹமத் மீரா சாஹிப் அவர்கள் என்னிடம் அன்பளிப்பாக கொடுத்த தபால் கார்டை யாரோ கண்காட்சி என்று வாங்கிச் சென்று விட்டனர் போலும், கிடைக்கவில்லை.

உங்களுக்கு என் உளம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பு மறவா
சி.வாலேஸ்

20.8.98இல் அய்யா எழுதிய கடிதம்

உங்கள் அன்பான கடிதம் கிடைத்தது. மகிழ்வடைகிறேன். நூற்கள் எழுதும் உங்கள் முயற்சி வெற்றிபெற உளமார வாழ்த்துகிறேன்.

என்னையும், நினைவில் கொண்டு அவ்வப்பொழுது நீங்கள் எழுதும் நூற்கள் வெளிவரும் பொழுது எனக்கும் அனுப்புவது எனக்கு அளவற்ற மகிழ்ச்சியாக உள்ளது.

நீங்கள் கேட்ட விபரங்களைக் கீழே கொடுத்துள்ளேன்.

நாட்டு விடுதலைக்காகப் போராடிய 11 தலைவர்களது குடும்பங்களுக்கு தலா ரூ. 5 லட்சம் தமிழ்நாடு அரசு, அவர்களை நூற்களை அரசுடமை ஆக்கி அதற்கு ஈட்டுத் தொகையாக வழங்குகிறது. இந்த 5 லட்சத்தில் அந்த தலைவர்களது ஆண், பெண் வாரிசுகள் அனைவருக்கும் பங்கு உண்டு. தொகையைத் தனித் தனியாகக் கணக்கிட்டு சென்னையில் இயங்கும் தமிழ் வளர்ச்சி இயக்குனர் தனித் தனியாக அவர்களிடமே நேரிடையாக கொடுப்பதற்கு தீர்மானித்தனர்.

சுதந்திரத் தினத்தன்று நாட்டுக் கொடியேற்றும் கோட்டையில் இடமின்மை காரணமாக குடும்பத்திற்கு ஒருவரை நேரடி வாரிசு, உள்ளதிற்குள் சீனியர் வாரிசுகளில் ஒருவரை மட்டும் கோட்டைக்கு அழைப்பித்து அங்கு வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொன்னாடை போர்த்தி செக்கை கவரினுள் வைத்து வழங்கினார்கள். நான் நேரடி வாரிசு என்பதால் அவ்வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ரூபாய் 5 லட்சத்தில் ஒரு பங்கு எனக்கு வழங்கப்பட்டது. மற்ற வாரிசுகளுக்கு இயக்குனர் அலுவலகத்தில் காசோலை வழங்கப்படும். இந்த தகவல் போதுமென எண்ணுகிறேன். பல அறிஞர்களின் வாரிசுகளை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

உங்கள் நூலை எதிர் நோக்குகிறேன்.

உங்கள் வஉசியின் நூல்கள் வெளியிடும் முயற்சி விரைவில் வெற்றிபெற இறைவன் துணை செய்ய அவனை வணங்குகிறேன்.

சமயம் வரும்போது வருகை தாருங்கள். என் தொலைபேசி எண் 0451-420471.

அன்பு மறவா
சி.வாலேஸ்

6.10.1999இல் அய்யா எழுதிய கடிதம்

அன்புமிகு வரலாற்று ஆய்வாளர் உயர்திரு. செ.திவான் அவர்களுக்கு

நீங்கள் அன்புடன் அனுப்பிய “வஉசியும் பரலி சு.நெல்லையப்பரும்“ நூலை இன்று தான் படித்தேன். எனக்கு 17.9.99இல் கண் புரை அறுவை சிகிச்சை செய்துள்ள படியால் படிக்க இயலவில்லை, இது வரை.

மிக அருமையாக ஆதாரங்களுடன் சிறப்பாகத் தொகுத்தளித்துள்ளீர்கள். உங்களுக்கும் இந்நூலை வெளியிட்ட உயர்திரு. இல.இராமகிருஷ்ணன் அவர்களுக்கும் எனது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உண்மைத் தியாகி அமரர் பரலி.சு.நெல்லையப்பருடன் சில நாள் தங்கி அவரது அன்பான உபசரிப்பையும் குழந்தை மனதுடன் கூடிய பேச்சுக்களையும் நான் பெறும் பேறு பெற்றவன் என்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அவர் அப்பொழுது சிந்தாதிரிப் பேட்டையில் வசித்து வந்தார்.

அவரது "லோகோபகாரியை"யும் சிறுவனாக நான் இருந்தபொழுது படிக்கும் நல்வாய்ப்பினையும் பெற்றிருக்கிறேன்.

உங்கள் முயற்சி மேன் மேலும் வெற்றி பெறவும். நீங்கள் நல்ல உடல் நலத்துடன் நீடுழி வாழவும் உளமாற வாழ்த்துகிறேன்.

அன்பு மறவா
சி.வாலேஸ்

25.10.1999இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அன்புமிகு, திறமைமிகு ஆசிரியர் திரு.செ.திவான் அவர்களுக்கு,

வணக்கம், நலம், நலமே விளைவதாகுக!

உங்கள் அன்பான கடிதமும் அருமையான நூலாகிய "கட்டபொம்மனின் கடைசி நாட்கள்" நூல் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

நூல் அழகாக, ஏராளமான ஆதாரங்களுடன் எழுதியுள்ளீர்கள். பாராட்டுக்கள்.

உங்கள் முயற்சி மேலும் சிறக்க என் உளம் நிறைந்த வாழ்த்துக்கள்.

தயவு செய்து பின்புறமுள்ளதையும் பாருங்கள்.

அன்பு மறவா
சி.வாலேஸ்

அப்ரண்டீஸ் பணி வாய்ப்புக்கு முதலில் சென்னையில் உள்ள தரமணியில் உள்ள எம்ளாய்மென்ட் ஆபீசில் பதிய வேண்டும். தெற்கு பிராந்தியத்திற்கான பகுதியில் பதியவும். பிறகு அப்ரண்டீஸ் தேவை ஏற்படும்பொழுது டிரான்ஸ்போர்ட் கார்பரேஷன் அந்த அலுவலகத்திற்குக் கடிதம் எழுதும். அங்கிருந்து ஸ்பான்சர் செய்யப்பட்டவர்களை இன்டர்வியூ செய்து பயிற்சிக்கு எடுப்பார்கள்.

நேரிடையாக யாரையும் நியமிக்க இயலாது.

இத்தேர்வுகளுக்கும் அரசியல்வாதிகள் சிபாரிசு இருந்தால் மட்டுமே இயலும். மகாத்மா காந்தி உயிருடன் இருந்து கடிதம் கொடுத்தாலும் நடக்காதாம். அரசியல்வாதிக்கு கப்பம் கட்ட வேண்டுமாம்.

இத்துடன் பயோடேட்டாவை திரும்ப அனுப்பியுள்ளேன். இன்டர்நெட் கூரியரின் கட்டணம் ரூ.3 மட்டுமே ரூ.10/ இல்லை.

அன்பு மறவா
சி.வாலேஸ்

19.11.1999 இல் அய்யா எழுதிய கடிதம்

பேரன்புடையீர்,

வணக்கம் பல, நலம் நலமே விழைவதாகுக!

நீங்கள் அன்புடன் அனுப்பிய எனது தந்தையார் அவர்களின் பாடல்கள் நூல் பிரதிகள் கிடைக்கப்பெற்றேன். மிக்க மகிழ்ச்சி. நன்றி. 4 அல்லது 5 பிரதிகள் அனுப்ப வேண்டாம். 2 பிரதிகளே போதுமானது.

இந்நூலை இலவச வெளியீட்டாக வெளியிட்ட வஉசி இலக்கிய பேரவையினருக்கும் என் நன்றி உரித்தாகுக.

உங்கள் முயற்சி மேலும் மேலும் வெற்றி பெற இறைவன் அருள் செய்வானாக!

“வஉசி கண்ட பாரதி” நூலின் பிரதி எங்கு வாங்குவது என்று பிரசுரித்தவரின் முகவரியையும், விலையையும் தயவு செய்து தெரிவியுங்கள்.

அன்பு மறவா
சி.வாலேஸ்

6.9.2000 இல் அய்யா எழுதிய கடிதம்

மதிப்பிற்குரிய வரலாற்று ஆய்வாளர் உயர்திரு. செ.திவான் அவர்களுக்கு,

வணக்கம், நலம் நலமே விழைவதாகுக!

எனது தந்தையாரின் மற்றொரு நூலாகிய "விஓசி கண்ட பாரதி" என்ற நூலையும் பதிப்பித்தமைக்கு மகிழ்ச்சியடைகிறேன்.

அந்நூலின் பல பிரதிகளை எனக்கு அனுப்பி உதவியதற்கு நன்றி. இனி நீங்கள் வெளியிடும் நூற்களில் மூன்று பிரதிகளுக்கு மேல் எனக்கு தயவு செய்து அனுப்பி வீண் இழப்பிற்குள்ளாகாதிருக்க கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாம் வல்ல ஆண்டவன் உங்களுக்கு இன்னும் பல நல் நூற்களை வெளியிட உடல் நலத்தையும் வாய்ப்பையும், கொடுத்திட அவனை வணங்குகிறேன்.

அன்பு மிகு
சி.வாலேஸ்

11.11.2000 இல் அய்யா எழுதிய கடிதம்

பேரன்புடைய பெருந்தகையீர்,

வணக்கம். நலம், நலமே விரும்புகிறேன்.

தாங்கள் அன்புடன் அனுப்பிய மிகச்சிறந்த நூலாகிய "வ.உ.சி.யின் நூற்கோவை" உரிய காலத்தில் கிடைக்கப் பெற்று அளவற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

உங்கள் முயற்சி மிக உயர்வானது. உளமாறப் பாராட்டுகிறேன்.

இன்னும் இதுபோல் பல நல்ல நூற்களை நீங்கள் பதிப்பித்திட உங்களுக்கு உடல் நலத்தையும், பொருள் வளத்தையும், நீண்ட ஆயுளையும் கொடுத்திட எல்லாம் வல்ல இறைவனை வணங்குகிறேன்.

பி.கு. அட்டையிலுள்ள என் தந்தையவர்களின் திருஉருவப் படம் அழகாகவும், துடிப்பாகவும் சிறப்பாகவும் உள்ளது மன மகிழ்வைத் தருகிறது.

அன்பு மறவா
சி.வாலேஸ்

20.11.2000 இல் அய்யா எழுதிய கடிதம்

பேரன்புடைய பெருந்தகையீர்,

வணக்கம். பல பல. நலம், நலமே விளைவதாகுக!

நீங்கள் அன்புடன் அனுப்பிய "வஉசியின் வள்ளியம்மை சரித்திரம்'' நூல் கிடைக்கப்பெற்று அளவற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அதுவும் எனது தந்தையாரின் நினைவு நாளன்று வெளியிட்டமை எனக்கு இரட்டை மகிழ்ச்சியைத் தருகிறது.

"வாழ்க்கை நிகழ்ச்சிகள்" மற்றும் "எண்ண அலைகள்"-ல் எனது தந்தையாரின் வரலாற்றையே கூறிவிட்ட உங்கள் திறமையைப் பாராட்டுகிறேன்.

வாழ்க நலமுடன்! வளர்க உங்கள் முயற்சி!! பெறுக வெற்றியெல்லாம் உங்கள் உழைப்பைப் பாராட்டுகிறேன்; பார்த்துப் புளகாங்கிதம் அடைகிறேன். வாழ்த்துக்களுடன்

அன்புமிகு
சி.வாலேஸ்

3.3.2001 இல் அய்யா எழுதிய கடிதம்

பேரன்புடையீர், வணக்கம். நலம், நீங்கள் நலம் பெற்றதறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பொழுது மணியார்டர் பாரத்தில் கீழ் பகுதியை முகவரிதாரரிடம் கொடுப்பதில்லை போலும். நீங்கள் அன்புடன் அனுப்பிய "வஉசியும் தொல்காப்பியமும்" நூல் பிரதிகளும் இப்பொழுது அனுப்பியதும் கிடைக்கப் பெற்றேன்.

நீங்கள் நீண்ட நாட்கள் வாழ்ந்து தமிழன்னைக்குத் தொண்டு செய்திட அருள் செய்யுமாறு இறைவனை வணங்குகிறேன்.

அன்பு மறவா
சி.வாலேஸ்

29.11.2001 இல் அய்யா எழுதிய கடிதம்

பேரன்புடைய மதிப்பிற்குரிய உயர்திரு.செ.திவான் அவர்களுக்கு,

வணக்கம். நலம், நலமே விளைவதாகுக!

நீங்கள் அன்புடன் அனுப்பிய "வஉசியும் திருக்குறளும்" என்னும் நூலின் நான்கு பிரதிகளையும் பெற்றுக்கொண்டேன். மிக்க நன்றி, மகிழச்சி.

எனது தந்தையார் மதிப்பிற்குரிய வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்களைப் பற்றிய வரலாற்றினைக் கூறுவதிலும் அவர் தம் நூற்களைப் பதிப்பித்தலில் நீங்கள் காட்டும் அக்கறையினையும், ஆர்வத்தையும் மிகப் பாராட்டுகிறேன். உங்கள் முயற்சி மென்மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

உங்களுக்கு - வரலாற்றாசிரியராகிய உங்களுக்கு - எனது தந்தையார் அவர்களின் திருவுருவப் படத்தை தாங்கிய நினைவுப் பரிசினை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

நீங்கள் நல்ல உடல் நலத்துடன் நீண்ட நாட்கள் வாழ்ந்திட அருள் செய்ய ஆண்டவனை வணங்குகிறேன்.

அன்புள்ள
சி.வாலேஸ்

21.5.2002 இல் அய்யா எழுதிய கடிதம்

அன்புமிகு ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். நலம், நலமே விழைகிறேன்.

கீழ்கண்ட எனது தந்தையார் அவர்களின் நூல்களை - நீங்கள் பதிப்பித்தவை - எனது மகளுக்கு அனுப்பிவிட்டு - (கூரியரில்) - தரவேண்டிய பணத்தை எனக்குத் தெரிவிக்க கேட்டுக்கொள்கிறேன்.

1) துன்பத்தின் கற்பனை

2) அழகும் ஆரோக்கியமும்

3) தனிப்பாடற்றிரட்டு

நீங்கள் நலமுடன் வாழ்ந்திட வாழ்த்தும்,

எனது மருமகன் முகவரி:

N.S.ராஜா,

311, ஜோசுவா தெரு, CSI ஸ்கூல் எதிரில்,

நாகர்கோவில்-1

அன்பு மறவா
சி.வாலேஸ்

27.5.2002 இல் அய்யா எழுதிய கடிதம்

பெரு மதிப்பிற்குரிய வரலாற்று ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம்.

நீங்கள் அன்புடனும் பெருந்தன்மையுடனும் அனுப்பிய நூல்கள் எனது மருமகன் அவர்களுக்கு கிடைத்துவிட்டன. நன்றி! மகிழ்ச்சி

நீங்கள் நூல் வெளியீட்டு விழா நடத்துவது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அதில் நான் கலந்து கொள்கிறேன்.

அவ்விழாவில் நூல்கள் விற்பனையாளர்கள் அல்லது நூல்கள் வெளியீட்டாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அது உங்களுக்கு உதவியாக இருக்கும் என்பது என் எண்ணம்.

என்னைவிட இத்துறையில் அதிக அனுபவம் உள்ள நீங்கள் எனது வேண்டுகோளையும் கருத்திற்கொண்டு எது உசிதம் எனப்படுகிறதோ அவ்வாறு செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

குடும்பத்தினர் யாவரும் நலமாக இருக்க இறைவனை வணங்குகிறேன்.

நீங்கள் நல்ல உடல் நலத்துடன் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து தமிழன்னைக்குத் தொண்டு செய்ய அருளுமாறு ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

அன்புள்ள
சி.வாலேஸ்

6.6.2002 இல் அய்யா எழுதிய கடிதம்

பேரன்புடையீர், வணக்கம்.

நலமே விளைவதாகுக!

நீங்கள் அன்புடன் அனுப்பிய நூல்களைப் பெற்றுக்கொண்டு என் அன்பு மகள் தங்களுக்கு ரூ.100/-அனுப்புமாறு கூறியுள்ளாள் இத்துடன் ரூ.100/- அனுப்பியுள்ளேன்.

எனது முந்தைய இன்லண்ட் லட்டர் கிடைத்திருக்கலாம். நீங்கள் நலமுடன் நீடு வாழ வாழ்த்தும்,

அன்பு மறவா
சி.வாலேஸ்

29.11.2002 இல் அய்யா எழுதிய கடிதம்

மதிப்பிற்குரிய வரலாற்று ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். நலமே விரும்புகிறேன்.

நான் கேட்ட நண்பரின் முகவரி எழுதவில்லையே!

உங்கள் 2 கார்டுகளும் கிடைத்தன. முதலில் இப்படி ஒரு உயில்சாஸனம் இருப்பதே பத்து நாட்களுக்கு முன் அதன் நகல் கிடைத்த பின் தான் தெரியும். எனது தந்தையவர்கள் புகழுடம்பு எய்தும் பொழுது எனக்கு வயது 8 மட்டுமே. விபரம் தெரியாது.

இனி உங்கள் கேள்விகளுக்கு பதில்

1) எனக்கு எதுவுமே தெரியாது

2) பாகப் பிரிவினை நகல் இல்லை

3) நானும் எனது சின்ன அண்ணனும் படித்துக் கொண்டிருந்ததால் எனது தாயார் அவர்கள் இறக்கும் வரை தூத்துக்குடியில் தான் இருந்தார்கள்.

4) வீடு புதுப்பிக்கப்பட வில்லை. பிறகு தமிழ்நாடு அரசு அதை (விலைக்கு) வாங்கி நினைவகம் கட்டியுள்ளது. இப்பொழுது நூலகம் உள்ளது.

5) வாங்கியது யார் என்று தெரியாது. எங்கள் வசம் இல்லை.

6) சட்டப்புத்தகம் பற்றி எனக்குத் தெரியாது.

7) கடன் விபரமும் தெரியாது. அடைக்கப்பட்டிருக்கலாம்.

8) எனது தாயார் தான் இருப்பதை வைத்து எனது சகோதரிகளின் திருமணத்தை நடத்தினார்.

9) விபரம் தெரியாது.

வாழ்த்துக்களுடன்

அன்புள்ள
சி.வாலேஸ்

திண்டுக்கலில் கோஆப்ரேடிவ் 14, காலனியில் குடியிருந்து வந்த அய்யா அவர்கள் தற்போது 13, கிருஷ்ணாராவ் 2வது தெரு திண்டுக்கல்லுக்கு குடிபெயர்ந்தார்கள். அப்போது அவர்களது தொலைபேசி எண் 0451-2420471. அந்த முகவரியிலிருந்து 11.03.2003இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அன்புமிகு பண்புமிகு வரலாற்று ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். நலமே விளைவதாகுக! நீங்கள் நீண்ட நாட்கள் நலமுடன் வாழ்ந்து தமிழன்னைக்கு தொண்டு செய்ய அருள இறைவனை வேண்டுகிறேன்.

நீங்கள் அன்புடன் அனுப்பிய “வஉசியின் உயில்” நாலு பிரதிகளும், சிறந்த எழுத்தாளர் உயர்திரு.வல்லிக்கண்ணன் அவர்களின் கடித நகலும் கிடைக்கப்பெற்று அளவற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

வாழ்த்துக்களுடன்

அன்புள்ள
சி.வாலேஸ்

1.4.2003 இல் அய்யா எழுதிய கடிதம்

மதிப்பிற்குரிய வரலாற்று ஆசிரியர் உயர்திரு. செ.திவான் அவர்களுக்கு,

வணக்கம். நலம், நலமே விளைவதாகுக!

நீங்கள் அன்புடன் அனுப்பிய "வஉசியின் உயில்" பிரதிகளும் பல பத்திரிக்கைகளில் வந்த விமர்சனங்களும் கிடைக்கப்பெற்று மிக்க மகிழ்ச்சியடைகிறேன். விமர்சனங்களில் உங்கள் திறமையைப் புகழ்ந்திருப்பது பொருத்தமானது. எனக்கு ஆனந்தத்தை அளிக்கிறது.

"வஉசியின் உயில்" போதுமான பிரதிகள் எனக்குக் கிடைத்து விட்டன. நன்றி. "சிவஞான போத உரை" எனது தந்தையினதை ஏற்கனவே வஉசி நினைவுச் சங்கம் (தூத்துக்குடி வஉசி கல்லூரியில் உள்ளது) சமீபத்தில் வெளியிட்டுள்ளது. எனது பிரதியை நண்பர் ஒருவர் பெற்றுச் சென்று விட்டார். யோசித்து முடிவெடுங்கள்.

அன்புள்ள
சி.வாலேஸ்

2004 ஆம் ஆண்டைய கால கட்டத்தில் அய்யா அவர்கள் மதுரைக்கு குடிபெயர்ந்தார்கள். 4/152, சென்ட்ரல் பேங்க் காலனி நாகமலை, மதுரை 19 என்ற முகவரியில் வாழ்ந்து வந்தார்கள். அப்போது அவர்களது தொலைபேசி எண் 2456632 அங்கிருந்து 21.7.2004இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அன்புமிகு வரலாற்று ஆசிரியர் உயர்திரு. செ.திவான் M.A., M.Phil., அவர்களுக்கு,

வணக்கம். நலம், நீங்கள் எல்லோரும் நலமாக இருக்க இறைவனை வணங்குகிறேன்.

நீங்கள் அன்புடன் அனுப்பிய மூன்று புஸ்தகங்களும் கிடைக்கப் பெற்றேன். நன்றி. அவற்றில் ஒன்றில் மதிப்பிற்குரிய ஜனாதிபதி அவர்களின் கடிதமும் கண்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உங்களுக்கு இறைவன் நல்ல உடல் நலத்தையும், நீண்ட ஆயுளையும் கொடுக்க இறைவனை வணங்குகிறேன். நீங்கள் கண்டிப்பாக செப்டம்பரில் எனது தந்தையவர்களின் நூல் ஒன்று எழுதுவீர்கள்.

வாழ்த்துக்களுடன்,

அன்புள்ள
சி.வாலேஸ்

11.1.2005 இல் அய்யா எழுதிய கடிதம்

அன்புமிகு பதிப்பாசிரியர் அவர்களுக்கு,

புத்தாண்டு வாழ்த்துக்கள்

இத்துடன் எனது இளைய மகன் செல்வன் சி.வா.செல்வராமனது திருமண அழைப்பிதழ் அனுப்பியுள்ளேன்.

நேரில் அழைத்ததாகக் கருதி திருமணத்தில் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

உங்களன்புள்ள
சி.வாலேஸ்

3.3.2005 இல் அய்யா எழுதிய கடிதம்

அன்புமிகு வரலாற்று ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். நலம், நலமே விளைவதாகுக!

நீங்கள் கேரளாவில் சிசிக்சை பெற்ற பின் இறைவன் அருளால் பூரண நலத்துடன் இருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

நீங்கள் அன்புடன் அனுப்பிய திருமண வாழ்த்தும், திருமணப் பரிசும் கிடைக்கப்பெற்றேன்.

மிக்க மகிழ்ச்சி.

உங்கள் சேவை தமிழக மக்களுக்குக் கிடைக்க, உங்களுக்கு நல்ல உடல் நலத்தைக் கொடுத்திட எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

அன்பு மறவா
சிவாலேஸ்

12.12.2005 இல் அய்யா எழுதிய கடிதம்

அன்புள்ள நண்பர் உயர்திரு. திவான் அவர்களுக்கு,

நலம், நலமே விரும்புகிறேன்.

நீங்கள் அன்புடன் அனுப்பிய “திராவிட இயக்கம்“ நூல் இன்று கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. நன்றி

நமது நண்பர் திரு.குட்டி எவ்வாறு இருக்கிறார்?

இந்நூல் உங்களது 59வது நூல் என அறிந்து ஆனந்தம் அடைகிறேன். இறைவன் உங்களுக்கு ஆரோக்கியம் கொடுத்து இன்னும் பல நூல்களை எழுத வாய்ப்பு கொடுக்க அவனை வணங்குகிறேன். உங்கள் அனைவருக்கும் என் அன்பான புத்தாண்டு வாழ்த்துக்கள்.

அன்புள்ள
சி.வாலேஸ்

21.12.2005 இல் அய்யா எழுதிய கடிதம்

அன்புள்ள சகோதரர் அவர்களுக்கு,

நலம், நலமே விரும்புகிறேன்.

2006 புத்தாண்டு நம் அனைவருக்கும் எல்லா நன்மைகளையும் வழங்கிட ஆண்டவனை வணங்குகிறேன்.

இப்புத்தாண்டில் நீங்கள் இன்னும் பல நூல்கள் எழுதிட நல்ல ஆரோக்கியத்தைத் தரவும் இறைவனை வணங்குகிறேன்.

அன்புள்ள
சி.வாலேஸ்

17.1.2006 இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அன்புடையீர்,

வணக்கம், நலம், நலமே விழைவதாகுக!

நீங்கள் மதிப்பிற்குரிய எனது தந்தையாரின் படைப்புகள் பற்றி வானொலியில் ஆற்றிய உரையுடன் கூடிய சங்கொலி பொங்கல் சிறப்பிதழ் கிடைக்கப்பெற்றேன். நன்றி. மகிழ்ச்சி.

வ.உ.சி. புகழ் பரப்பும் உண்மைத் தொண்டர் நீங்கள் ஆரோக்கியத்துடன் நீண்ட நாள் வாழ இறைவனை வணங்குகிறேன். நண்பர் குட்டியவர்களை விசாரித்ததாகக் கூறுங்கள்.

அன்புள்ள
சி.வாலேஸ்

23.9.2006 இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அன்புமிகு சிறந்த வரலாற்று ஆசிரியர் உயர்திரு. செ.திவான் அவர்களுக்கு,

நலம், நலம் விரும்புகின்றேன். நீங்கள் அனுப்பிய இரு நூல்களும் இன்று கிடைத்தது அளவற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

சுதந்திரம் அடைவதில் இந்தியர்களிடையே ஜாதி, மத வேறுபாடு இருந்ததில்லை. எனது தந்தையின் கப்பல் கம்பெனிக்கு நாகப்பட்டினம் பக்கீர் முகம்மது இராவுத்தர் அல்லவா 25 சதவீதம் பங்குகளை வாங்கினார். அவரது நற்பணியை வணங்குகிறேன். செம்மலர் வ.உ.சி. சிறப்பிதழ் உண்மையிலேயே சிறப்பான இதழ்தான். வ.உ.சி. சிலை வைக்க ம.பொ.சி. எவ்வளவு சிரமப்பட்டுள்ளார்கள் பார்த்தீர்களா? அந்த இதழை அனுப்பியதற்கு உங்களுக்கு என் அன்பான நன்றி. உடல் நலத்துடன் வாழ வாழ்த்துகிறேன். அன்பன்

அன்பன்
சி.வாலேஸ்

6.12.2006இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அன்புள்ள வரலாற்று ஆய்வாளர் உயர்திரு. செ.திவான் அவர்களுக்கு,

நலம். நீங்கள் நல்ல நலத்துடன் தமிழுக்கு சேவை செய்ய ஆண்டவன் அருள் செய்வானாகுக.

நீங்கள் வெளியிட்டு எனக்கும் பல பிரதிகள் அனுப்பி "வ.உ.சி.யின் உயில்" என்னும் நூல் பலராலும் விரும்பி என்னிடமிருந்து பெறப்பட்டு விட்டன. என்னிடம் ஒன்றுகூட இல்லை. ஆகவே தயவு செய்து சிரமம் பார்க்காமல் 3 பிரதிகள் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பிய உதவிடக் கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர் திரு.குட்டியவர்களை விசாரித்ததாகக் கூறுங்கள்.

வாழ்த்துக்களுடன்

அன்புள்ள
சி.வாலேஸ்

21.12.2006இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அன்புள்ள உயர்திரு செ.திவான் அவர்களுக்கு,

வணக்கம்

2007 புத்தாண்டில் நீங்கள் அனைவரும் எல்லா நலன்களையும் பெற்றிடவும்,

நீங்கள் நல்ல உடல் நலத்துடன் இன்னும் பல நூல்களைப் பதிப்பித்திடவும் உளமாற வாழ்த்துக்கிறேன்.

அன்புள்ள
சிவாலேஸ்

அய்யா அவர்கள் மதுரை நாகமலை சென்ட்ரல் பேங்க் காலனியிலிருந்து 2007 வாக்கில் 3/238 சர்வோதய நகருக்கு குடிபெயர்ந்தார்கள். தொலைபேசி எண் 2456632. இந்த முகவரியிலேயே தனது இறுதி காலம் வரை வாழ்ந்தார்கள். (இறுதிக்கு சில வாரங்களுக்கு முன்தான் இங்கிருந்து சென்னைக்கு சென்று சென்னையில் காலமானார்கள்)

26.2.2007இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அன்புடையீர்,

நலமே விளைவதாகுக!

5.3.2007லிருந்து மேற்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்த்துக்களுடன்

அன்பு மறவா
சி.வாலேஸ்

11.2.2008இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அன்புமிகு உயர்திரு. செ.திவான் அவர்களுக்கு

வணக்கம்

நலம் நலமே விரும்புகிறேன்

மதிப்பிற்குரிய எனது தந்தையார் அவர்களின் சுயசரிதையை நல்ல முறையில் தயாரித்து (பதிப்பித்து) சிறப்பாக வெளியிட்டமைக்கு எனது பாராட்டுக்கள்.

உங்கள் பொறுப்பில் ஒரு பகுதியை கீழ்க்கண்டவாறு நாங்கள் ஏற்றுக் கொள்ள விரும்புகிறேன்.

வ.உ.சி.வாலேஸ்வரன்	ரூ. 1500/
சி.வா. செல்வராமன் (எனது மகன்)	ரூ. 1500/

மொத்தம்	3000

இத்துடன் ரூ.3000/-க்கான பேங்க் ஆப் பரோடாவின் காசோலையை இணைத்துள்ளேன்.

கூரியர் கிடைத்தவுடன் டெலிபோன் செய்யுங்கள்.

உங்கள் முயற்சி தொடரவும் வெற்றி பெறவும் ஆண்டவன் அருள் செய்வானாக!

வாழ்த்துக்களுடன்

Mr.குட்டியைக் கேட்டதாகக் கூறவும்

அன்பு மறவா
சி.வாலேஸ்

6.12.2008 இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அன்புள்ள சிறந்த நூல் ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். வாழ்த்துக்கள்

உங்கள் அன்பான 3.12.08ம் தேதிய கடிதம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி.

எனது சிறு தொகை உங்களுக்கு இவ்வளவு ஊக்கம் கொடுத்தது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

உங்கள் முயற்சிகள் யாவும் வெற்றி பெற எல்லாம் வல்ல ஆண்டவன் திருவடி வணங்கி வாழ்த்துகிறேன்.

எனக்கு "சுய சரிதை" போதும். இனி நான் கேட்டால் மட்டும் அனுப்பினால் போதும்.

குடும்பத்தில் எல்லோரும் நீங்கள் உட்பட நலங்கள் யாவும் பெற்றிட வாழ்த்தும்.

அன்புள்ள
சி.வாலேஸ்

1.12.2008 இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

நலம், நலமே விழைவதாகுக.

சுயமரியாதைக்குரியவர் ஏ.வி.பி. ஆசைத் தம்பி என்ற நூலை நன்கு ஆராய்ச்சி செய்து எழுதியுள்ளீர்கள். பாராட்டுக்கள். நூலை இத்துடன் திரும்ப அனுப்பியுள்ளேன்.

வாழ்த்துக்களுடன்

அன்புள்ள
சி.வாலேஸ்

12.12.2008 இல் அய்யா எழுதிய கடிதம்

அன்புமிகு எழுத்தாளர் உயர்திரு. செ.திவான் அவர்களுக்கு,

வணக்கம்

நலமே விளைவதாகுக!

சில தினங்களுக்கு முன் நீங்கள் அன்புடன், சென்னை பாரிநிலையத்தார் மதிப்பிற்குரிய எனது தந்தையாரின் திருக்குறள் முப்பால் உரையை ஒரே நூலாக வெளியிடுவதாக கூறினீர்கள்.

மறுநாள் இத்துடன் நகல் அனுப்பியுள்ள நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன்.

என்னால் கலந்து கொள்ள இயலாது என்று தெரிவித்தபொழுது

எனது பெரிய மகன் செல்வன் சி.வா.சிதம்பரத்தை அழைப்பதாகத் தெரிவித்தனர். உங்களுக்குத் தகவலுக்காக அனுப்புகிறேன்.

வாழ்த்துக்களுடன்,

அன்புள்ள
சி.வாலேஸ்

24.12.2008 இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அன்புமிகு வரலாற்று ஆசிரியர் உயர்திரு. செ.திவான் அவர்களுக்கு,

வணக்கம்

2009 புத்தாண்டு உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் உற்றார் உறவினர்களுக்கும் எல்லா நன்மைகளையும் கொடுத்திடவும்,

நீங்கள் இன்னும் பல சிறந்த நூல்களை எழுதிடவும் அருள் செய்யுமாறு இறைவனை வணங்குகிறேன்.

அன்பு மறவா
சி.வாலேஸ்

22.12.2009இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

2010 புத்தாண்டில் உங்கள் எழுத்துச் சேவை சிறக்கவும், நீங்கள் அனைவரும் நல்ல உடல் நலத்துடனும், மகிழ்ச்சியாகவும் இருக்க உளமாற வாழ்த்துகிறேன்.

அன்பு மறவா
சி.வாலேஸ்

3.12.2010 இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம்

நலம், நலமே விரும்புகிறேன். நலமே விளைவதாகுக!

நீங்கள் அன்புடன் அனுப்பிய துவாரகை மன்னன் என்ற நூலினைப் பெற்று மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நல்லதொரு நூலைப் பதிப்பித்துள்ளீர்கள். பாராட்டுக்கள்.

நமது நண்பர் உயர்திரு. குட்டி அவர்களை விசாரித்ததாகக் கூறுங்கள். அவர் நலமுடன் வாழ வாழ்த்துக்கள், அவரது இனிய வரவுகளான அன்புத் பேத்திகள் உட்பட.

நீங்கள் நல்ல உடல்நலத்துடன் நீண்ட நாள் வாழ்ந்து தமிழுக்கும் தமிழக பெருமக்களுக்கும் தொண்டு செய்திட அருளுமாறு ஆண்டவனை வணங்கி உங்களை வாழ்த்தும்

அன்புள்ள
சி.வாலேஸ்

16.5.2010 இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அன்புள்ள நண்பர் அவர்களுக்கு, வணக்கம்,

நலம், நலமே விரும்புகிறேன்.

உங்கள் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்ட பொழுது இந்தத் தொலைபேசி இப்பொழுது உபயோகத்தில் என்று பதில் வருகிறது.

தயவு செய்து உங்கள் புதுத் தொலைபேசி எண் அல்லது செல்போன் எண்ணை உடனே தெரிவியுங்கள்.

வாழ்த்துக்களுடன்

அன்புள்ள
சி.வாலேஸ்

13.7.2010இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அன்பில் சிறந்த நண்பர் வரலாற்று ஆய்வாளர் உயர்திரு. செ.திவான் M.A.,M.Phil, அவர்களுக்கு,

வணக்கம்

நீங்கள் அன்புடன் அனுப்பிய உங்கள் புதல்வி திருவளர்ச் செல்வி D. நஜாத் M.C.A. மணமகளுக்கும், திருவளர்ச் செல்வன் டாக்டர் M. முஹம்மது அப்துல் மஜீத் M.B.B.S. மணமகனுக்கும் **தமிழர் தலைவர்** உயர்திரு. **வைகோ** அவர்கள் தலைமையில் 18.7.2010 ஞாயிற்றுக் கிழமையில் நடைப்பெறவுள்ள திருமண அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி! நன்றி!

திருமணம் இனிதே நடைபெறவும் மணமக்கள் எல்லா நலன்களும் பெற்று சிறப்புற நீடுழி வாழவும் உளமாற வாழ்த்துகிறேன்.

அன்புள்ள
சி.வாலேஸ்

21.12.2010இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

மதிப்பிற்குரிய நூல் ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம்

வரும் 2011 புத்தாண்டில் நீங்களும் உங்கள் குடும்பத்தினர் அனைவரும் எல்லா நலன்களையும் பெற்றிடவும்,

உங்கள் உடல் நலம் நன்றாக இருந்து இன்னும் தமிழ் அன்னைக்கு அரிய தொண்டு செய்திடவும், உளமாற வாழ்த்துகிறேன்.

அன்பு மறவா
சி.வாலேஸ்

பி.கு. நீங்கள் சமீபத்தில் பதிப்பித்து எனக்கு அனுப்பிய “துவாரகை மன்னன்” என்ற ஸ்ரீகிருஷ்ணன் பற்றிய நூல் மிகச் சிறப்பாகவும் எளிமையாகவும் இருக்கிறது. பாராட்டுக்கள்.

16.5.2011இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அன்புள்ள மரியாதைக்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம்

நீங்கள் அன்புடன் அனுப்பிய நல்லதொரு வரலாற்று நூல் “மகாகவி பாரதியின் இஸ்லாத்தின் மஹிமை” இன்று கிடைக்கப்பெற்றேன். நன்றி

உங்கள் முயற்சிக்கும், திறமைக்கும் பாராட்டுக்கள்

அன்புள்ள
சி.வாலேஸ்

18.8.2011இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

மதிப்பிற்குரிய வரலாற்று ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம்

நலமே விளைவதாகுக!

நீங்கள் அன்புடன் அனுப்பிய “வாடகை வீட்டில் வாழ்ந்த வரலாற்று நாயகர் காமராஜர்” என்ற சிறந்த நூல் இன்று கிடைத்தது. கிடைத்தவுடன் படிக்க வேண்டும் என்ற அவா உள்ளத்தில் உதித்தது. படித்து முடித்த பின் தான் கீழே வைக்க முடிந்தது. சிறப்பாக எழுதியுள்ளீர்கள். உங்களுக்கு என் அன்பான பாராட்டுக்கள்.

“எண்ண அலைகள்” என்னைத் துயரக் கடலில் ஆழ்த்திவிட்டது. நீங்கள் உடல் நலமில்லாது சிரமப்பட்டது அறிந்து மிக்க வருந்துகிறேன். உங்களைக் கவனித்து மருத்துவம் செய்த அத்தனை மருத்துவ மா மனிதர்களுக்கு எனது பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் உடல் நலம் விரைவில் பூரணமாக முன்போல இன்னும் பல நூல்களை எழுதி தமிழன்னைக்கு அணிவிக்க அருள் செய்ய ஆண்டவனை வணங்குகிறேன்.

தங்கள் அன்பு சகோதரியின் மறைவிற்கு வருந்தி அவர் மறு உலகில் நல்வாழ்வு வாழ்ந்திடவும் பிரார்த்திக்கிறேன்.

இச்சிறிய நூலைப் படித்தவுடன் நீங்கள் எழுதிய “வ.உ.சி.யின் உயில்” நூல் நினைவிற்கு வந்தது. நல்ல பல நூல்களைப் படைத்த உங்களுக்கு என் நன்றி!

வாழ்த்துக்களுடன்

அன்புள்ள
சி.வாலேஸ்

30.9.2011இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

மதிப்பிற்குரிய வரலாற்று ஆசிரியர் உயர்திரு. செ.திவான் அவர்களுக்கு,

வணக்கம்

நீங்கள் பரிபூரண உடல் நலம் பெற்று அன்னை தமிழிற்கு இன்னும் பல நூல் மாலைகள் அணிவிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

நீங்கள் அன்புடன் அனுப்பிய "வல்லிக்கண்ணன் கடிதங்கள்" நூல் கிடைக்கப் பெற்றேன்.

நீங்கள் தமிழிற்கு ஆற்றிய தொண்டினை அழகாக ஆனால் சுருக்கமாகப் பல கடிதங்களில் தெரிவித்துள்ளார் உயர்திரு வல்லிக் கண்ணன் அவர்கள்.

அறிஞர், சிறந்த எழுத்தாளர் உயர்திரு. வல்லிக்கண்ணன் அவர்களை எனது இனிய அண்ணன் வ.உ.சி.சுப்பிரமணியன் - அவர் பத்திரிக்கை உதவி ஆசிரியர் - நூல் ஆசிரியர் - அவர்கள் வீட்டில் சந்தித்து அளவளாவும் பேற்றினை நான் பெற்றுள்ளேன்.

உங்கள் நூலைப் படித்தபின்தான் அவர் அமரராகி விட்டார் என்பதை அறிந்தேன். நல்லவர், பண்பாளர் ஒருவர் மறைந்து விட்டார். அவர் ஆத்மா சாந்தியடைவதாகுக.

அவர் கடிதத்தின் மூலம் உங்கள் பணியில் நீங்கள் பட்ட சிரமங்கள் தெரிய வருகின்றன.

அறிஞர் திகசியின் புகழாரமும், உங்களுக்குத் தகுதியானவைதாம். வாழ்க! வளர்க!

உங்கள் அன்பு மைத்துனர் உயர்திரு. வேந்தர் என்ற சாகுல் ஹமீது அவர்கள் மறைவு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்கிறேன்.

வாழ்த்துக்களுடன்

அன்பு மறவா
சி.வாலேஸ்

21.12.2011இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

பேரன்புடையீர்,

வணக்கம்

நீங்கள் அவ்வப்பொழுது அன்புடன் அனுப்பும் நூல்களைப் படித்து ஆனந்தம் அடைகிறேன். நலமே விளைவதாகுக!

2012 புத்தாண்டில நீங்களும் உங்கள் குடும்பத்தில் அனைவரும் நல்ல உடல் நலத்துடனிருக்கவும்.

நீங்கள் இன்னும் பல நூல்களைப் பதிக்க நல்ல உடல் நலத்துடன் இருக்கவும்.

உளமாற வாழ்த்துகிறேன்.

அன்புள்ள
சி.வாலேஸ்

15.11.2012 இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அன்புமிகு ஆராய்ச்சி ஆசிரியர் உயர்திரு. செ. திவான் அவர்களுக்கு

வணக்கம்

சமீபத்தில் எனக்கு ஒரு இஸ்லாமிய பல் மருத்துவர் நண்பர் ஆனார்.

அவருக்கு நினைவுப் பரிசாகக் கொடுக்க

“விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்”

அல்லது

“விடுதலைப் போரில் வீரமிகு முஸ்லிம்கள்”

என்ற இரண்டில் ஒன்றை அனுப்புவீர்கள் என்று கடிதம் எழுதியிருந்தேன்.

ஆனால் நீங்கள் புதியதாக எழுதிய “உயர்திரு. வக்கம் அப்துல் காதர்” பற்றிய நூலை அனுப்பிவிட்டீர்கள். நன்றி. மகிழ்ச்சி.

தயவு செய்து நான் மேலே குறிப்பிட்டுள்ள நூல்களில்

ஒன்றை அனுப்ப அன்புடன் வேண்டுகிறேன். நண்பருக்கு என் வாழ்த்துக்கள்.

அன்பு மறவா
சி.வாலேஸ்

20.12.2012 இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அன்புள்ள உயர்திரு செ.திவான் அவர்களுக்கு,

வணக்கம்

2013 புத்தாண்டில் புது அன்புப் பேரன் உட்பட நீங்கள் அனைவரும் எல்லா நலன்களும் பெற்று மகிழ்வுடன் வாழ உளமாற வாழ்த்துகிறேன்.

இந்த ஆண்டில் நீங்கள் மேலும் பல நூல்கள் பதிப்பித்திடவும் வாழ்த்துக்கிறேன்.

நான் அஞ்சல் அட்டையில் எழுதிய நூல்களில் ஏதாவது ஒன்றை அனுப்பி உதவிடக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பு மறவா
சி.வாலேஸ்

26.12.2012 இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அன்பிலும் பண்பிலும் சிறந்த நல்ல நூல் ஆசிரியர் அவர்களுக்கு,

நலம், நலமே விரும்புகிறேன்

உங்கள் அன்பான கடிதம் எனக்கு அளவற்ற மகிழ்ச்சியைக் கொடுக்கிறது

“இந்திய சுதந்திரப் போரில் வக்கம் அப்துல் காதர்” என்னும் நூலின் பிரதி முன்பு நீங்கள் அனுப்பியது என்னிடம் இருப்பதால் இப்பொழுது அனுப்பியதை இத்துடன் (திரும்ப) அனுப்பியுள்ளேன்.

எனது பல் மருத்துவ இஸ்லாமிய நண்பருக்கு பாரதியார் அவர்கள் எழுதிய இஸ்லாம் பற்றிய நூலை அனுப்பி விட்டேன். நன்றி

எனக்கு வயது 85 ஆகியது. கண் பார்வை சுமார் தான். 15 நிமிடங்களுக்கு மேல் படித்தால் கண் வலிக்கும். ஆகவே நீங்கள் அன்புடன் அனுப்பிய "சுதந்திரப் போரில் இஸ்லாமியர்கள்" என்ற நூலை இத்துடன் அனுப்புகிறேன். தப்பாக புரிந்து கொள்ளாதீர்கள். உங்களிடமிருந்தால் உங்களுக்கு உபயோகப்படும்.

நீங்கள் கேட்டபடி இத்துடன் எனது புகைப்படம் ஒன்று அனுப்பியுள்ளேன்.

நீங்கள் இன்னும் நீண்ட நாட்கள் வாழ்ந்து தமிழன்னைக்கு இன்னும் நூல் மாலை அணிவிக்க அருள் செய்ய இறைவனை வணங்குகிறேன்.

அனைவருக்கும் வாழ்த்துக்கள்

அன்பு மறவா
சி.வாலேஸ்

21.11.2013 இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

பேரன்புடைய மதிப்பிற்குரிய எழுத்தாளர் உயர்திரு. செ.திவான் அவர்களுக்கு,

வணக்கம்

நலம், நலமே விளைவதாகுக!

உங்கள் அன்பான கடிதம் கிடைத்தது.

நமது அன்பு மகள் செய்துள்ளது பற்றி நீங்களோ உங்கள் துணைவியாரோ கவலைப்பட வேண்டாம். எங்கள் குடும்பத்திலேயே பல இவ்வாறு நடந்துள்ளன.

நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

உங்கள் உடல் நலத்தைக் கவனித்துக் கொண்டு தமிழன்னைக்கு நீங்கள் செய்ய வேண்டிய தொண்டினை சிறப்பாகச் செய்திட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் அன்புடன் அனுப்பிய வ.உ.சி.யின் உயில் 2 பிரதிகள் கிடைத்தன. நன்றி. ஏற்கனவே உயர்திரு. சங்கரதிருநாவுக்கரசு விழாக் கடிதத்தையும், 3 பிரதிகளையும் அனுப்பியிருந்தார்.

கவலையை விடுங்கள். ஆண்டவனைப் பிரார்த்திப்போம். நம் மகளின் நல்வாழ்விற்காக

அன்புள்ள
சி.வாலேஸ்

26.12.2013 இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

பெருமதிப்பிற்குரிய எழுத்தாளர் உயர்திரு. செ.திவான் அவர்களுக்கு,

வணக்கம்

நலமே விளைவதாகுக!

2014 புத்தாண்டில் நீங்கள் அனைவரும் நல்ல நலத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்ந்திடவும்,

உங்கள் எழுத்துப்பணி சிறப்பாக தொடர்ந்திடவும், உளமார வாழ்த்துகிறேன்.

அன்பு மக்கள் அவர்கள் விருப்பப்படி செய்யும் செயல்களுக்காக நீங்கள் யாரும் வருந்தாது இருக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நலமே விரும்பும்

அன்புள்ள
சி.வாலேஸ்

3.3.2014 இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

மதிப்பிற்குரிய வரலாற்று ஆசிரியர் உயர்திரு.செ.திவான் அவர்களுக்கு,

வணக்கம்

நலம் நலமே விளைவதாகுக!

உங்கள் அன்பான 27.2.14ம் தேதிய கடிதம் கிடைத்தது. நீங்கள் போர்த்துக்கீசியர்கள் பற்றி வரலாற்று நூல் எழுதியிருப்பதற்கு உங்களைப் பாராட்டுகிறேன். பரிசாக ரூ.1000/-க்கான காசோலையை அனுப்பியுள்ளேன்.

அகவை அதிகமாகி விட்டபடியால் என்னால் படிக்க முடியவில்லை. ஆகவே எனக்கு நூல் அனுப்ப வேண்டாம்.

எனக்குத் தெரிந்த ஆர்வலர் யாரும் இல்லை.

உங்களுக்கு இறைவன் நல்ல உடல் நலத்தைக் கொடுக்க அவனை வணங்குகிறேன்.

வாழ்த்துக்களுடன்

அன்புள்ள
சி.வாலேஸ்

பி.கு. இக்கடிதம் கிடைத்தவுடன் டெலிபோன் செய்யுங்கள்.

17.04.2014 இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அறிவிற் சிறந்த வரலாற்று ஆசிரியர் உயர்திரு. செ. திவான் அவர்களுக்கு

வணக்கம்

நலமே விளைவதாகும்

பல நாட்களுக்கு முன்பாகவே “எனது முதுமையினால் என்னால் படிக்க இயலவில்லை. வரலாற்றின் வெளிச்சத்தில்....” நூலை எனக்கு அனுப்ப வேண்டாம் என்று நான் கெஞ்சி எழுதியும், நீங்கள் அந்நூலை எனக்கு அனுப்பின உங்கள் பெருந்தன்மையைப் பாராட்டுகிறேன்.

உங்கள் செயலினால் நான் அந்நூலை பார்சல் செய்யும் சிரமத்தையும் கூரியரில் அனுப்பும் செலவினையும் செய்யும்படி செய்த உங்களைப் பாராட்டுகிறேன்.

உங்கள் நூலை எடுத்து மற்றவர்களுக்கு கொடுப்பதை நான் விரும்பவில்லை. ஆகவே நான் திரும்ப அனுப்புகிறேன்.

வாழ்த்துக்களுடன்

அன்புள்ள
சி.வாலேஸ்

25.04.2014 இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

அறிவிற் சிறந்த வரலாற்று ஆசிரியர் அவர்களுக்கு

வணக்கம், நலம் நலமே விளைவதாகுக!

உங்களை விட வாழ்வின் இறுதிக் கட்டத்தில் 86 வயதில் நான் உடல் உறுப்புகள் பல சரி வர இயங்காமல் கஷ்டப்படுகிறேன்.

வீட்டு வாசலை விட்டு இறங்கி 2 ஆண்டுகள் ஆகிவிட்டன. கடைகளுக்கு, பேங்கிற்கு எல்லாம் நண்பர்கள் தான் சென்று உதவி செய்து வருகிறார்கள். எங்கு சென்றாலும் ஆட்டோவில் தான். ஆகையால் முதுமை என்பது எல்லோருக்கும் அநேகமாகச் சிரமத்தைக் கொடுக்கிறது.

ஆண்டவனை நினைத்து மனதைத் தேற்றி மகிழ்ச்சியாக வாழ வேண்டுகிறேன்.

“எனது” நூலை பேராசிரியர் உயர்திரு. முகுந்தன் அவர்களுக்கு அன்பளிப்பாகச் செய்தமைக்கு நன்றி! மகிழ்ச்சி

வாழ்த்துக்களுடன்

அன்பு மறவா
சி.வாலேஸ்

26.12.2014 இல் அய்யா அவர்கள் எழுதிய கடிதம்

பேரன்புடையூர்,

வணக்கம்

நலமே விளைவதாகும்!

2015 புத்தாண்டில் நீங்கள் அனைவரும் எல்லா நலன்களும் பெற்று மகிழ்வோடு வாழ்ந்திடவும்,

வேண்டாத கவலைகளை எல்லாம் மனதிலிருந்து விரட்டிவிட்டு முன்போல் நூல்கள் எழுதி வெளியிடவும், நீண்ட நாள் உடல் நலத்துடன் வாழ்ந்திடவும் வாழ்த்துகிறேன்.

அன்பு மறவா
சி.வாலேஸ்

வ.உ.சி. வாலேஸ்வரன் அடியேனுக்கு எழுதிய இறுதிக் கடிதம் இதோ, அவரது கையெழுத்தோடு இதோ....


வ.உசி. வாலேஸ்வரன்
3/238, சர்வோதய நகர்,
நாகமலை அஞ்சல், மதுரை-19.
தொலைபேசி: 2456632

26-12-2014

பேரன்புடையீர்,
வணக்கம்.
நலமே விளைக!

கடந்த 20 ஆண்டுகளாக அடியேனுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களை தவறாமல் சொல்லி மகிழ்ந்த எனது பெரிய தந்தையை எந்நாள் காண்பேன் இனி.

வரும் புத்தாண்டு வாழ்த்துச் சொல்ல இன்னொரு சி.வாலேஸ்வரன் பிறந்து வரவா போகிறார்? என்பதை எண்ணும்போதே இப்போதே எளியேன் நெஞ்சம் அடைக்கிறதே!'

வாலேஸ்வரனார்

இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி.யின் இறுதிப் புதல்வர் வாலேஸ்வரன். 11.6.1928 இல் பிறந்தவர், 25.7.2015 காலை 10 மணி வரை 87 ஆண்டுகள் வாழ்ந்தவர்.

வ.உ.சி.யின் வாதத் திறமையை நன்கு அறிந்திருந்த ஆங்கிலேய நீதிபதி வாலஸ், வ.உ.சி. வக்கீல் தொழிலை மீண்டும் தொடர உதவி புரிந்தார். அதற்கு நன்றி செலுத்தும் வகையில் தனது மகனுக்கு வாலேஸ்வரன் என வஉசி பெயரிட்டார் என்று பொத்தாம் பொதுவாகச் சொல்லுகின்றனர் அனைவருமே.

பரமேஸ்வரர் – சிவன் (கடவுள்) ஈஸ்வர நாமம் சிவனுக்கு உண்டு என்பதைப் 'பிங்கல நிகண்டு' தெரிவிக்கிறது.

இலங்கை வேந்தன் இராவணனை இலங்கேஸ்வரன் என்று அழைப்பார்கள். இராவணனை அருள் செய்த இராவணன் என்பது தேவாரம் (53–11) இராவணன் இரவின் வண்ணம் உடையவன். இராவண இராவண இராவண இராஜன் என்பது திருப்புகழ் (331)

இராவணன் குறித்து Ravana King of Lanka எனும் ஆங்கில நூலை M.S.பூரணலிங்கம் பிள்ளை 1928 இல் வெளியிட்டார். அதனை 1936இல் தமிழில் இராவணப் பெரியார் என்று வெளியிட்டார்.

1946 இல் புலவர் குழந்தை திராவிடத் தளபதி சி.என். அண்ணாதுரை எம்.ஏ. அவர்களின் முன்னுரையோடு இராவண காவியம் எனும் 500 பக்கங்களைக் கொண்ட நூலைத் தந்தார்.

நாடகக் காவலர் ஆர்.எஸ்.மனோகர் 1958 இலிருந்து இலங்கேஸ்வரன் என்ற நாடகத்தை தமிழகமெங்கும் நடித்தார். 2.8.2002இல் 200 பக்கங்களைக் கொண்ட நூலாக வெளிவந்தது. ஆனந்த நீலகண்டன் ஆங்கிலத்தில் எழுதி தமிழில் நாகலெட்சுமி சண்முகம் தந்த அசுரன் நூல் 2014இல் 661 பக்கங்களில் வந்துள்ளது.

தி.மாணிக்கவாசகம், 1974இல் 132 பக்கங்களில் இராவணேஸ்வரன் நூலைத் தந்துள்ளார்.

வைகுண்டர் திருக்குடும்ப வெளியீடாக பாதாள இலங்கேஸ்வரன் எனும் நூலை 58 பக்கங்களில் 1991இல் நாஞ் சில் பாலன் தந்துள்ளார்.

இ.க.அரியரத்தினம் 'மா மன்னன் இலங்கேஸ்வரன்' எனும் நூலை 320 பக்கங்களில் 2010 இல் தந்துள்ளார்.

இறைவனின் திருப்பாதங்களிலே தன் தலை இருக்க மூன்று கோடி ஆண்டுகள் பிறப்பாம் பிணியின்றி வாழும் இராவணனைச் சிவன் போல ஈஸ்வரன் என்று கூறி மகிழ்கின்றனர்.

அடியேன் 'அறிந்தவரையில்' ஈஸ்வரன், பரமேஸ்வரன், இலங்கேஸ்வரன் என்ற பெயர்கள் வழக்கில் உள்ளது. வாலேஸ்வரன் என்று தேச பக்தச் செம்மல் வஉசி தன் மகனுக்கு ஏன் பெயரிட்டார்?

வக்கீலய்யா வீடு, என்ற தலைப்பிலேயே வஉசி வழக்கு மன்றங்களில் ஆற்றிய பணிகளை விரிவாகவே எடுத்துரைத்தோம்.

வஉசி ஒட்டப்பிடாரத்தில், தூத்துக்குடியில் பணியாற்றியபோதும், நெல்லை வழக்கில் தானே சம்பந்தபட்டபோதும் நீதிபதி வாலேசுடன் நெருங்கிய தொடர்பும் நட்பும் கொண்டிருந்தார்.

நெல்லை சுதந்திர எழுச்சியில் வஉசி கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டை சிறையில் விசாரணை கைதியாக இருந்தபோது 10.6.1908 சுதேசமித்திரனில், தான் உருவாக்கிய கப்பல் கம்பெனியை வெள்ளையர்களான விஞ்சும், ஆஷும் சீரழித்துவிட்டதை அறிந்து மனம் நொந்து மடல் எழுதினார். (விடுதலை வீரர் வஉசி நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர் 1872 – 1972 பக் 112) 1908 சூலை 7 இல் இரட்டை ஆயுள் தண்டனை தரப்பட்டது. 1908 ஆம் ஆண்டில் வஉசியின் ஆயுள் தண்டனை உயர் நீதிமன்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்டது.

1908 ஆகஸ்ட் 26, வஉசி சாதாரண சிறைத் தண்டனை பெற்றவராகவே நடத்தப்பட்டார். 1908 நவம்பர் 4 வரை வஉசி விசாரணைக் கைதியாகவும் நடத்தப்பட்டார்.

கடுங்காவல் தண்டனையிலிருந்து தற்காலிகமாக விடுவிக்கப்பட்ட வஉசியை ஏதாவது வேலை செய்யும்படி

ஜெயிலர் வஉசியின் அறையைப் பூட்டி அவரது நடமாட்டத்தை தடை செய்தார்.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜேம்ஸ் ஆலன் *(1864–1912)* மெய்யியல் அறிஞர்; உளவியல் அறிஞர் இவர் எழுதிய மனம்போல வாழ்வு (As a man Thinketh), அகமே புறம் (Cout from the Heart) சாந்திக்கு மார்க்கம் (அமைதிக்கு வழி) (The way of peace), வலிமைக்கு மார்க்கம் (வலிமைக்கு வழி) (The Path of Prosperity) எனும் நூல்களை அறக்கருத்துக்களை தமிழில் மொழி பெயர்த்தார்.

ஆங்கிலேயரை எதிர்த்துச் சிறை சென்றிருந்த வஉசி, ஆங்கிலேய அறிஞரான ஜேம்ஸ் ஆலனின் படைப்புகளை மொழியாக்கம் செய்தது, தனிப்பட்ட முறையில் வெள்ளையர் மீதும் வஉசி வெறுப்புக்கொண்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

கோவை மத்தியச் சிறைச்சாலை கைது எண் *1541* ஆக இருந்து வஉசி *24.11.1908* இல் சென்னை அரசுக்கு செய்த மனுவில் இந்திய பீனல் கோர்ட்டு படி *124*A பிரிவின் கீழோ *153*A பிரிவின் கீழோ எந்த குற்றத்திற்கும் மூன்று ஆண்டுகளுக்கு மேல் சிறை தண்டனை விதிக்க இயலாது. ஆகவே அவ்வாறு இம்மனுதாரருக்கு தண்டனை விதித்தது, அதுவும் கடுங்காவல் தண்டனை விதித்தது சட்டத்திற்கு மாறானதாகும்.

நாடு கடத்தப்பட்ட தீவாந்திரத் தண்டனை விதிக்கப்பட்டவரான என்னைச் சிறையில் பூட்டுவதும், நலன் விரும்பாதபோது வேலை தருவதும் கூடாது, தீவாந்திரத் தண்டனை வழங்கிய நீதிமன்றத்தார் உத்திரவுபடி உடனே தன்னை நாடு கடத்தும்படி வஉசி அந்த மனுவில் கோரினார்.

வஉசியின் இந்த மனு குறித்து இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் (House of Commons) ஓ கிராடி (O' Grady) என்ற நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பினார். இதற்கு மாண்டேகு (Montagu) (Under Secertary of State of India) பதிலளித்தார்.

1908 நவம்பரில் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஆர்னால் ஓய்ட்டும் (Sir CHARLES Arnold White), நீதிபதி மில்லரும் (Leslie creery Miller) வஉசியின் முறையீட்டை விசாரித்துத் தீர்ப்பு

வழங்கினார். நாடு கடத்தி பின்ஹே வழங்கிய இரட்டை ஆயுள் தண்டனைகளை ஆறு ஆண்டுகள் நாடு கடத்தல் தீர்ப்பாகவும், நான்கு ஆண்டுகள் நாடு கடத்தல் தீர்ப்பாகவும் குறைத்து இரண்டு தண்டனைகளையும் ஒரே நேரத்தில் அனுபவிக்கும்படி நீதிபதி தீர்ப்பளித்தார்.

கோவை மத்திய சிறையிலிருந்து 9.1.1909 இல் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் இருக்கும் ஆங்கிலேய ஆளுநருக்கு மீண்டும் வஉசி மனு அனுப்புகிறார். அவரது கோரிக்கைகள் அப்போது மறுக்கப்பட்டது.

29.1.1909இல் வஉசி பிரிட்டிஷ் பேரரருக்கு ஒரு மனு எழுதினார். (Go. 1390 Judicial date 14.10.1909) மனு கிடைக்கப்பெறவில்லை.

1.9.1910 அன்று கோவை மத்திய சிறைச்சாலையில் இருந்து வஉசி கல்கத்தா ஜெனரல் வில்லியம் கோட்டையில் இருக்கும் வைஸ்ராய் மற்றும் கவர்னருக்கு மனு அளிக்கிறார். அதனையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

1910 டிசம்பர் முதல் வாரத்தில் வஉசி கோவை சிறையிலிருந்து கண்ணனூர் சிறைக்கு மாற்றப்பட்டார்.

அந்தமான் தீவில் கைதிகள் நிரம்பி வழிந்ததால் மேலும் கைதிகளை அனுப்ப வேண்டாம் என்று அரசு ஆணையிட்டிருந்தது. ஒருவரை நாடு கடத்த வேண்டும் என்றால் குறைந்தது ஆறு ஆண்டுகள் இருக்க வேண்டும் என்பது சிறைச்சாலை விதியாகும். 1911இல் வஉசியின் சிறைவாசம் இன்னும் ஒன்றரை ஆண்டுகளே இருந்ததால் வஉசி நாடு கடத்தப்படவில்லை.

1857 இல் இங்கிலாந்து விக்டோரியா மகாராணியால் இந்தியர்களுக்காக வெளியிடப்பட்ட அறிக்கையின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு ஆனது. 1908 நவம்பர் 2இல் இங்கிலாந்து ஏழாம் எட்வர்டு அந்த அறிக்கையை மீண்டும் புதுப்பித்தபோது இந்தியக் கைதிகளுக்கு ஓர் ஆண்டுக்கு ஒரு மாதம் என்ற விகிதத்தில் தண்டனை குறைக்கப்பட்டது. ஆறு ஆண்டுகளுக்கு கடுங்காவல் தண்டனை பெற்ற வஉசிக்கு, இதன் அடிப்படையில் ஆறு மாதங்கள் தண்டனை குறைக்கப்பட்டது. இங்கிலாந்தின் மன்னன் ஏழாம் எட்வர்டு இறந்தார். ஐந்தாம் ஜார்ஜ் 1910ல்

இங்கிலாந்தின் மன்னனானார். இதற்காக ஆண்டுக்கு 15 நாட்கள் தண்டனை குறைக்கப்பட்டது. இந்த அடிப்படையில் வஉசிக்கு மூன்று மாதங்கள் தண்டனை குறைக்கப்பட்டது.

சிறைக் கதைகளின் உழைப்பிற்காக சிறைக் கண்காணிப்பாளர் வழங்கும் தண்டனைக் குறைப்பாக 92 நாட்கள் வஉசி பெற்றிருந்தார். ஆனால் சிறையில் கலக மூட்டியது போன்ற குற்றங்களுக்காக 37 நாட்கள் தண்டனைகளாக கழிக்கப்பட்டு, 55 நாள்கள் சிறை விதிகளின்படி வஉசிக்கு குறைக்கப்பட்டது.

1911 டிசம்பரில் டில்லியில் இங்கிலாந்து அரசர் ஐந்தாம் ஜார்ஜ் டில்லியில் முடிசூட்டும் விழாவிற்கான ஏற்பாடுகள் நடைபெற்றது.

1911 ஜுலை 15இல் சென்னை மாநில தலைமைச் செயலாளர் ஸ்டுவர்ட் என்பவருக்கு, இந்திய அரசின் உளவுத்துறை கடிதம் அனுப்பியது. 7.9.1911இல் தயாரிக்கப்பட்ட அலுவலகக் குறிப்புகளால் வஉசி விடுதலை பெறுவார் என்றால் பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் டில்லியில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னனின் முடிசூட்டும் விழாவிற்காக அளிக்கப்பட்ட சிறப்புத் தண்டனைக் கழிவு ஆறு மாதங்கள் வஉசிக்கும் அளிக்கப்பட்டது.

4 வருடங்கள், 11 மாதங்கள், 12 நாட்கள் சிறைவாசத்திற்குப் பின் 24.12.1912 இல் கண்ணனூர் சிறையிலிருந்து வஉசி விடுதலையானார். இதன் பின் சென்னை சிந்தாதிரி பேட்டையிலும் அருணாசல நாயகர் வீதியிலும்,திருமயிலையிலும், பெரம்பூரிலும் வஉசி குடும்பத்தை நடத்திடும் பொருட்டு அரிசி வியாபாரமும், நெய் வியாபாரமும் செய்தார். (இந்த கால கட்டம் 1912 முதல் 1919 ஆகும்)

சென்னையில் வஉசி வாழ்ந்த வேளையில் தமிழ்த் தென்றல் திரு.வி.க., டி.செங்கல்வராய முதலியார் வஉசியைச் சந்தித்துப் பேசி மகிழ்வார்கள். பின்னாளில் இந்தியக் குடியரசுத் தலைவரான வி.வி.கிரி துவக்கக் காலத்தில் தொழிற் சங்கத் தலைவர். அன்னிபெசன்ட் அம்மையார், சர்க்கரைச் செட்டியார், டாக்டர் அருண்டேல், சிதம்பரம், N.தண்டபாணிப் பிள்ளை முதலியோர் தலைமையில் சென்னையில் இரயில்வே தொழிலாளர் சங்கம் ஆரம்பமாயிற்று.

சென்னையில் தொழிற் சங்க நடவடிக்கைகளில் பங்கு கொண்டவர் வஉசி. ஆனால் குடும்ப நிலைமை துன்ப நிலைதான். லோகமான்ய பால கங்காதர திலகரின் இந்தியன் ஹோம் ரூல் நிதியிலிருந்து மாதம் நூறு ரூபாய் உதவியாக வஉசிக்கு கிடைத்தது.

திலகர் சிறையிலிருந்து திரும்பிய மூன்று நாட்களில் 19.6.1914 இல் சென்னையிலிருந்து பூனா 'கேசரி' பத்திரிக்கை அலுவலக முகவரிக்கு திலகருக்கு வஉசி கடிதம் எழுதினார். இதிலிருந்து வ.உ.சி. பேரார்வத்தோடு திலகரோடு தொடர்பு வைத்திருந்தார் என்பதை அறிய முடிகிறது. லோகமான்ய திலகரே விசேஷக் காங்கிரசில் அக்கிராசனம் (தலைமை) வகிக்க வேண்டும் என்று வஉசி உட்பட பலர் அறிக்கை தந்தார்கள்.

2.7.1918

சுதேசமித்திரன் 2.7.1918 இதழில் வெளிவந்த அந்த அறிக்கையில், சேலம் ஸி.என். வெங்கடப்ப செட்டியார், ஈரோடு ஈ.வெ.ராமசாமி நாயக்கர், தஞ்சாவூர் மகாதேவய்யர், ராஜ கோபால் செட்டியார், மதுரை ஜார்ஜ் ஜோசப், ஸ்ரீரங்கம் கோ சிங்கமய்யங்கார், திருச்சி டி.வி.சாமினாத சாஸ்திரி, திருச்சி ஸையித் முர்த்தஸா சாகிப், சேலம் டி.ஏ.ஆதி நாராயண செட்டியார், கே.வி.சுப்பாராவ், திருப்பூர் பி.வரதராஜூலு நாயுடு, தஞ்சாவூர் டி.ஏ.இராமச்சந்திர செட்டியார், பூவாகவ ஐயங்கார், சென்னை **வி.ஓ.சிதம்பரம் பிள்ளை** (வஉசி), ஸ்ரீரங்கம் டாக்டர் TSSராஜன், திருச்சி எப்.ஜி.நடேசன், டி.வி.நரசுபிள்ளை ஆகியோர் கையொப்பமிட்டிருந்தனர்.

அண்ணல் காந்தியடிகளின் தமிழக விஜயத்தின் போது 23.3.1919இல் ஓர் அறிக்கை விடுத்தார். அதில் ரௌலட் மசோதா சட்டசபையில் நிறைவேறிவிட்டதென்றும் அது இராஜப் பிரதி சம்மதம் பெற்று வெளியான பின்னர் வரும் இரண்டாம் ஞாயிற்றுக் கிழமையை (ஏப்ரல் 6ம் நாள் 1919) சத்தியாக்கிரக நோன்பு நாளாக நாட்டார் கொள்ளல் வேண்டும் என்று கூறியிருந்தார்.

சென்னையில் 5.4.1919இல் மாலையில் ஆங்காங்கே கூட்டங்களை கூடி நிகழ்ச்சிகளை சோதித்துப் பார்க்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டது.

இராஜ கோபாலச் சாரியாரும், ஆதி நாராயண செட்டியாரும், அரங்கசாமி ஐயங்காரும் சத்தியமூர்த்தியும், திரு.வி.க.வும் சென்னையைச் சுற்றி வந்து கொண்டிருந்தார்.

சென்னை பெரம்பூரில் பரந்த வெளியில் வஉசிதம்பரம் பிள்ளையும், என்.தண்டபாணி பிள்ளையும் கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருந்தனர்.

6.4.1919

இராயப்பேட்டை பஜனை கோஷ்டியாரும் மற்றவர்களும் 'தேசபக்தன்' பத்திரிக்கை அலுவலகம் முன் கூடினர். சுப்பராய காமத், திரு.வி.க. வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜனசபையினர் குகானந்த நிலையம் சென்றார்கள். அங்கு மகாகவி பாரதியார் வந்துவிட்டார். 'முருகா, முருகா' எனும் பாடலைப் பாடினார். அக்கூட்டத்தில் வ.உ.சிதம்பரம் பிள்ளையும், என்.தண்டபாணி பிள்ளையும், திரு.வி.க.வும் பேசினார்கள்.

17.12.1919

லோகமான்ய பால கங்காதர திலகர் அமிர்தரஸ் காங்கிரசிற்குச் செல்லும் முன் சென்னைக்கு வந்தார். அவரைக் காண்பதற்கு 17.12.1919இல் தேச பக்தச் செம்மல் வ.உ.சி.யும், சுப்பராய காமத்தும், திரு.வி.க.வும் வேறு சிலரும் சென்றார்கள்.

அந்தக் காலத்தில் பெரம்பூர் இரயில் நிலையத்தில் பம்பாய் (மும்பை) மெயில் நிற்கும். வ.உ.சி. திலகரைச் சந்தித்தார்.

வீரமிகு வ.உ.சி.

'இது தொழிலாளர் காலம்' தாங்கள் சென்னையில் செல்வந்தர் வீட்டில் மாடியில் தங்கினால் ஏழை மக்கள் தங்களைக் காண இயலாது வருந்துவார்கள். ஆதலால் தாங்கள் (திலகர்) எங்களின் ஒருவர் (வஉசி) குடிலில் தங்குவதற்கு உளங்கொள்ளல் வேண்டும் என்றார் வஉசி. அதைக் கேட்டவுடன் திலகர், சிதம்பரம்பிள்ளை எனக்கா விண்ணப்பம்? எனக்கு எந்தக் குடிசையிலிருந்தாலென்ன என்றார். இரயில் சென்னை சென்ட்ரலை அடைந்தது. உற்சாகமான வரவேற்பு திலகருக்கு, தேசபக்தன் காரியதரிசி சுப்பராயகாமத்

வீட்டில் திலகர் தங்கினார். நாள் முழுவதும் பகலில் திலகருடன் வஉசி இருந்தார். உடன் திருவிகவும், காமத்தும் இருந்தனர். மாலையில் தென்னாட்டுத் தலைவர்கள் குழுமியிருந்த ஹால் மீட்டிங்கில் திலகர் உரையாற்றினார். மாலையில் சென்னை கடற்கரையில் பெருங் கூட்டம் வஉசி கலந்து கொண்டார்.

சென்னையில் தொழிலாளர் இயக்கம் வெற்றியோடு முன்னேறி வந்தது. அப்போது கோவையில் ஏழு மில்கள் இருந்தன. தொழிலாளர் இயக்கம் சரியாக ஆரம்பிக்கப்பட வில்லை. கோவை சி.பி.சுப்பையா, வெள்ளியங்கிரிக் கவுண்டர் போன்றவர்கள் சென்னைக்கு சென்று வஉசியை சந்தித்து கோவைக்கு வரும்படி கோரினர். தொழிலாளர் இயக்கத்தை ஆரம்பிக்க எண்ணி வஉசி சென்னையிலிருந்து கோவைக்கு குடிபெயர்ந்தார்.

கோவை மால்மில் ரோட்டில் சுப்பராய ஆச்சாரி வீட்டில் வஉசி வசித்தார். தமிழ்ப் பெரியார் சி.கே.சுப்பிரமணிய முதலியார் வஉசிக்கு பெரிதும் உதவினார். அவர் வஉசி சிறையில் இருந்த காலத்திலும் பெரிதும் உதவியவர். இது குறித்து அறிய "பித்தன் ஒருவரின் சுய சரிதம்" எனும் சிவக்கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியாரின் 219 பக்கங்களைக் கொண்ட 2006 இல் வெளிவந்த நூலை வாசித்து அறியலாம்.

1919– 1922 களில் கோவை வாழ்வின்போது வஉசிக்கு சி.எஸ்.இரத்தின சபாபதி முதலியார், ஆர்.கே.சண்முகம் செட்டியார், என்.எஸ்.இராமசாமி அய்யங்கார், சி.எஸ். இராமச்சந்திரன் செட்டியார், டி.ஏ.இராமலிங்கம் போன்றவர்கள் நண்பர்களாயிருந்தனர்.

அவர்களின் ஒத்துழைப்போடு கோயம்புத்தூரில் தொழிலாளர் பேங்கு அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட் என்ற ஒரு நிறுவனம் கம்பெனி சட்டப்படி பதிவு செய்யப்பட்டது. நல்ல முறையில் இயங்கியது. வஉசி கோவையில் வாழ்ந்து வந்த வேளையில் 1920–1921 களில் கோவை நகரமெங்கும் பிளேக் நோய் கண்டது. வஉசி குடியிருந்த வீட்டிற்குச் சொந்தகாரரான சுப்பராய ஆச்சாரி முதல் நாள் வஉசியுடன் பேசிச் சென்றவர் மறு நாள் பிளேக் நோயால் செத்துப் போனார். ஆர்.கே.சண்முகம் செட்டியார் உதவியுடன் கோவைக்குச் சமீபமுள்ள திருப்பேரூர்பட்டி லிங்க

சாமிகள் ஆசிரமத்தில் வஉசி குடும்பத்துடன் வசித்து வந்தார். தினம் காலையில் ஒற்றை மாட்டு வண்டியில் கோவைக்கு தொழிலாளர் வங்கி மற்றும் பண்டகசாலை நிர்வாகத்தை கவனிக்கச் சென்று மாலையில் வஉசி பேரூருக்குத் திரும்புவார். இதன் பின்னர் தான் திரும்பவும் வழக்கறிஞர் தொழிலை மேற்கொள்ளலாம் என்று வஉசி முடிவெடுத்தார்.

இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறைபோனதால் வழக்கறிஞர் தொழிலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டு பல்வேறு சிரமங்களைக் கடந்த நிலையில் வஉசி தனது வழக்கறிஞர் சான்றிதழை புதுப்பிக்க சென்னை ஹைக்கோர்ட்டில் முயற்சி செய்தார்.

நீதிபதி அப்துல் ரஹீம்

சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் முஸ்லிம் நீதிபதி அப்துல் ரஹீம் (Justice Sir Abdul Rahim) 1908இல் கல்கத்தாவிலிருந்து சென்னைக்கு வந்தார். இவரது நியாயமான நடத்தை நீதிக்கு புறமில்லாத செயல், அசாதாரமான சுதந்திரத் தன்மை, நீதிமன்றத்தில் நேர்மையான மனிதராக, நீதியின் ஆன்மாவாகத் திகழ்ந்தார்.

ஆங்கிலேய நீதிபதிகளுடன் இவருக்கு கருத்து வேறுபாடுகள் சில வேளைகளில் இருந்ததும் உண்டு. நீதிமன்றத்தில் மிகுந்த கட்டுப்பாட்டோடு செயல்பட்டு வந்தார். அநாவசியமாக யாரிடமும் இவர் பேசுவதில்லை. ஆதலால் இவரை எல்லோரும் மதித்தனர். அபரிதமான மரியாதை செலுத்தினர். எந்த முடிவையும் தீர்மானமாக எடுப்பார். அதிலிருந்து விலகவும் மாட்டார். எடுத்த முடிவிலிருந்து அவரை யாரும் மாற்றிட முடியாது. 13 வருடம் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த அவர் 1921இல் ஓய்வு பெற்றார். இவரது காலத்தில் சர் ஜான் வாலிஸ் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்தார். அவர் விடுப்பில் செல்லும் வேளைகளில் அப்துல் ரஹீம் தலைமை நீதிபதி பொறுப்பில் இருந்தார்.

சங்கரன்நாயர்

சர் சித்தூர் சங்கரன்நாயர் 1907 இல் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியானார். நீதி வழுவாதவர், சட்டத்தை மதிப்பவர்,

நேர்மையானவர். உயர்நீதிமன்ற நீதிபதி அப்துல் ரஹிம், சங்கரன் நாயர் இருவரையும் வஉசி சந்தித்தார். சிதம்பரம் என்.தண்டபாணி பிள்ளையும் உடன் சென்றார். வஉசி தனது வழக்கறிஞர் தொழிலை நடத்திட தனது உரிமையை புதுப்பிக்க விண்ணப்பித்தார். இது நடக்காது என்று இராஜாஜி இதில் தலையிட மறுத்து விட்டார். சங்கரன் நாயரும் பின் வாங்கி விட்டார்.

முஸ்லிமாயிருந்தாலும் அஞ்சா நெஞ்சர் அப்துல் ரஹிம் வஉசியை வழக்கறிஞர் வேலைக்கு பரிந்துரை செய்து தானும் மரியாதையாக வங்காளத்துக்கு மாற்றிக் கொண்டு போய் விட்டார்.

இது எனது வாசகங்கள் அல்ல, சில சுவையான குறிப்புகள்

வஉசியைப் பற்றி என்ற கட்டுரையில் என்.தண்டபாணிப் பிள்ளை எழுதியது தான் (விடுதலை வீரர் வஉசி நூற்றாண்டு விழா சிறப்பு மலரில் 1872– 1972 குன்றக்குடி அடிகளார் அவர்களால் வெளியிடப்பட்ட நூல், பக்29)

சென்னை உயர்நீதிமன்றம்

கிபி 1650 பிற்பகுதியில் உருவான மேயர்ஸ் கோர்ட் (Mayor's Court), ரெக்கார்டர் கோர்ட் (Recorder's Court) மாற்றம் பெற்று, 1801இல் மதராஸ் உச்ச நீதிமன்றமாகச் செயல்பட்டது. (Supreme Court of Judicature at Madras) பின்னர் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட 1861ஆம் ஆண்டு இந்திய உயர்நீதி மன்றங்களில் சட்டத்தின்படி இன்றைய சென்னை உயர்நீதிமன்றம் அமைந்தது.

ஒரிஜினல் ஜூரிஸ்டிக்ஷன் (Original Jurisdiction) என்று சொல்லப்படும் முதலேற்பு ஆள் உரிமையை லெட்டர்ஸ் பேடன்ட் (Letters Patent) உரிமை மூலம் பெற்ற மூன்று உயர்நீதிமன்றங்களில் ஒன்று மதராஸ் உயர்நீதிமன்றம்.

எட்வர்ட் ஹாமில்டன் வாலேஸ் ICS

Edward Hamilton Wallace ICS 1924 – 1933 காலகட்டத்தில் ICS சென்னை உயர்நீதிமன்றத் துணை நடுவராக (Pusine Judge) பணியில் இருந்தவர். இவர் தான் வஉசிக்கு மீண்டும் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்காடும் உரிமையை அளித்தார்.

இதற்குப் பின் வஉசி கோவில்பட்டியில் குடியேறினார். வழக்கறிஞர் தொழிலை நடத்தினார். 1932இல் மாவட்ட ஆட்சித் துணைத்தலைவரின் தலைமையிடம் கோயில்பட்டியிலிருந்து தூத்துக்குடிக்கு மாற்றப்பட்டதால் 1932இல் வஉசி தூத்துக்குடியில் குடியேறினார். 1936 நவம்பர் 18 இரவு 11.30 மணியளவில் பூதவுடல் நீத்துப் புகழுடம்பு எய்தும் வரை தூத்துக்குடியில் வாழ்ந்தார்.

கோவில்பட்டி வாழ்க்கை

திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி மாவட்டத்தில் வெள்ளையர் ஆட்சியின்போது கிபி 1822 இல் ஜில்லா கோர்ட் கலைக்கப்பட்டது. 1827இல் திருநெல்வேலியில் கிளை கோர்ட் இருந்தது. அது அப்போதைய மதுரை நீதிமன்றத்தின் கீழ் செயல்பட்டது.

1843 இல் இவைகள் மாற்றி சீரமைக்கப்பட்டன. திருநெல்வேலியில் 1843 இல் திருநெல்வேலி மாவட்ட கோர்ட் அமைந்தது. சிவில் அண்ட் செசன்ஸ் கோர்ட் என்று அப்போது அது அழைக்கப்பட்டது.

1873 இல் சிவில் கோர்ட் சட்டப்படி 'திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் ஆண்டு செசன்ஸ் கோர்ட்' அமைக்கப்பட்டது. இந்த நீதிமன்றத்தின் கீழ் இரண்டு சப் சட்ஜ்கள் தூத்துக்குடியிலும், திருநெல்வேலியிலும் இருந்தார்கள். மாவட்ட முன்சீப் கோர்ட்டுகள் அன்றைய நெல்லை மாவட்டத்தில் ஆறு இடங்களில் அமைந்தன. அம்பாசமுத்திரம், திருநெல்வேலியில் இரண்டு, திருவைகுண்டம், தூத்துக்குடி, கோவில்பட்டியில் முன்சீப் கோர்டுகள் அமைந்திருந்தன.

எனவே வஉசி, நீதிபதி வாலேஸ்வரன் உதவியோடு வழக்காடு மன்றம் செல்லும் உரிமையைப் பெற்று கோவில்பட்டியில் தனது வழக்கறிஞர் தொழிலை நடத்தி வந்தார்.

ஓட்டப்பிராரம் தாலுகாவின் ஆட்சித் தலைமை நகராயிருந்த கோவில்பட்டியில் 1924இல் குடும்பத்துடன் குடியேறி அங்கிருந்த நீதிமன்றத்தில் வழக்குரைக்கும் பணியில் வஉசி தொடர்ந்தார். ஏழைகளின் குரலாக ஒலித்தார்.

அஹமத் சாஹிப் 8.4.1924

கோம்பையிலிருந்த அஹமத் சாஹிப் என்பவருக்கு வஉசி எழுதிய கடிதம் இதோ:

"நான் சிறையிலிருந்தபோது வக்கீல் தொழில் புரியக் கூடாதென்றே கருதியிருந்தேன். வறுமையையும் இவ்வுலகத்து அறிவில்லாதவருடைய இகழ்ச்சியையும் நீக்குவதற்காகவே நான் மீண்டும் அத்தொழிலை தழுவிக் கொண்டேன். மீண்டும்

அத்தொழிலைக் கொள்ளாவிடில் நானும் என் குடும்பத்தாரும் வறுமையால் நசிக்கும் நிலைமையை விரைவில் அடைந்து விடுவோமென்றே தோன்றிற்று அதன் பின்னரே அதனைக் கொண்டேன்”.

வஉசியின் கோவில்பட்டி வழக்கறிஞர் வாழ்க்கையில் அவர் நடத்திய ஒரு சிறு திருட்டு வழக்கு குறித்து பின் வரும் செய்தி சுவையான ஒன்று ஆகும்.

அவரது சொந்த ஊரான ஓட்டப்பிடாரத்திற்கு அருகிலுள்ள சாலிகுளம் காட்டுப்பகுதி எட்டயபுரம் ஜமீன்தாருக்கு உரிமையாயிருந்தது. ஒரு முறை தேவேந்திர குல வேளாளர் சமுதாயத்தை சார்ந்த ஓர் ஏழைத் தொழிலாளி அக் காட்டிற்குள் சென்று திருட்டுத்தனமாக விறகு வெட்டி வந்தார். வழியில் ஜமீன் காவலர்கள் அவரைக் கையும் களவுமாகப் பிடித்துக் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். அவர் மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டது. கோவில்பட்டி நீதிமன்றத்தில், வழக்கு விசாரணைக்கு வந்தது. அத் தொழிலாளி வழியறியாது கோவில்பட்டியிலிருந்த வஉசியிடம் சென்று முறையிட்டார். அவரது நிலைமையறிந்த வஉசி இந்நிகழ்ச்சி நடந்த பிறகு அத்தொழிலாளியின் வீட்டில் விசேஷ நிகழ்ச்சிகள் எதுவும் நடந்ததா என்று கேட்டார். இந்நிகழ்ச்சிக்கு சில வாரங்களுக்கு முன்னர் தனது மகள் வயசுக்கு வந்ததாகவும் ஆனால் வறுமையின் காரணமாக பூப்புனிதச் சடங்கு விழா எதுவும் நடத்தவில்லை என்றும் கூறினார். இது போதும் என்று கூறிய வ.உ.சி. தனது மகளுக்கு சடங்கு நிகழவிருப்பதாக கூறி ஜமீன்தாருக்கு வெற்றிலை பாக்கு வைத்து சடங்கு கொண்டாட, ஜமீன் காட்டில் விறகு வெட்டிக் கொள்ள உத்தரவு கேட்டதாகவும், ‘ஜமீன்தாரும் உத்தரவளித்ததால் தான் விறகு வெட்டியதாகவும் மனு எழுதி அவரது கைரேகையைப் பதிந்து கொண்டார்.’ பின் “சரி, நீ போ, இனி மேல் நீ இங்கு வரவேண்டியிருக்காது. வழக்கு தள்ளுபடியாகிவிடும்“ என்று கூறி அனுப்பினார். அதன்படியே வழக்கும் தள்ளுபடியானது.

வஉசியின் அண்டை வீட்டுக்காரரும் அவரது உறவுக்காரருமான சிவசுப்பிரமணிய பிள்ளை, வஉசியிடம் வழக்கு எவ்வாறு தள்ளுபடியானது என்று கேட்டபோது

வஉசி கூறிய பதில் இதோ, "ஒரு கட்டு விறகுக்காக ஒரு ஜமீன்தார் பெட்டியேறி, அனுமதி வழங்கவில்லை என்று கூற மாட்டார்". விறகு வெட்ட அனுமதித்து ஜமீன்தார் சீட்டு எதுவும் கொடுக்கவில்லையா என்ற கேள்வி எழுந்தால் என்ன செய்திருப்பீர்கள் என்று கேட்டபோது அதற்கும் வஉசியிடமிருந்து உடனடியாகப் பதில் வந்தது. "சமூகம், "சரி போய் வெட்டிக்கோ" என்று உத்திரவிடும்போது இந்த ஏழை 'சீட்டுக் கொடுங்க' என்று எதிர்த்துப் பேச முடியுமா? (வஉசி வாழ்வும், பணியும் ஆ.சிவசுப்பிரமணியன் பக். 92, 93)

வஉசியும் காமராசரும்

காமராசருக்கும், வஉசிக்கும் வயது வித்தியாசம் 31 ஆண்டுகள். காமராசர் 1903-ல் பிறந்தவர்.

வஉசி கோவில்பட்டியில் வாழ்கிற போது அவரது வயது 52 முதல் 60 வயது என்று கணக்கிட்டால் தமது 21 வயது முதல் 29 வயது வரை காமராசர் வஉசியிடம் அறிமுகம் கொண்டிருக்க வேண்டும். வஉசியின் கோவில்பட்டி வீட்டிற்கு காமராசர் வந்து செல்வதை வஉசியின் மகன் வஉசி ஆறுமுகம் நினைவு கூர்ந்திருக்கிறார்.

சென்னையில் வாழ்ந்து வந்த புரட்சிகரமான சிந்தனை கொண்ட இளைஞர்கள் சிலர் வங்காளத்தை ஆண்டு வந்த கவர்னர் சர்ஜான்அண்டர்ஸன் என்பவனைச் சுட்டுக் கொன்று விடுவது என்று முடிவெடுக்கின்றனர். "சுதந்திரச் சங்கு" என்கிற பத்திரிக்கையில் பணியாற்றி வந்த அருணாசலம் என்பவர் மேற்படி கவர்னரைச் சுட்டுக் கொல்கிற பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார். வங்காளத்திலிருந்து சென்னை வந்து தங்கியிருந்த முகுந்த்லால் சர்க்கார் என்பவரே புரட்சிகர சிந்தனைக்கான ஆர்வத்தைத் தூண்டி விட்டவர். அருண் என்கிற அருணாச்சலத்திற்கு உதவியாக எச்.டி.ராஜா, கோவை சுப்பிரமணியம், சபாபதி, கண்ணாயிரம், ஹைதர் அலி என்கிற சங்கர் போன்றோர் இருந்தனர்.

கவர்னர் ஆண்டர்சனைச் கொல்வதற்கு துப்பாக்கி வேண்டுமே! துப்பாக்கி வாங்க பணத்திற்கு என்ன செய்வது? என்று யோசித்த அருணாச்சலம் விருதுநகர் சென்றார்.

ஏற்கனவே கு.காமராஜ் நாடாரும், கே.எஸ்.முத்துசாமி ஆசாரியும் வெள்ளையர்களை எதிர்க்கும் சுதந்திர வீரர்களின் தளபதிகளாய் விருதுநகரில் இருந்தனர். அந்தக் கட்டத்தில் காமராஜ் & கோ என்கிற பெயரில் ஒரு இன்சூரன்ஸ் நிறுவனம் தொடங்கி, இருவரும் நடத்தி வந்தனர். அவர்களிடம் சென்ற அருணாச்சலம் தனது திட்டத்தை இருவரிடமும் கூறி பண உதவி கேட்டார். இருவருமே தங்களால் இயன்ற பண உதவியை பலரிடமும் சேகரித்துக் கொடுத்தனர்.

அருணாச்சலம் உடனே விருதுநகரில் இருந்து பிரெஞ்சு நாட்டு ஆதிக்கத்தில் இருந்த பாண்டிச்சேரி சென்று இரண்டு கைத்துப்பாக்கிகளை வாங்கிக் கொண்டு சென்னை திரும்பினார்.

1933– கோடை காலம், கல்கத்தாவில் இருந்த கவர்னர் சர்ஜான் ஆண்டர்ஸன் சென்னை வந்து, குளு குளு ஊட்டிக்குப் புறப்பட எண்ணியிருந்தான். அருணாச்சலமும் அதே ரயிலில் ஏறி சரியான நேரம் பார்த்து கவர்னரை சுட்டுக் கொன்று விடுவது என்று திட்டமிட்டிருந்தார்.

ஏற்கனவே மணியாச்சி ஜங்சனில் கலெக்டர் ஆஷ் வாஞ்சியால் சுட்டுக் கொல்லப்பட்டது வெள்ளையர்களுக்கு ஞாபகம் இல்லாமலா போய்விடும்? கவர்னர் வரும் முன்னே உளவுத்துறை போலீசுக்காரர்களுக்கு மேற்படி அருணாச்சலத்தின் திட்டம் தெரிந்து விட்டது. இதனால் அவனுடைய நண்பர்கள் 21 பேருடன் அருணாச்சலம் கைது செய்யப்பட்டார். சென்னை சர்வ மாகாண சதி வழக்கு என்கிற பெயரில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கில் காமராசரையும் சேர்க்க போலீசுக்காரர்கள் பலவாறு முயன்றனர். அத்தோடு திருவில்லிபுத்தூர், விருதுநகர் காவல் நிலையங்களில் வெடிகுண்டு வீசியதாகவும் காமராசரையும், முத்துச்சாமியையும் வழக்கில் சேர்த்தனர்.

மேற்கண்ட இந்த கவர்னர் கொலை சதித்திட்ட வழக்கினை, கோவில்பட்டியில் இருந்து வழக்காடி காமராசருக்கு விடுதலை வாங்கித் தந்தவர் வஉசியே ஆவார்.

19 -ஷூ த்து

நிர்

வாதி பக்கம் வக்காலத்து நாமா.

வாதி

PLEADER:-

V. O. Chidambaram Pillai.

Address for Service:-
V. O. CHIDAMBARAM PILLAI,
Pleader, Koilpatti.

சரஸ்வதி பிரஸ், கோவில்பட்டி.—1929.

பொறுமையின் எல்லையில் வாழந்தாலும் இந்த வகையான சீண்டல்களால் வஉசி மிகவும் சிரமப்பட்டார். அத்துடன் வறுமையுடன் போராடினார். நீதிமன்றத்திற்குச் செல்ல ஜட்கா வண்டிக்குக் கூட காசு கொடுக்க வழியில்லாமல் தவித்தார். தனது வக்கீல் கோட் கிழிந்து போயிருப்பதைக் கூட கையால் தைத்துப் போட்டுக் கொண்டார். இப்படிப்பட்ட நிலையிலும் கோவில்பட்டியில் வாழ்ந்த போது தான் 1927–ல் சேலத்தில் நடந்த பிராமணரல்லாதார் கூட்டத்தில் கலந்து கொண்டார். எனவே, "வ.உ.சிதம்பரனார் தான் எனது அரசியல் குரு" என்று தந்தை பெரியாரே கூறியிருக்கிறார்.

(அனிதா கு.கிருஷ்ணமூர்த்தி, தமிழர் தந்தை வ.உ.சிதம்பரனார் பக்.272–275)

தேசபக்கதர்களுக்காக வாதாடிய வஉசி

சேலம் மாநாட்டைத் தொடர்ந்து காங்கிரசில் வ.உ.சி. தீவிரமாகப் பணியாற்றுவதற்குரிய சூழல் தொடர வில்லை.

வக்கீல் தொழிலில் மீண்டும் பணியாற்றத் தொடங்கியக் காலத்தில் தேச பக்தர்கள் மீதான அரசாங்க வழக்குகளில் ஊதியம் வாங்காமல் வாதாடுவதை கடமையாகக் கொண்டிருந்தார் வஉசி.

தூத்துக்குடி தேச பக்தரான அ.மாசில்லாமணிப் பிள்ளை 1930–ஆம் ஆண்டில் உப்பு சத்யாகிரகத்தின் போது கைது செய்யப்பட்டு, அவர் மீது வழக்கு தொடரப்பட்ட பொழுது, அவருக்காக வ.உ.சி. வாதாடினார். இதன் தொடர்பாக மாசில்லாமணிப் பிள்ளை அவர்களுக்கு கோவில்பட்டியில் இருந்து 9.7.1930–இல் எழுதியக் கடிதத்தில் உள்ள பின்வரும் சொற்றொடர்கள் வ.உ.சி.யின் தேசபக்தியுணர்வை எடுத்துரைக்கின்றன.

"தேசாபிமானிகள் பேரில் கொண்டு வரப்படும் ஒவ்வொரு கேசிலும், மிக மிக அற்பக் கேசிலும், எதிர்வாதம் செய்து கவர்ண்மெண்டாரும், கோர்ட்டாரும், போலீசாரும் தேசாபிமானிகள் சம்பந்தமாகச் செய்யும் செயல்களையெல்லாம் உலகறியச் செய்ய வேண்டுமென்பதே என்னுடைய சித்தாந்தம்."

தேச பக்தர்களுக்காக வாதிடுவதில் வ.உ.சி. கொண்டிருந்த ஈடுபாட்டை நேரில் பழகி கண்டறிந்த தியாகி எஸ்.என். சோமயாஜுலு எழுதியுள்ள பின்வரும் பகுதி, இங்கு கவனத்திற்குரியது;

"அன்றொரு நாள் தூத்துக்குடியில் ஒரு கூட்டம், அக்கூட்டத்தில் திரு.எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர், வேலூர் கோடையிடி குப்புசாமி முதலியார், பண்ருட்டி தெய்வ நாயகையா, சிதம்பரம் நைனியப்பப் பிள்ளை முதலியோர் பேசினார். வந்தது, சீற்றம் வெள்ளையனுக்கு; தொடுத்தான் ராஜத்துவேஷக் குற்றச்சாட்டை. இந்தியன் பீனல் கோடு 108–வது செக்ஷன்படி ஜாமீன் வழக்கு, அவ்வழக்கு கோவில்பட்டி சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டுக் கோர்ட்டில் நடந்தது. அவ்வமயம் வழக்குரைஞராக இருந்து வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள், அவ்வழக்கை நடத்தினார்கள். அப்போது நானும், மறைந்த தலைவர் காமராசும், விருதுநகர் முத்துசாமி அவர்களும் வழக்கு நடந்தபோதெல்லாம் கூடவே இருந்து, வழக்குக்கும் தேசபக்தர்களுக்கும் உதவி செய்து வந்தோம். ஆனால், வ.உ.சிதம்பரனார் அவர்கள் வழக்குரைஞராக மட்டும் விளங்கவில்லை; இல்லத்தில் அமுது படைக்கும் அன்ன தாதாவாகவும் விளங்கினார். நீதிமன்றத்தில் வ.உ.சிதம்பரனார் நாவிலிருந்து சரமாரியாகக் கேள்விக் கணைகள் புறப்பட்டன. வழக்கு முடிந்தது. ஜாமீன் கொடுக்கப்பட வேண்டும் எனத் தீர்ப்புக் கூறப்படாததில் வியப்பில்லை! அந்நிய அரசல்லவா! முடிவைக் கேட்டதும் தேசபக்தி மீதூரலால் கண்ணீர் விட்டு அழுது அவர்களைச் சிறைக்கு அனுப்பினார், வ.உ.சி. அவர்கள். இது தான் என் உள்ளத்தைத் தொட்டு மெய்சிலிர்க்க வைத்த சம்பவம்".

(என்.சம்பத், பெ.சு.மணி வ.உ.சிதம்பரம் பிள்ளை பக் 220–221)

"நெல்லை மாவட்ட சுதந்திரப் போராட்ட வரலாறு" எனும் நூலாக 1976 இல் ந.சோமயாஜுலு தந்தார். அதில் "கோவில்பட்டி தாலுகா விடுதலை இயக்க வரலாறு" எனும் தலைப்பில் அவர் தந்துள்ள செய்தி இதோ,

புகழ் பெற்ற தேசபக்தர் எம்.எஸ்.சுப்பிரமணிய ஐயர், பண்ருட்டி தேவநாகையா, சிதம்பரம் நைனியப்ப பிள்ளை,

குப்புசாமி முதலியார் ஆகியோரின் மீது அந்நிய அரசு தொடர்ந்த வழக்கிற்கு வ.உ.சி. அவர்கள் ஆஜரானார்கள். இனாம் அருணாசலபுரம் பெருமாள் ரெட்டியார், கோவில்பட்டி ம.சண்முகம், ஆவுடையநாயகம் பிள்ளை, காந்திமதி செட்டியார் முதலியோர் இவ் வழக்கிற்கும் தேசப்பணி இயக்கங்களுக்கும் பெரிதும் உதவி வந்தனர்.

1930–ல் சோமயாஜுலு அவர்கள் கோவில்பட்டியில் பொதுக்கூட்டத்தில் பேசியதற்காக கைது செய்யப் பெற்று 6 மாதங்கள் தண்டிக்கப் பெற்றார். கோவில்பட்டியில் வைத்து தண்டித்தால் மக்கள் கொதித்தெழுந்து விடுவார்கள் எனப் பயந்து கடம்பூரில் வைத்துத் தண்டித்து மூடு வண்டியில் ஏற்றி ரிசர்வ் போலீஸாரின் காவலுடன், திருப்பரங்குன்றத்தில் நிற்காத ரயிலை நிறுத்தி மதுரை கொண்டு சென்றனர். 1930ல் போராட்டம் உச்சநிலையை அடைந்துவிட்டது. பலர் கைது செய்யப் பெற்று தண்டிக்கப்பட்டார்கள். பலர் சித்திரவதைக்குள்ளாயினர். பலர் மிகவும் அவதியுற்றனர். 1931–ல் சோமயாஜுலு விடுதலையானார். கோவில்பட்டியில் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து இப்போதுள்ள பஸ்நிலையம் வரை மக்கள் ஆவலோடு கூடி நின்று வரவேற்றனர். எங்கும் அலங்கார வளைவுகளும் மாலைகளும், பன்னீரும் சோமயாஜுலுவைத் திக்குமுக்காட வைத்துவிட்டன.

1931–ல் கள்ளுக்கடை, சாராயக்கடை மறியல், அன்னியத் துணி பகிஷ்கரிப்புப் போராட்டம் ஆரம்பமானது. போராட்டம் சோமயாஜுலுவின் தலைமையில் வெகு வேகத்தோடு நடைபெற்றது. தாலுகா முழுவதும் குடிப்பதற்கு ஒருவர் கூடக் கிடையாது என்ற நிலை உருவாகிவிட்டது. இதனால் ஆத்திரம் கொண்ட அரசு, காந்தி – இர்வின் ஒப்பந்தத்தை மீறி சோமயாஜுலுவையும் மற்றும் பலரையும் கைது செய்து கொடுமைப்படுத்தியது. இவர்கள் நடத்திய இம்மறியல் போராட்டங்களுக்குப் பெண்களும் வியாபாரிகளும் மூடை மூடையாக அரிசி, பருப்பு, நெய் முதலியன கொடுத்து உதவினர். சு.கந்தப்பிள்ளை, திருப்பதி நாடார், தனுஷ்கோடி செட்டியார், கைலாசம் பிள்ளை மற்றும் பலர் வாரி வாரி வழங்கினர். 'கோபாலன் மோட்டார் சர்வீஸ்' பாலசுப்பிரமணியம் யாதவ் பலமான ஆதரவு அளித்தார். பரமசிவம் செட்டியார் வேண்டிய

சகல வசதிகளையும் தன் ஆசிரமத்திலேயே இலவசமாக மிகுந்த அக்கரையோடு செய்து கொடுத்தார்.

கழுகுமலையிலும் தீனதயாளலாலா, சுப்பிரமணியன், கணபதி தேவர், சங்கரலிங்க மேஸ்திரி, பூசப்பிள்ளை, கொளக்கட்டாக்குறிச்சி சங்கரப்ப நாயக்கர் முதலானோர் மிகுதியும் பண உதவி செய்தனர். சித்திரம்பட்டி சுப்பாநாயுடு, முன்னாள் எம்.எல்.ஏ. அவர்களும் மற்றும் பலரும் (பெயர் கூறின் விரியும்) ஆர்வத்தோடு பலவித உதவிகள் செய்தனர். மூதறிஞர் ராஜாஜி அவர்கள், “மறியல் செய்தவர்கள், காந்தி – இர்வின் ஒப்பந்தத்தை மீறி போலீசாரால் கைது செய்யப்பட்டனர்” என்ற விவரத்தைக் காந்திஜிக்குத் தெரிவித்தார். இந்த வழக்கைப் பார்வையிட ராஜாஜி அவர்கள் கோவில்பட்டிக்கு இருமுறை விஜயம் செய்தார். எனவே, 1931 இறுதியில் காந்திஜி லண்டனில் இருந்து திரும்பிய பின், நாட்டில் காந்தி – இர்வின் ஒப்பந்தத்தை எவ்வளவு தூரம் மீறப்பட்டுள்ளன என குற்றஞ் சாட்டி கூறுகையில் கோவில்பட்டி 3–வது இடம் பெற்றது.

தேசபக்தர் இளங்கோ மீது தொடரப்பட்ட வழக்கிற்கும் ‘கொக்கு பறக்குதடி பாப்பா’ என்ற பாடலை மேடைகளில் பாடியதற்காக விஸ்வநாததாஸ் கைது செய்யப்பட்ட வழக்கிற்கும் வ.உ.சி.யே ஆஜரானார். இவ்விரு வழக்குகளும் இப்பூமியிலேயே நடைபெற்றன. இவ்வாறு சோமயாஜுலு கூறியுள்ளார்.

வஉசி கோவில்பட்டியில் தனது இரண்டாவது மகன் வஉசி உலகநாதனுக்கு திருமணம் செய்துவைத்திட விரும்பினார். இதுகுறித்து ஏழெட்டு வருடங்கள் வஉசியோடு உடனிருந்தவரும் 1922 சத்தியாக்கிரக இயக்கத்தில் மூன்றரை வருடங்கள் சிறையிலிருந்தவருமான சிதம்பரம் என். தண்டபாணி பிள்ளை குறிப்பிடுகிறார்.

கோவில்பட்டியில் சென்று பிள்ளையவர்கள் தொழில் நடத்தும்போது எங்களூர் நயினியப்ப பிள்ளை, தேவநாகய்யா போன்றவர்களுக்கு இலவசமாக வாதாடி சில வழக்குகளில் சிறைத் தண்டனையை தப்புவித்தார். கோவில்பட்டியில் பக்கத்து வீட்டிலிருந்த விருதை சிவஞான யோகிகளுடன், 292 சைனா பஜாரில் நான் வைத்திருந்த கதர் கடை, தண்டபாணி வைத்திய சாலை இரண்டிற்கும் விஜயம் செய்து நல்ல நற்சாஷி பத்திரங்களை எழுதி வழங்கி என்னை ஆசீர்வதித்தார்.

என் மனைவி கொடுத்த காப்பியைச் சாப்பிட்டு, 'அண்ணியார் காப்பியின் சுவையைப் போல் கண்டதில்லை' என்று ஹாஸ்யம் ததும்பக் கூறிப் போவார்.

அவர் தம் மகனுக்குத் திருமணம் செய்விக்கப் பணம் இல்லாமல் கஷ்டப்பட்டு ரூ.10000 வேண்டுமென எனக்கு எழுதியிருந்தார்.

அப்போது டாக்டர் பி.வரதராஜூலு நாயுடுவிடமிருந்து எனக்கு ரூ.20000 பெற வேண்டியிருந்தது. இதை டி.எஸ். சொக்கலிங்கம் பிள்ளை கொடாமல் பொறாமையுடன் தடுத்துவிட்டார்.

இதை வசூல் செய்ய நான் சட்டமுறைகளால் முயன்றபோது. வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள் தடுத்து நாயுடுவும் தேசபக்தர், தமிழ்நாடு பேப்பர் நஷ்டமடைந்துவிட்டது. பொறுத்துப் பாருங்கள் என்றார். அப்படியே பல வருஷங்கள் பொறுத்துப் பெற்றேன்.

ஒரு பாக்கெட் வாட்ச், 5 பவுன் செயின், 3 பவுன் மெடல் அடங்கிய ரூ.300க்குள் ஒரு செட்டை பி.ஆர். சன்சில் வாங்கி வ.உ.சி.க்கு அனுப்பினேன். பெற்றுக் கொண்டு நன்றியறிவித்தார்கள். அம்மெடலும் செயினும் அவர் மூத்த பிள்ளையிடமிருப்பதாக அவர் கூறினார்.

(தி.வ. மெய்கண்டார் ஆசிரியர், இளந்தமிழன், ஆகஸ்ட் 2015, பக். 39,40)

வஉசியின் கோவில்பட்டி வாழ்க்கையின் போது பிறந்தவர் தான் வஉசி வாலேஸ்வரன் தனக்கு மீண்டும் நீதிமன்றத்தில் வாதாடும் உரிமையை வழங்கிட்ட உயர்நீதிமன்ற நீதிபதி வாலேஸ் பெயரைத் தாங்கியவர்.

தனது இளமைக் கால பள்ளி வாழ்வைப் பற்றி வாலேஸ்வரன் 5.9.2014 சைவ நெறி இதழின் வாயிலாகத் தெரிவித்த செய்தி இதோ;

நாங்கள் குடியிருந்த வீட்டிற்கு மிக பக்கத்திலேயே தொடக்கப்பள்ளி ஒன்று இருந்தது. இடைவேளையின் போது வீட்டிற்கு வந்துவிடலாம். அவ்வளவு பக்கம். அதில் நான்

படித்தேன். மாதேவன் பிள்ளை என்பவர் தலைமை ஆசிரியராக இருந்தார். நான் ஒன்றாம் வகுப்பு படிக்கும்போது எனக்கு ஆசிரியர் சந்தன முத்து பிள்ளை.

ஒரு நாள் வகுப்பு நடந்து கொண்டிருக்கும்போது சிறுநீர் கழிக்க போக வேண்டும் என்றேன். ஆசிரியர் உட்கார் என்றதோடு கம்பை வைத்து என்னை அடித்துவிட்டார். முதுகில் இரத்த காயம்.

பின்னர் இடைவேளை விட்டவுடன் எனது வீட்டிற்கு அழுது கொண்டே வந்தேன். வீட்டில் பிராது எழுதிக் கொண்டிருந்த என் தந்தையார் ஏன் அழுகிறாய் என்றார். விவரத்தை கூறினேன். என் சட்டையைக் கழற்றிப் பார்த்தார். அடித்ததற்கான அடையாளம் இரத்தம் தெரிந்தது.

உடனே என்னை அழைத்துக் கொண்டு பள்ளிக்கு வந்து தலைமை ஆசிரியரிடம் முறையிட்டார். குழந்தைகளை கண்டிக்க வேண்டியதுதான். இரத்தம் வருகிறப்படி அடிக்கலாமா? நான் பள்ளி கல்வி அதிகாரிக்கு புகார் செய்யப் போகிறேன் என்று கூறிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டார்.

மாலையில் எங்களது வீட்டிற்கு தலைமை ஆசிரியருடன் வந்த எனது வகுப்பாசிரியர், “ஐயா புகார் செய்தால் என் வேலை போய்விடும். தயை செய்து காப்பாற்றுங்கள். இனி, யாருக்கும் இப்படி நடக்காது” என்றார். அவர்களிடம் புத்திமதி கூறி அனுப்பி வைத்தார் என் தந்தை.

எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்த வாலேஸ்வரன் 8 வயதாக இருக்கும்போது வஉசி மறைந்தார்.

வஉசியின் பேத்தியும் வாலேஸ்வரனின் மகளுமான சகோதரி திருமதி. மரகத மீனாட்சி ராஜா தெரிவித்த செய்தி இதோ,

தொடரமுடியாத கல்லூரி படிப்பு

எனது தந்தை பள்ளி இறுதித் தேர்வில் பள்ளியிலேயே அதிக மதிப்பெண் பெற்று தங்கப் பதக்கம் பெற்றவர். அதனால் அவரது ஆசிரியர்களும், உறவினர்களும் அவர் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று விரும்பினர். கட்டாயப்படுத்தினர்.

அதனால் எனது தந்தை தனது அக்காள் கணவருடன் திருநெல்வேலிக்குச் சென்றார்கள். அக்காலத்தில் தூத்துக்குடியில் ஆண்கள் கல்லூரி கிடையாது. திருநெல்வேலியில் தூய சவேரியார் கல்லூரியில் சேர்வதற்காக அக்கல்லூரியின் தலைவர் மதிப்பிற்குரிய தந்தை செக்யூராவைச் சந்தித்தனர். அவர் எனது தந்தையின் மதிப்பெண்களைப் பார்த்துவிட்டு இரண்டு மாதம் தாமதமாகச் சேர்ந்தாலும் முதல் பிரிவில் (ஃபஸ்ட் குரூப்) அரைச் சம்பளத்தில் சேர்த்துக் கொள்வதாக கூறினார். எனது தந்தையும் சேர்ந்து படிக்க ஆரம்பித்து விட்டார்.

கல்லூரித் தலைவர் எனது தந்தையை ஒவ்வொரு துறைத் தலைவரிடமும் அறிமுகப்படுத்தி, " நன்கு கவனீத்தீர்கள் என்றால் இவன்அதிக மதிப்பெண் பெற்று கல்லூரிக்குப் புகழ் பெற்றுத்தருவான்" என்று கூறினார்.

ஆனால் கல்லூரித் தங்கும் விடுதியில் இடம் இல்லை. ஆகவே பாளையங்கோட்டையில் புதுப்பேட்டைத் தெருவில் ஓர் அறையில் தங்கி விடுதியில் சாப்பிட்டுப் படித்தார்கள். இரண்டு மாதங்கள் படிப்பதற்குள் செலவு மிக அதிகமாகிவிட்டது.

அவரது தாயாரைச் சந்தித்து நிலவரத்தைக் கூறினார். அவரது தாயார் மகனின் விருப்பம் தான் முக்கியம் என்று கூறினார். ஆனால் குடும்பத்தை முழு வறுமையில் தள்ளி தனது படிப்பைத் தொடர எனது தந்தை விரும்பிவில்லை.

கல்லூரிக்குச் சென்று தலைவர் அவர்களிடம் விவரம் கூறியபோது, அவர் மிக மிக வருத்தப்பட்டிருக்கிறார். புத்தகங்களில் பெயர் எழுதாததால் அவற்றை விலைக்கு விற்றுவிட்டு எனது தந்தை தூத்துக்குடி திரும்பிவிட்டார்.

வஉசி வாலேஸ்வரன் பணியாற்றிய விவரங்கள்

எனது தந்தை 1928-ல் பிறந்தார். அவரது 3வது வயது வரை தாத்தா கோவில்பட்டியில் வசித்தார்கள். பின் தூத்துக்குடிக்கு இடம் மாறினார்கள். முதலில் கீழரதவீதியில் வசித்தார்கள். பின்பு மேலப்பெரிய காட்டன் தெருவில் ஒரு மிகப் பெரிய வீட்டில் வாடகைக்கு குடிபெயர்ந்தார்கள். அங்கேதான் இருந்தார்கள். தாத்தா இறக்கும்போது அப்பாவுக்கு 8 வயது.

முதல் வகுப்பிலிருந்து 8வது வரை அந்த வீட்டிற்கு எதிரில் இருந்த சினாவானா நடுநிலைப்பள்ளியில் படித்தார்கள். பின்னர் 9ஆம் வகுப்பிலிருந்து 11ஆம் வகுப்பு வரை புனித சவேரியார் உயர்நிலைப்பள்ளியில் படித்தார்கள்.

1944 மார்ச்சில் பள்ளி இறுதித் தேர்வு எழுதினார்கள். மொத்த மதிப்பெண் பெற்றதில் எனது தந்தையார் தான் பள்ளி முதல் மாணவர். தங்கப் பதக்கம் பெற்றார். பாடங்களுக்காகவும் பரிசுகள் பெற்றார். தேர்வு எழுதியவுடன் விடுமுறையிலேயே வேலைக்குச் சென்றுவிட்டார்.

1944 ஏப்ரல் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாட்சியரின் கீழ் வருவாய் பணியாளர். இது நிலவரி கட்ட இயலாதவர்களின் பொருட்களை ஜப்தி செய்யும் பணி. இது மனதுக்கு வருத்தம் தந்ததால் மீண்டும் தூத்துக்குடிக்கு வந்தார்கள்.

திருச்செந்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் சிலகாலம் எழுத்தர் பணி. பின் தூத்துக்குடியிலேயே உணவுப் பங்கீட்டு அலுவலகத்தில் எழுத்தர் பணி. 1945–இல் உணவுக்கட்டுப்பாட்டு நீங்கியவுடன் இத்துறையில் பணிபுரிந்த அனைவருக்கும் வேலை போனது.

மதுரையிலிருந்த வணிகவரி அலுவலகத்தில் மனுச் செய்து சிவகங்கை உதவி வணிகவரி அலுவலகத்தில் பணி. பின் புதுக்கோட்டையில் அதே துறையில் ஓராண்டு பணி.

பின் சகோதரிக்காக வேலையை விட்டு விட்டு அக்காள் கணவரின் வணிகத்தில் உதவி செய்தார். 1946 இல் தமிழ்நாடு அரசுத் தேர்வாணையத்தில் தேர்வு எழுதி 1947 மே9 அன்று மதுரை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணி. 3 மாதத்தில் அவர்களே வணிக வரித்துறைக்கு மாற்றி விட்டனர்.

அத்துறையின் நடவடிக்கைகள் அவர் மனதுக்குப் பிடிக்காததால் தொழிலாளர் துறைக்கு விண்ணப்பித்து உதவி தொழிலாளர் ஆய்வாளராகப் பணி ஏற்றார். துணை ஆய்வாளர், துணை தொழிலாளர் ஆணையாளர் என்று பல பதவி உயர்வுகள் பெற்று 1986–ல் பணி ஓய்வு பெற்றார்.

இவரது துணைவியார் அலமேலு அம்மாள்; பண்பரசி. இவருக்கு சிவா. சிதம்பரம், சிவா. செல்வராமன் என்ற இரண்டு ஆண் மக்கள். தனது தாத்தா பிறந்த நாளைக்கு ஒரு நாளைக்கு முன்பு 4.9.1965இல் பிறந்தவர் திருமதி. மரகத மீனாட்சி ராஜா என்ற மகள்.

வாலேஸ்வரன் தொழிலாளர் துறையில் பணியாற்றி வந்தார். திருமதி. மரகத மீனாட்சி ராஜா தனது பள்ளிப் படிப்பை தமிழகத்தில் 11 பள்ளிக்கூடங்களில் படித்தார். அந்த அளவிற்கு தமிழகத்தின் பல பகுதிகளில் பணியாற்றியவர் வாலேஸ்வரன்.

மதுரை காமராசர் பல்கலைக்கழக அஞ்சல் வழிக் கல்வி மூலம் பி.காம்., பட்டப் படிப்பை முடித்தவர் திருமதி. மரகத மீனாட்சி ராஜா.

இவரது கணவர் என். சாத்தையா ராஜா பாங்க் ஆப் பரோடாவில் மேலாளராகப் பணிபுரிகிறார். இவர்களது மகள் ராஜேஸ்வரி பொறியியல் பட்டம் பெற்று சென்னை இன்போசிஸ் நிறுவனத்தில் பணியாற்றுகிறார்.

இவரது கணவர் ப.இசக்கி ராஜா எம்.பி.ஏ., இவர்களது திருமணம் 21.4.2011 வியாழக்கிழமை மதுரை மாஸ்டர் மஹாலில் வைத்து நடைபெற்றது.

மரகத மீனாட்சி ராஜாவின் மகன் மகேஸ்வரன் தஞ்சை சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தில் பி.டெக். படித்தார்.

மரகத மீனாட்சி பிரெஞ்சு மொழியில் எம்.ஏ., பட்டம் பெற்று எம்.பில்., பட்டத்திற்காக வஉசியின் ‘மெய்யறம்‘ நூலின் 500 வரிகளை பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்துள்ளார். அவர்கள் மொழி பெயர்ப்புப் பணியினை செய்து கொண்டிருக்கும் போது வஉசி வாலேஸ்வரனார் தொலைபேசியில் என்னிடம் மெய்யறத்தில் சில வரிகள் கிடைக்கவில்லை.

பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்துக் கொண்டிருக்கும் மகளுக்காக குறிப்பிட்ட சில வரிகள் அனுப்பி வைத்திடக் கோரினார்கள். அடியேனும் அவர்களுக்கு அதனை அனுப்பி வைத்தது பசுமையாக இன்னும் நிழலாடுகிறது.

2010 செப்டம்பர் 5 வஉசி பிறந்த நாளில் 'இளைஞர்கள் முன்னேற வ.உ.சி.' காட்டும் நல்வழிகள் (மெய்யறம்) நூலின் 112 பக்கங்களில் மரகத மீனாட்சி ராஜா வெளியிட்டு தனது தாத்தா வஉசிக்கு பெருமை சேர்த்தார்.

அந்த நூலின் சில பகுதிகளை 40 பக்கங்களில் தனி நூலாக்கி 'மா மனிதர் வ.உ.சி.' எனும் தலைப்பில் தனது புதல்வி ராஜேஸ்வரியின் திருமணத்தின்போது தனது மகன் எஸ்.மகேஷ்வரன் வழங்குவதாக இலவசமாகவே வழங்கி வஉசிக்கு பெருமை சேர்த்தார் பேத்தி மரகத மீனாட்சி ராஜா.

பேத்தியே தாத்தா மீது இவ்வளவு பக்தியும் பாசமும் கொண்டிருந்தார் என்றால் தந்தை வாலேஸ்வரனைப் பற்றி சொல்லிடவா வேண்டும்.

வரலாற்று நிகழ்வுகள்

தனது சிறிய தாத்தா வஉசி மீனாட்சி சுந்தரம் குறித்து திருமதி. மரகத மீனாட்சி ராஜா கூறுவதாவது,

வஉசி மீனாட்சி சுந்தரம்

வஉசியின் சகோதரர் வஉசி மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஒரு காலத்தில் மிகச் சிறப்பாக பல சரக்குக்கடை நடத்தி வந்தார். வஉசிக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதித்ததைக் கேள்விபட்டு அவரது மனநிலை பாதிக்கப்பட்டது. அன்றிலிருந்து அவர் ஓரிடத்தில் இருக்க மாட்டார். தமிழ்நாடு முழுவதும் சுற்றிக்கொண்டிருப்பார். வஉசி தூத்துக்குடியில் ஓர் உணவு விடுதியில் அவருக்கு சாப்பாட்டிற்கு நிரந்தர ஏற்பாடு செய்தும் தூத்துக்குடியில் தங்கமாட்டார். வஉசி இறந்த பிறகும் ஐந்து வருடங்கள் உயிருடன் இருந்தார். சில சமயங்களில் எனது ஆச்சி (வஉசி) வீட்டிற்கு வருவார்களாம். அப்பொழுது எனது தந்தைக்கு (வஉசி வாலேஸ்வரன்) அன்பாக இரண்டனா, நாலணா கொடுப்பார்களாம்.

இறுதியாக மாட்டு வண்டியில் ஏறி ஆச்சி வீட்டிற்கு வந்திருக்கிறார்கள். பாதியில் உயிர் போய்விட்டது. எனது தந்தையார் இறுதிச் சடங்குகள் செய்தார்கள். (அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்து இறந்து விட்டது) எனது தந்தை அப்பொழுது உயர்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்தார்களாம்.

வஉசியின் சகோதரி மாலையம்மாள். அவருக்கு திருமணமான சில காலத்தில் அவர் கணவர் இறந்துவிட்டார். குழந்தைகளும் இல்லை. எனவே வஉசி ஓட்டப்பிடாரத்தில் உள்ள வீட்டில் தங்க வைத்து நிலத்தைக் குத்தகைக்கு விட்டு அந்தப் பணத்தைச் செலவிற்கு வைத்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்திருந்தார். வஉசியின் சகோதரி அப்படியே வாழ்ந்து வந்தார்.

எனது தந்தை தூத்துக்குடியில் பணியாற்றும் போது அவருக்கு உடல்நலமில்லாமல் போனது. எனது தந்தை தினமும் சென்று பார்த்து வருவாராம். ஓட்டப்பிடாரத்தில் வசித்த எனது அத்தையும் பார்த்துக் கொண்டாராம். ஆனால் ஒரு வாரத்தில்

அவர் இறந்துவிட்டார். எனது தந்தைதான் அவருக்கும் கூட இருந்து ஈமக்கிரியைகள் செய்தாராம்.

வஉசி வாலேஸ்வரனார் குடும்பப் பொறுப்புக்களைத் தன் தலையில் சுமந்திடச் செய்தவகளை இவ்வாறு குறிப்பிடுகிறார் திருமதி.மரகத மீனாட்சி ராஜா.

எத்தனை எத்தனையோ நிகழ்வுகள்!
நினைவிற்கு வரும் சில நிகழ்வுகள் இதோ:

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் (ஓய்வு) பேராசிரியர் திரு.சு.அழகேசன் அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவர்கள் சொன்னார்கள்,

பேராசிரியரான அழகேசனின் உறவினர் ஒருவர் மதுரையில் வங்கியில் மேலாளராக இருக்கிறார். ஒரு நாள் அந்த வங்கிக்கு தனது குடும்ப நகையை அடகு வைத்திட திரு.வாலேஸ்வரன் ஐயா அவர்கள் சென்று உள்ளார். அப்போது அங்கிருந்த நகை மதிப்பீட்டாளர் (அப்ரைசர்) நேரம் ஆகிவிட்டது. நாளை வாருங்கள் என்றாராம். திரு.வாலேஸ்வரன் ஐயா அவர்களும் சரி என்று வெளியே செல்லும் போது... மானேஜர் பார்த்து விட்டார். உடனே மானேஜர் சென்று ஐயா அவர்களை அழைத்து வந்து தனது அறையில் அமர்த்தி விட்டு நகை மதிப்பீட்டாளரை அழைத்து ஐயா அவர்கள் வ.உ.சி.யின் மகன் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதற்கு மதிப்பீட்டாளர் "ஐயா மன்னிக்கவும், உங்களைப் பற்றி தெரியாமல் கூறிவிட்டேன். என்றார். அதற்கு வாலேஸ்வரன் ஐயா அவர்கள் நான் தான் தாமதமாக வந்துள்ளேன். என் மீது தான் குற்றம். உங்கள் மீது குற்றம் இல்லை. நாளைக்கு வருகிறேன் என்று புறப்பட்டார்கள். ஆனால் மானேஜர் அவர்கள் திரு.வாலேஸ்வரன் ஐயா அவர்களை இருக்கச் சொல்லி எனக்கு அதிகாரம் இருக்கிறது என்று கூறி நகையை வாங்கிக் கொண்டு பணத்தைக் கொடுத்து அனுப்பினார்கள்".

பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானத்தில் வஉசியின் கற்சிலை ஒன்று இருந்தது. அது தற்போது பாளை. ஹைகிரவுண்டு மருத்துவமனை செல்லும் சாலையில் தூய சவேரியார் கல்லூரிக்கு கிழக்கே அமைந்துள்ள மனகாவலம் பிள்ளை வாசக சாலை மைதானத்தில் நிறுவப்பட்டிருக்கிறது.

1996–2000 கால கட்டங்களில் அந்தச் சிலையினை ஆண்டு தோறும் தமிழன்பர் கா.சுப்பிரமணியன் நீரால் கழுவி, எண்ணெய் பூசி, குங்குமம் இட்டு பூமாலை அணிவிப்பார். அநேகமாக அது செப்டம்பர் 5 ஆம் நாள் வஉசி பிறந்த நாளாக இருக்கும். அந்த நாளில் வாலேசுவரன் அவர்களை முதன் முதலில் நெல்லைக்கு அழைத்து, வஉசி சிலை முன்பே சிறிய நிகழ்வு நடத்தி வஉசி குறித்த நூலை வெளியிட்டேன்.

திறனாய்வுத் தென்றல் திகசி, தோப்பில் முஹம்மது மீரான், பொன்னீலன், ஐ.சாமுவேல், டி.வி.தங்கசாமி, மருந்தாளுநர் ஜெயசிங், ஜெ.பிரின்ஸ் போன்றவர்களும் பங்கேற்பார்கள். இவ்வாறு சிறு சிறு எளிய நிகழ்வுகளை நெல்லையில் வாலேசுவரனைக் கொண்டு அடியேன் நடத்தினேன்.

தூத்துக்குடியில் ஏ.பி.சி.வி. சொக்கலிங்கம் அவர்கள் ஏற்பாடு செய்த பாராட்டு விழா அய்யா வாலேஸ்வரனுடன் அடியேனும் சென்றேன். சைவநெறி காந்தியும் வந்திருந்தார். பாராட்டு விழா முடிந்தது.

சிற்றுண்டி பரிமாறப்பட்டது. தலா ஒவ்வொருவருக்கும் மிக அதிகமாகவே பலகாரங்கள் வைக்கப்பட்டன. அப்போது வாலேசுவரன் என்னைப் பார்த்து சொன்னார்கள் யோவ்! “இவ்வளவையும் நம்மாலே சாப்பிட முடியாது. ஒருவருக்குரியதை பார்சல் செய்து உமது பையில் வையும்.” எனக்குள்ளதை நாம் இருவரும் சாப்பிடுவோம் என்றார்கள். அப்படியே செய்தோம்.

எந்த சிறு பொருளையும் வீணாக்காமல், அதனைப் பிறருக்குப் பயன்படுத்தக்கூடிய காரியங்களைச்செய்திடும் பண்பாளர் வாலேஸ்வரன் அய்யா அவர்களிடமிருந்து அன்றிலிருந்து அக்கொள்கையை தொடர்ந்து பின்பற்றி வருகிறேன்.

திருநெல்வேலி பொருட்காட்சி மைதானத்தில் கப்பலோட்டிய தமிழர் வஉசியின் மணி மண்டபத்தை 18.6.2005 சனிக்கிழமை காலை 11 மணிக்கு முதல்வர் செல்வி ஜெயலலிதா திறந்து வைப்பதாக அறிவிக்கப்பட்டது. 23.6.2005ஆம் நாள் என பின்பு தேதி மாற்றப்பட்டது.

மணி மண்டபத்தில் காட்சிக்காக அடியேன் வஉசி குறித்து எழுதிய நூல்களை வைத்தார்கள். நான் மறுமலர்ச்சி தி.மு.கழகத்துக்காரன் என்பதால் அடியேன் பெயரை மறைத்து காட்சிக்காக வைத்தார்கள்.

வஉசியின் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரே மகன் வாலேஸ்வரனை அந்நிகழ்ச்சிக்கு அழைக்க அரசு எண்ணி தாசில்தார் வாலேஸ்சுவரன் அய்யாவுடன் தொடர்பு கொண்டார்.

விழாவிற்கு அரசு ஜீப்பில் அழைத்துச் சென்று திரும்ப இல்லம் கொண்டு விட்டு விடுவதாகவும் சொன்னார்.

அப்போது வாலேஸ்வரன் அவர்கள் நெல்லை வெள்ளந்தாங்கி பிள்ளையார் கோவில் தெருவில் இருக்கும் குளத்தூர் ஹவுஸில் வாழும் மதிமுக அரசியல் ஆலோசனைக்குழு உறுப்பினர் C.A.R. குட்டி @ சண்முக சிதம்பரத்துடன் தொடர்பு கொண்டார்கள்.

வஉசி மணி மண்டபத் திறப்பு விழா நிகழ்ச்சிக்கு பஸ்ஸிலேயே மதுரையிலிருந்து வந்தார்கள்.

அப்போது வண்ணார்பேட்டையில் இப்போது அமைந்திருக்கும் சபாநாயகர் செல்லப்பாண்டியன் மேம்பாலம் கிடையாது. இப்போது இருக்கும் ஹோட்டல் ராம்பிரசாத் அருகே ஒரு பஸ் நிறுத்தம். அங்கு அய்யா அவர்களின் வருகைக்காக காத்திருந்தேன். குறிப்பிட்டபடி பஸ்ஸில் வாலேஸ்வரன் வந்தார். அவர்களை அழைத்துக் கொண்டு குளத்தூர் ஹவுஸ் சென்றேன்.

அங்கு குளத்தூர் ஜமீன்தார் C.A.ரத்தின சபாபதி அவர்கள் இருந்தார்கள். அவர்களுடன் பல மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்போதைய உரையாடலின்போது C.A.R. குட்டி @ சண்முக சிதம்பரம் அய்யா அவர்களிடம் கேட்டார்கள்.

“உங்கள் அப்பா மில் ஸ்டிரைக் நடக்கும்போதும், கப்பல் கம்பெனி துவங்கும்போதும் பிள்ளைகளிடம் நகைகளைக் கழட்டி வாங்குவது போன்று திரைப்படத்தில் காட்டப்படுகிறதே

நீங்கள் என்ன செய்தீர்கள்? உடனடியாக நகைகளை கழட்டிக் கொடுத்தீர்களா?" என்று கேட்டார்கள்.

அதற்கு வாலேஸ்வரன் சிரித்துக் கொண்டே நண்பரே உங்களுக்கு வரலாறு தெரியவில்லை, 'அப்போது நான் பிறக்கவேயில்லையே' என்றார்கள். இது மாதிரி எத்தனை எத்தனையோ உரையாடல்கள்.

இரவு சிற்றுண்டி குளத்தூர் ஹவுஸில் குளத்தூர் ஜமீன்தார் C.A.ரத்தின சபாபதி, வாலேஸ்வரன், அடியேன் சாப்பிட உட்கார்ந்தோம். திருமதி குட்டி அவர்கள் உணவு பரிமாறினார்கள். இட்லி, சூடான தோசை, எள் பொடி எல்லாம் பரிமாறப்பட்டது. பொடியை வைத்ததும் C.A.ரத்தினசபாபதி எண்ணெய் ஊற்றச் சொன்னார்கள்.

"இரவு 9 மணியிலும் திருநெல்வேலி பிள்ளைமார் எண்ணெய் இல்லாமல் சாப்பிடமாட்டீர்களே?" என்று அய்யா அவர்கள் நகைச்சுவையோடு அப்போது சொன்னதை இன்றும் எளியேன் மறக்கவில்லை.

மதிதா இந்து மேல்நிலைப்பள்ளியில் திருநெல்வேலி சந்திப்பில், 22.8.2008 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு, மறுமலர்ச்சி மையம் என்.ஜி.ஓ. காலனி திருநெல்வேலி என்ற அமைப்பின் சார்பில் எளியேன் பதிப்பித்த வஉசி சிவஞான போத உரை நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. C.A.R. குட்டி @ என்ற சண்முக சிதம்பரம் வரவேற்புரை ஆற்றினார். பெருங்குளம் செங்கோல் ஆதினம், தவத்திரு திரு. கல்யாண சுந்தரம் சுவாமிகள் தலைமை ஏற்றார்கள். நெல்லை மாவட்ட மதிமுக செயலாளர் ப.ஆ.சரணவன், நெல்லை மாநகர மதிமுக செயலாளர் கே.எம்.ஏ.நிஜாம், மு.சுப்புரத்தினம் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

நூல் வெளியீட்டு விழா

தமிழர் தலைவர் வைகோ சிறப்புரை ஆற்றினார்கள். நூலின் முதல் பிரதியை வஉசி வாலேஸ்வரன் பெற்றுக் கொண்டார்கள். மறுமலர்ச்சி மைய இயக்குனர் பா.பாஸ்கர நாராயணன் நன்றி உரையாற்றினார்.

விழாவில் இப்போதைய நெல்லை மாநகர மாவட்டச் செயலாளர் எஸ்.பெருமாள், மாநில மாணவர் அணிச் செயலாளர் தி.மு.இராஜேந்திரன், வழக்கறிஞர் தீன், மாநில விவசாய அணி மாநில துணைச் செயலாளர் ப.கல்லத்தியான், பாடகர் ஜி.எஸ்.அபுபக்கர், சுந்தரலிங்கம், புக் ரவி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கலிக்கோ பைண்ட் செய்யப்பட்ட வஉசியின் சிவஞான போத உரை நூல் விழாவில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கானோர்களுக்கும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

வஉசியின் சிவஞான போதஉரை நூல் வெளியீட்டு விழாவில் தமிழர் தலைவர் வைகோ அவர்கள் ஆற்றிய உரை இதோ:

வரலாற்று எழுத்தாளர் செ.திவான் பதிப்பித்த **"வ.உ.சி.யின் சிவஞான போத உரை"** நூல் வெளியீட்டு விழா திருநெல்வேலியில் 22.8.2008 அன்று மறுமலர்ச்சி மையம் ஏற்பாட்டில் நடைபெற்றது. கழகப் பொதுச் செயலாளர் வைகோ நூலை வெளியிட வ.உ.சி.யின் மகன் வாலேஸ்வரன் பெற்றுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் **வைகோ** ஆற்றிய உரையில் இருந்து,

இந்த நாள் என் வாழ்வில் எல்லையற்ற மகிழ்ச்சியைத் தருகின்ற திருநாள். தியாக மணிவிளக்காக காலங்களைக் கடந்தும் ஒளிவீசிக் கொண்டு இருக்கின்ற ஒரு மாபெரும் தலைவன் வழங்கிய நூல்களில் ஒவ்வொன்றாக மக்கள் மன்றத்துக்கு கொண்டு வருகின்ற அரிய பணியில் திவான் ஈடுபட்டு இருக்கின்றார். செக்கு இழுத்த செம்மல் – ஒரு சிறந்த இலக்கியவாதியும் கூட என்பதை இன்னும் எண்ணற்றவர்கள் அறிகின்ற வகையில், வரவேண்டிய பல நூல்கள் வரலாற்றின் பார்வையில் வராமலே இருக்கின்ற கவலையோடு, அவற்றை வெளியே கொண்டு வரும் முயற்சியில் திவான் ஈடுபட்டு இருக்கிறார்.

இங்கே திரளான கூட்டத்தைப் பார்க்கிறேன். ஒரு இலக்கிய விழாவுக்கு இவ்வளவு திரளாக மக்கள் வந்தது மகிழ்ச்சியைத் தருகின்றது என்று திவான் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். செக்கு இழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு பிடித்த நூல்கள் மூன்று.

1. நீதி நூலான “திருக்குறள்”, 2.சித்தாந்த நூலான “சிவஞான போதம்“, 3.வேதாந்த நூலான கைவல்ய சுவாமிகளின் “நவநீதம்“

இந்த மூன்றும் அவருடைய உள்ளத்தை ஈர்த்தன. இந்த “சிவஞான போதம்“ என்பது, மெய்ப்பொருளை உணர்த்துகிற நூல். இது 12 சூத்திரங்களை உள்ளடக்கியது. 40 வரிகளைக் கொண்டது. 216 சொற்கள் நிரம்பியது. காப்பு உள்ளிட்டு, 12 சூத்திரங்கள், அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின் எனத் தொடங்கி ஆலயந் தானும் அரன் எனத்தொழுமே என்று முடிகின்ற இந்த 12 சூத்திரங்களைப் பற்றி எண்ணற்றவர்கள் விளக்கங்கள் தந்து இருக்கிறார்கள்.

இந்தத் தெற்குச் சீமையில் தான், நதிகள் பாய்கின்ற நம் மண்ணில்தான், பொதிகைத் தென்றல் வீசுகின்ற இத் தென்னகத்தில்தான் மிகச்சிறந்த ஞானிகள் தோன்றினார்கள். மாதவ சிவஞான முனிவர் விக்கிரமசிங்கபுரத்தில பிறந்தவர். அவர் தந்தது “சிவஞான மாபாடியம்“, அதைத் ‘திராவிட மாபாடியம்‘ என்பாரும் உண்டு. இதோ போலத் தமிழுக்குத் தொண்டு செய்த துறவியாக உலவிய அன்றைய குன்றக்குடி அடிகளார் அவர்கள் சிறந்த தமிழ் அறிஞர்.

கடைசி வரையிலும் குடத்து விளக்காகவே இருந்து மறைந்த, என்றும் என் உள்ளத்தைவிட்டு அகலாத அண்ணன் சிசு மணி அவர்கள் தீட்டிய, ‘திராவிட மாபாடியம்‘ என்கின்ற நூலை 14 ஆண்டுகளுக்கு முன்பு 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் நாள், நெல்லை சங்கீத சபாவில், குன்றக்குடி அடிகளார் வெளியிட்டார்கள். அந்த விழாவுக்குத் தலைமை ஏற்கின்ற பெரும்பேறு எளியவனாகிய எனக்குத் கிடைத்தது.

வீர சிதம்பரம் பிள்ளை எழுதிய “சிவஞான போத” உரையை திவான் பதிப்பித்து இருக்கிறார். அவர் நன்றி சொல்லும்போது, ஒரு சில வார்த்தைகளில் முடித்துக் கொண்டார். 15ஆவது நூலாக, வ.உ.சி.யின் நூலாகத் தருகிறேன் என்றார். இன்னும் வெளிவராத வ.உ.சி. நூல்கள் பல உள்ளன.

சிவஞான போதத்தை தந்த மெய்கண்ட, தேவனார் பிறப்பு வளர்ப்பு வரலாற்றை அடிகளார் சொன்னார். தொண்டை நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் இடைப்பட்ட நடு நாடாகிய

திருமுனைப்பபாடி நாட்டில், பெண்ணாகடம் என்கின்ற ஊரில் அச்சுத் கலிப்பாளர் தவம் இருந்து பெற்ற பிள்ளையாகியப் பிறந்த அவருக்குச் சூட்டப்பட்ட பெயர் சுவேதனப் பெருமாள். அவர் திருவெண்காட்டில் தவம் இருந்து பெற்ற பிள்ளை என்றாலும், தாய் மாமன் ஊரில் திருவெண்ணெய்நல்லூரில் வாழ்ந்தார். அங்கே அவருக்கு பரஞ்சோதி முனிவர் அருள் செய்தார். மெய்ப்பொருளை உணர்த்தினார். “மெய்கண்ட தேவன்” என்ற பெயரும் சூட்டினார். அந்த மெய்கண்ட தேவன் தந்து இருக்கின்ற சூத்திரங்கள் 12.

இந்த 12 சூத்திரங்களுக்கும் எண்ணற்றவர்கள் விளக்கம் தந்து இருக்கிறார்கள். அதனுடைய நுண்மான் நுழைபுலப் பொருளை ஆய்ந்து அதைப் பகுத்துச் சொல்லக்கூடிய ஆற்றல் எனக்குக் கிடையாது. சுவாமிகள் போன்றவர்கள்தான் தர முடியும். ஆனால், அந்த மெய்ப்பொருளில் என் மனதைக் கவர்ந்த சூத்திரங்கள் இரண்டு. ஒன்று ஆறாவது சூத்திரம், இன்னொன்று பத்தாவது சூத்திரம்.

ஆறாவது சூத்திரம், ‘அறிவு என்கிற மெய்ப்பொருளே, உண்மைப் பொருளே கடவுள் என்பதுதான் ஆறாவது சூத்திரத்தின் சாரம். பத்தாவது சூத்திரம், ‘யான்’ என்பதை விட்டு விலகிய உடன், ‘நான் எனது, என்னைச் சார்ந்தது என்ற நிலையில் இருந்து விடுபட்டவுடன் தான் இறைவனே என்பதை உயிர் உணரும், உயிரின் மலங்களும் நீங்கிவிடும்.

பெரியாழ்வார் சொன்னார். பிரபஞ்சத்தை உள்ளடக்கிய கோடான கோடி கிரகங்கள் இயக்குகின்ற இறைவனும் என் நெஞ்சத்துக்கு உள்ளே இருப்பதால், நானே பெரியவன் என்று சொன்னார். ஞான் என்பதை மறுப்பது எப்படி?

அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில், சமயவாதிகள் கூடுகின்ற மாநாட்டில் சிகாகோ நகரில், இந்தியாவில் இருந்து சென்ற விவேகானந்தருடைய ஆடைத் தோற்றத்தைக் கண்டு பல பேர் ஏளனமும் பரிகாசமும் செய்த வேளையில், Ladies and gentleman என்று பேசுகின்ற அரங்கில், “சகோதர, சகோதரிகளே” என்று அழைத்த அவரது குரல் அந்த அரங்கத்தில் அனைவருக்கும் சிலிர்ப்பை ஏற்படுத்தியது.

இராமநாதபுரம் மன்னர்தான் அவரை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தார். விவேகானந்தரின் அற்புதமான கணீரென்ற ஆங்கிலச் சொற்களில் தவழ்துவந்த கருத்துப் பிரவாகத்தில் அனைவரும் சொக்கிப் போனர்கள்.

அப்பொழுது இதைச் சொன்னார். இந்த பத்தாம் சூத்திரத்தின் கருத்துதான் அந்தக் கருத்து. "நான் என்பதை மறுத்துவிடு" என்று அந்த அரங்கில் அவர் ஒரு அருமையான விளக்கத்தைத் தந்தார். அங்கு இருக்கும் பலகையில் நான் என்று ஒரு கோடு போட்டார். நான் என்று ஒரு கோடு " I " இதை மறுத்துவிடு. I குறுக்கே ஒரு கோடு போட்டார். This is cross. இதுதான் சிலுவை என்று சொன்னார்.

சிலுவைக்கு அவர் தந்த விளக்கம். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். இன்றைக்கு கோடான கோடி மக்கள் அந்தச் சிலுவையை வணங்குகிறார்கள். கவலையைப் போக்குகிறார்கள். எந்தச் சிலுவையில் இயேசு பெருமானின் இரத்தம் வழிந்ததோ, அந்தச் சிலுவையை நெஞ்சில் நினைக்கின்றபோது, தங்கள் கவலைகளில் இருந்து விடுபட முடியும் என்று மக்கள் வழிபடுகிறார்களே, அந்தச் சிலுவைக்கு அவர் விளக்கம் தருகிறபோது, 'நான் என்பதை மறுத்து விட வேண்டும்' என்றார். உடனே கூட்டத்தில் இருந்து ஒரு வெள்ளைக்காரன் எழுந்து, 'இது மிகத் தவறான விளக்கம்' என்றார். உடனே விவகோனந்தர் சொன்னார். "அவர் கிழக்கில் இருந்து வருகிறார். எங்களைச் சேர்ந்தவர். உங்களைவிட எங்களுக்குத் தெரியும்" என்றார்.

இந்த சிவஞான போத சூத்திர விளக்கங்களுக்கு உள்ளே நான் இன்னும் அதிகமாக செல்ல விரும்பவில்லை. தூத்துக்குடியில் இருக்கின்ற சைவ சித்தாந்த சபையின் செயலாளராகிய சுப்பிரமணிய பிள்ளை என்பவர், ஒரு நாள் வ.உ.சி.யைச் சந்தித்தார்.

'சிதம்பரம் பிள்ளை அவர்களே, நீங்கள் சிறந்த வழக்கிறஞர். உங்கள் வாதங்களைக் கேட்க மக்கள் கூடுகிறார்கள். உங்கள் கருத்துக்கள் மனித மனங்களைக் கவர்கின்றன. நீங்கள் சிவஞான போதத்தின் 12 சூத்திரங்களையும் விளக்கமாக பிரசங்கம் செய்ய வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

அதற்காக இந்த சூத்திரங்களைப் பற்றி இன்னும் ஆழமாகப் படித்து, சைவ சித்தாந்த சபையில் போய் வ.உ.சி. அவர்கள் பேசினார்கள். இதை அவரே எழுதுகிறார். நான் பேசினேன். அதற்குப் பிறகு அதை மறந்து விட்டேன். ஆனால், அது ஒரு ஞானக் கடல், ஞானம் நிறைந்த நூல் என்று நான் உணர்ந்து கொண்டேன். பல ஆண்டுகளுக்குப் பிறகு நான் நெல்லையில் வண்ணார்பேட்டை பகுதிக்குச் சென்றேன். டி.கே.சிதம்பரநாத முதலியார் வீட்டில் தங்கி இருந்தேன். அப்போது இந்த சிவஞான போதத்தை பற்றிய ஒரு விவாதம் வந்தது. ஒரு வடமொழிப் பண்டிதர் ஒருவர். டி.கே. சிதம்பரநாத முதலியார் வீட்டில் இருந்தார். அவரிடம், வடமொழியில் இருக்கக்கூடிய 12 சூத்திரங்களையும் தமிழில் மொழி பெயர்க்கச் சொன்னேன். அந்தப் பண்டிதர்க்கு தமிழும் பாண்டித்யம், வடமொழியும் பாண்டித்யம். அந்த வடமொழிச் சூத்திரங்களை தமிழில் அவர் மொழி பெயர்த்தார். தமிழில் உள்ளது தான் வடமொழியில் இருக்கிறது. வட மொழியில் இருக்கிறது தமிழில் இருக்கிறது என்பதை விட, தமிழில் உள்ளதுதான் வடமொழியில் இருக்கிறது என்று சொல்லிவிட்டு, வ.உ.சி. அவர் மனதுக்குள், "தமிழ்தான் மூலம் என்ற உணர்வு ஏற்பட்டு இருக்கிறது". இது என் கருத்து.

ஆனால், அன்றைய காலகட்டத்தில் அதைச் சொல்லாமல், இதில் எது மூலம்? எது அதில் இருந்து வந்தது என்று நான் கருத்துச் சொல்ல விரும்பவில்லை. தமிழில் உள்ளது தான் வடமொழி சூத்திரத்திலும் இருக்கிறது என்று இந்த சர்ச்சைக்கு உள்ளே போகாமல் கருத்தை வெளியிடுகிறார். மாதவ சிவஞான முனிவர் வடமொழியில் இருந்து சூத்திரங்களின் மொழிபெயர்ப்புதான் இந்த தமிழ் சிவஞான போதம் என்ற கருத்தைச் சொல்லி இருக்கிறார். ஆனால், கா.சு.பிள்ளை அதை ஏற்கவில்லை. மறைமலை அடிகள் அதை ஏற்கவில்லை. சிறந்த தமிழ் அறிஞரான கா.சு.பிள்ளை அவர்களும் – மறைமலை அடிகளும், 'இந்த 12 தமிழ் சூத்திரங்கள் தான் மூலம். இதில் வடமொழியில் இது வந்ததல்ல' என்பதற்கு நிறைய விளக்கங்களைச் சொல்லி இருக்கிறார்கள்.

இதே கருத்தைத் தான் தமிழ் அறிஞர் சி.சு.மணி அவர்கள், தன் திராவிட மாபாடியம் என்கின்ற நூலில் விளக்கம்

தருகிறார். நடுநாட்டில் திருமுனைப் பாடியில் சுவேதனப் பெருமாளாக இருந்த மெய்கண்ட தேவர், அருமையான சிவஞான போதத்தைத் தந்தாரே அவர் 12 சூத்திரங்கள் தந்து இருக்கிறார். என்ன ஒற்றுமை பாருங்கள்! திருமுறைகளும் 12 தான். ஞானசம்பந்தர் அருளிய திருமுறைகள் – திருமூலர் தந்த திருமந்திரம் – சேக்கிழார் சுவாமிகள் தந்த பெரியபுராணம் – இவை எல்லாமே 12 திருமுறைகளுக்குள் வருவதுதான்.

திருநாவுக்கரசர் இதே கருத்தையே சொல்கிறார்.

"ஞானத்தால் தொழுவர்கள்

தொழக்கண்டு

ஞானத்தாய் உனை நானும்

தொழுவனே"

ஞானத்தைத்தான் தொழுகிறேன் என்று திருநாவுக்கரசர் சொல்கிறார்.

திருமூலர் சொல்வது என்ன?

"ஞானத்தின் மிக்க அறிநெறி நாட்டில் இல்லை

ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று

ஞானத்தின் மிக்கவை நன்முக்தி நல்காவாம்

ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே"

திருநாவுக்கரசர் கூறியது என்ன?

"ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு

ஞானத்தாய் உனைநானும் தொழுவனே

ஞானத்திரளாய் நின்ற பெருமாள்"

–ஞான சம்பந்தர்

"ஞானம் தன்னை நல்கிய தன்மையும்"

– மாணிக்கவாசகர்

சிவஞான போதத்தைத் தந்த வ.உ.சி. அவர்களின் பெருமையைப் பேசுகின்ற நிகழ்ச்சி இந்த நிகழ்ச்சி. இந்த நூலை

பிப்பித்துத் தந்திருக்கின்ற திவான் அவர்களுக்கு தமிழகம் கடமைப்பட்டு இருக்கிறது. நம் திருநெல்வேலிச் சீமையைச் சேர்ந்தவர், பொதிகைத் தென்றல் வீசும் குற்றால மலைக்கு அருகே பிறந்த இந்த மாபெரும் ஆராய்ச்சி அறிவாளர், எத்தனை நூல்களை வெளியே கொண்டு வந்து இருக்கிறார். ஓட்டப்பிடாரத்தில் வ.உ.சி. எழுதியவை. அவை அச்சில் ஏறவில்லை. மக்கள் மன்றத்துக்கு வரவில்லை என்கிறார் திவான்.

என்னென்ன நூல்கள்?

முதல் நூலாக, அழகும் ஆரோக்கியமும் – ஆயுளை நீட்டிக்கும் ஆறு – ஊழை வெல்லும் உபாயம் – சிவமதம் – இது வ.உ.சி. எழுதியது. யாருக்கும் தெரியாது. ‘விஷ்ணு மதம்‘, ‘புத்த மதம்‘, ‘கிறிஸ்தவ மதம்‘, ‘இஸ்லாம் மதம்‘, வ.உ.சி. எழுதியது. யாருடைய கண்களுக்கும் படவில்லை. அச்சேறவில்லை. எவரும் இன்றைக்குப் படிக்க வாய்ப்பு இல்லை. Universal Scriptures வ.உ.சி. எழுதியது, அச்சேரவில்லை. ‘முக்திபேறு’ ‘திருக்குறளின் பொருட்பால்’, ‘இன்பத்துப்பால்’, ‘திலக மகரிஷி’ என பல நூல்கள் வ.உ.சி. எழுதியது. எவருக்கும் தெரியாது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது அல்ல. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது அல்ல. உ.வே. சா. தேடித்திரிந்தாரே தமிழ் இலக்கியங்கள், அதைப்போல இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இல்க்கிய நூல்கள் அல்ல. இதோ எழுதியவரின் திருமகன் இந்த மேடையில் அமர்ந்து இருக்கிறார். எழுதிய அந்த மாபெரும் தலைவனின் மகன் வாலேஸ்வரன் இந்த மேடையில் அமர்ந்து இருக்கிறார். என் வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த பெரும்பேறு, அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தவும் அவர்கள் இருக்கின்ற மேடையில் பேசுவதும் ஆகும். அரசியல் மேடைகள் ஆயிரம் கிடைக்கலாம். எத்தனையோ மன்றங்களில் நான் பேசலாம். ஆனால், இந்த நாட்டுக்காகவே தன்னுடைய உடல், பொருள், ஆவி அனைத்தையும் தந்த தலைவனின் பிள்ளை பக்கத்தில் அமர்ந்து கொண்டு இருக்க நான் பேசுவது எனக்குப் பெருமை.

வ.உ.சி. அவர்களின் நூல்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டவை அல்ல. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டவை அல்ல. உ.வே.சா. தேடித்திரிந்தாரே தமிழ் இலக்கியங்கள், அதைப்போல இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கிய நூல்கள் அல்ல. இந்த நூல்கள் நூற்றாண்டுகளைக் கூட கடக்கவில்லையே. வ.உ.சி. மறைந்து எண்பது ஆண்டுகள் கூட முடியவில்லையே! அந்த நூல்கள் என்ன ஆயிற்று? ஏன் பதிப்பிக்கவில்லை? என்ன முயற்சிகள் எடுக்கப்பட்டன? ஒவ்வொரு நூலாகத் தேடிக்கொண்டு வருகிறார் திவான். திருக்குறளின் அறத்துப்பால் மாத்திரம் பதிப்பித்து இருக்கிறார்கள். பொருட்பால் – இன்பத்துப்பால் ஆகியவை கிடைக்கவில்லை. வ.உ.சி. எழுதிய இன்னிலை என்ற நூலுக்கு எழுதிய விளக்க உரையை திவான் தான் பதிப்பித்து வெளியிட்டார்.

இன்றைக்கு என்ன நடக்கும்?

திவான் பதிப்பித்து இலவசமாக வெளியிட வேண்டியது. எழுத்துத் திருடர்கள் சிலர் இருக்கிறார்கள். இப்படிப் பதிப்பிக்கப்பட்ட புத்தகத்தை எல்லாம் சேகரித்து, ஒரே புத்தகமாகப் போட்டு நல்ல விலைக்கு விற்பனை செய்து விடுகிறார்கள். ராயல்டி எல்லாம் ஒன்றும் கிடையாது. இவர் அதைப் பற்றிக் கவலைப்படுவது கிடையாது. வ.உ.சி.யின் நூல்கள் நாட்டு மக்கள் மத்தியில் வந்தால் நல்லது என்று நினைக்கிறார் திவான்.

வ.உ.சி. எழுதிய அழகும் ஆரோக்கியமும் என்ற புத்தகத்தைக் கண்டுபிடிப்பதற்கு இவர் அலைகிறார், அலைகிறார். திவானுடைய வீட்டிலேயே ஐம்பது ஆயிரம் புத்தகங்கள் இருக்கின்றன. நூலகங்களில் இல்லாத அரிய நூல்கள் கூட திவானின் நூலகத்தில் இருக்கின்றன. அவர் ஒரு நடமாடும் கணினி. கருத்துக் களஞ்சியம், பத்து நிமிடங்களுக்குள் இருபது பழைய புத்தங்களைப் புரட்டிப் பார்க்கக்கூடிய ஆற்றல் இவருக்கு இருக்கிறது. நான் பல ஆண்டுகளாகப் பார்த்து இருக்கிறேன்.

ஒரு நாள் தெற்குக்கடை பஜாரில் அவருருக்கு வேண்டிய நண்பர் அருணாசலத்தின் பழைய புத்தகக் கடையில் போய்

உட்கார்ந்து இருக்கிறார் திவான். அப்போது அவரது கண்ணில் படுகிறது. உத்தபாளையத்தில் இருந்து 1929 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட 'பாரதி' என்கின்ற மாத இதழ். அதைப் புரட்டுகிறார். அந்தப் பத்திரிக்கையில் இவருக்கு ஒரு குறிப்பு கிடைக்கிறது. அதில் வ.உ.சி. எழுதிய, 'அழகும் ஆரோக்கியமும்' என்கின்ற மூன்று பகுதி, பாரதி எட்டில் வெளியிடப்பட்டு இருக்கிறது. இவருக்கு மகிழ்ச்சி, மேலும் தேடுகிறார், இரண்டாவது பகுதியும், மூன்றாவது பகுதியும் அவருக்குக் கிடைக்கிறது. முதல் பகுதி கிடைக்கவில்லை.

இவரது நண்பர் கம்பம் முகமது அலியின் மூலமாக முயற்சிக்கிறார். உத்தமபாளையத்தில், முகமது இஸ்மாயில் என்பரது வீட்டில், பாரதி இதழ்கள் பைண்ட் வால்யூம்களாக இருக்கிறது என்று கேள்விபட்டு இவர் உத்தமபாளைளத்துக்குச் செல்கிறார். முதலில் கடிதம் மூலமாகத் தொடர்பு கொண்டு அங்கே சென்று அவரது இல்லத்தில் இருக்கின்ற நூலகத்தில் தேடிப் பார்த்தால், குறிப்பு இருக்கிறதே தவிர, அந்த வால்யூம்கள் அங்கே இல்லை.

ஏமாற்றம் அடைந்து, பல இடங்களில் தேடித்திரிகிறார். எங்கும் கிடைக்கவில்லை. சென்னை எழும்பூரில் இருக்கக்கூடிய அரசு ஆவணப் காப்பகத்துக்குச் சென்று, பழைய இதழ்கள், எல்லாவற்றையும் புரட்டுகிறார். பாரதி இதழ்கள் அங்கு இருக்கின்றன. எல்லா இதழ்களையும் பார்க்கிறார். வரிசையாகப் பார்த்துக் கொண்டே வருகிறார். அந்த முதல் பகுதி இல்லை. பாரதி இதழ் முழுவதும் பார்த்து முடித்தாயிற்று. இன்னும் ஒரே ஒரு இதழ் பாக்கி.

அவர் நினைக்கிறார், இறைவனே அந்த கடைசி இதழ் எங்கே இருக்கிறது? அந்த முதல் பகுதி இருக்க நீ அருள் செய்ய மாட்டாயா? என்று எண்ணிக்கொண்டே அந்த இதழைப் புரட்டியதாகவும், அதில் அந்த முதல் பகுதி இருந்ததாகவும், தன் வாழ்நாளிலேயே என்று ஏற்படாத மகிழச்சியை தான் பெற்றதாகவும் அவர் எழுதுகிறார். எவ்வளவு சிரமங்களைத் தாங்கி இருக்கிறார்? அழகும் ஆரோக்கியமும் வெளியிடப்பட்டு விட்டது. நான் மேலே குறிப்பிட்ட மற்ற நூல்கள் எல்லாம் வ.உ.சி. எழுதியவை. பதிப்புக்கு வரவில்லை. அவர் எழுதிய அற்புதமான கருத்துக்கள் வெளியே வரவில்லை.

இந்தப் பிரச்சனையில் என்ன தீர்வு? எப்படி இந்த நூல்களைக் கண்டுபிடிப்பது? தமிழர்களுடைய சொத்துக்களை தமிழர்களே அறிவயது கிடையாது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்கள் தந்த இலக்கியங்கள், உ.வே.சாமிநாத அய்யர் இல்லாவிட்டால் கிடையாது. நம்முடைய சொத்துக்களை நாம் பாதுகாத்துக் கொள்ள மறந்துவிட்டோம். எந்த ஒரு இனம், எந்த ஒரு நாடு தியாகத்தை மதிக்கிறதோ அந்த நாடு தான் வாழும். எந்த ஒரு சமுதாயம் தன்னுடைய பூர்வீகக் கலையை, கலாச்சாரத்தை, நாகரிகத்தை, தங்கள் சொத்துக்கள் எனப் பாதுகாக்கிறதோ அந்த இனம் தான் காலம் கடந்தும் வாழும்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட சுவடுகள் பல இன்றைக்கு நம்மிடம் இல்லை. குமரிக்கடல் பொங்கி அழித்துக் கொண்டு போனது வேறு. கன்னியாகுமரிக்கு தெற்கே இருந்த லெமூரியாக் கண்டத்திலே தமிழகம் அழிந்தது வேறு. கடல்கோளால் கபாடபுரம் அழிந்தது. அதிலே எத்தனையோ நூல்கள் அழிந்துபோய் இருக்கும். மண்ணுக்கு இரையாகக் கொடுக்கப்படப்பட்ட நூல்கள் எத்தனை?

தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாத அய்யர் இங்கு திருநெல்வேலிக்கு வந்தார். பொருநராற்றுப் படையும், திருமுருகாற்றுப் படையும், திருநெல்வேலி தெற்குப்புதூர் தெருவில் இருக்கின்ற வீடுகளில் தான் கிடைத்தது. இந்தத் திருநெல்வேலிச் சீமை, வீரத்தை மட்டும் அல்ல. தமிழ் இலக்கியத்தை வளர்த்த சீமை ஆகவே தான் இங்கே அவர் தேடினார். ஆழ்வார்திருநகரிக்குச் சென்றார். அங்கு உள்ள ஒரு தமிழ் அன்பர் வீட்டில் தான் பத்துப்பாட்டில் முல்லைப் பாட்டு கிடைத்தது.

அதைப்பற்றி சொல்கிறார். கையில் ஏடு கிடைத்தது. அன்றைக்கு முழு நிலவு நாள். நிலவின் வெளிச்சத்தில் அதைப் பார்த்தேன். முல்லைப் பாட்டு என்று கண்டேன். மகிழ்ச்சியால் என் மனம் துள்ளியது. உ.வே.சா. எழுதுகிறார். கலைமகள் இதழில், 'நிலவில் மலர்ந்த முல்லை' என்று ஒரு கட்டுரை எழுதி இருக்கிறார். தமிழ்த்தாத்தா உ.வே.சா. இல்லாவிடில் சிலப்பதிகாரம் இல்லை. புறநானூறு இல்லை. அகநானூறு இல்லை. திருமுருகாற்றுப் படை இல்லை. பொருநாராற்றுப் படை இல்லை. பத்துப்பாட்டு இல்லை. முல்லைப்பாட்டு இல்லை. அவர் தந்த அருட்கொடைதான் இந்த நூல்கள்.

வரகுண பாண்டியன் புகழ் சொல்கின்ற ஆலயம் கட்டப்பட்டு இருக்கின்ற கரிவலம் வந்த நல்லூருக்குச் சென்றார். வரகுண பாண்டியன் காலத்து ஏடுகள் அங்கே இருப்பதாக அறிந்து கேட்டார். அங்கு சொன்னார்கள். 'சில நாள்களுக்கு முன்னர்தான் பெரிய குழியை வெட்டி அக்னி வளர்த்து அந்த நெருப்புக்கு இரையாக்கி விட்டோம்' என்றார்கள். அற்புதமான ஏடுகளை, கருவூலங்களை இப்படி அக்னிக்கு இரையாக்கி விட்டார்களே, கரிவலம் வந்த நல்லூரில், இந்தத் தமிழகம் வாழுமா? இந்தத் தமிழகத்தை வாழ வைக்க முடியுமா? என்று மனம் கலங்கி அழுது கொண்டே அவர் எழுதி இருக்கிறார்.

'தமிழ் தாத்தா' உ.வே.சா. செய்த பணியை, இன்றைக்கு திவான் செய்து கொண்டு இருக்கிறார். சாகித்ய அகாடெமி போன்ற விருதுகளுக்கு அவர் தகுதி உடையவரா என்றால் ஆம், என்பேன். இவருக்குக் கொடுத்தால் அந்த விருதுக்குத் தகுதி என்று கருதுகிறவன் நான். 70 புத்தகங்களுக்கு மேல் அவர் தந்து இருக்கிறார். என்ன அருமையான ஆராய்ச்சி! அவர் எம்.பில். பட்டம் பெற்றதேகூட, ஆஷ் கொலைவழக்கை ஆய்வு செய்ததை வைத்துத்தான் பரிசு பெற்றார், விருது பெற்றார்.

செக்கு இழுத்த செம்மல் சிதம்பரம் பிள்ளை இந்த ம.தி.தா. இந்துப் பள்ளியில் தான் படித்தார். முண்டாசுக் கவிஞர் பாரதி இங்கே தான் படித்தார். அந்த நாள்களை நான் எண்ணிப் பார்க்கிறேன். வ.உ.சி. தொழிலாளர்களுக்குப் போராடினார். கோரல் மில்லில் அவர் நடத்திய போராட்டம். அந்தப் பேராட்டத்தில் தொழிலாளர்களுக்கு உணவு படைக்க தன் சொத்துக்களைத் தந்தார். இந்தியாவிலேயே தொழிலாளர்களைத் திரட்டிப் போராட்டத்தில் வெற்றி பெற்ற ஒரே தலைவர் அந்த காலகட்டத்தில் செக்கு இழுத்த செம்மல் வ.உ.சி.யைத் தவிர யாரும் கிடையாது.

அப்படிப்பட்ட வ.உ.சி. எந்த நாளைத் தேர்ந்து எடுக்கிறார் சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்குவதற்கு?

நமது மூதாதையர்கள் கடலில் கப்பலைச் செலுத்தினார்கள், வெள்ளைக்காரனுக்குக் கப்பம் கட்டிக் கிடப்பதா இந்த நாடு? நாம் மரக்கலம் செலுத்துவோம் என்று சுதேசிக் கம்பெனியைத் தொடங்கிய நாள் என்ன தெரியுமா? அக்டோபர் 16,

வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கில் இடப்பட்ட நாள். மராட்டியத்துக்கு சென்று 'சுயராஜ்யம் எனது பிறப்பு உரிமை' என்று முழங்கிய திலகரைச் சந்தித்து திரும்பிய கப்பல் ஓட்டிய தமிழன், 1906ஆம் ஆண்டு அக்டோபர் 16இல் சுதேசி கப்பல் கம்பெனியைத் தொடங்கினார். வங்காளி தொடங்கவில்லை, பஞ்சாபியன் தொடங்கவில்லை. ஒரிசாக்காரன் தொடங்கவில்லை. மராட்டியர்கள் தொடங்கவில்லை. ஒரு தமிழன் தொடங்கினான். தெற்குச் சீமையிலே வாழ்ந்த ஓட்டப்பிடாரத்து சிதம்பரம் தொடங்கினார். கப்பல் கம்பெனியைத் தொடங்கியதற்குப் பிறகு அவரது பெயரும், புகழும், அவரது வீர உரைகளும் பரவியது. அந்தக் காலகட்டத்தில் சுப்பிரமணிய சிவாவோடு சேர்ந்து விடுதலைக் கிளர்ச்சிக்காக அவர் ஆற்றிய உரைகள் வீர உரைகள்.

1907 ஆம் ஆண்டு சூரத் காங்கிரஸ் மாநாட்டுக்குச் சென்றார். இருதரப்பிலும் நாற்காலிகள் பறந்தன. அப்போதே நாற்காலிகள் பறந்திருக்கின்றன (பலத்த கைதட்டல்). இன்றைக்கும் அந்த மரபுகளை அப்படியே கொண்டு வருகின்றனர். இதை நான் சொல்லவில்லை. சரித்திரம். அந்த சரித்திரத்தில், திலகர் பக்கம் – தீவிரவாதிகள் பக்கம் நிற்கிறார் வ.உ.சி.

இதே நெல்லையில் தேசாபிமானிகள் சங்கத்தை அதற்கு அடுத்த வருடத்தில் தொடங்குகிறார். 1906ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவர் எழுப்புகின்ற கிளர்ச்சி உணர்ச்சி 7,8,9, தேதிகளில் பரவுகிறது. மார்ச் 12 ஆம் தேதி கைது செய்யப்படுகிறார். குதிரை வண்டியில் விலங்கு போட்டு கொண்டு போனார்கள். சாலை ஓரத்தில் பாண்டிச்சேரியில் இருந்து வந்து இருந்த நீலகண்ட பிரம்மச்சாரியைப் பார்த்தார். துப்பாக்கி பிடித்த போலீசுக்குப் பக்கத்தில், வண்டியில் இருந்தவாறு வ.உ.சி. பலத்த குரல் கொடுத்து, 'பிரம்மச்சாரி இங்கேயே இருங்கள், போய் விடாதீர்கள்' என்கிறார்.

அதற்குப் பிறகு வ.உ.சி.க்கு இரண்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, கோவைச் சிறையில் அடைக்கப்படுகிறார். வ.உ.சி. கைது செய்யப்பட்டபோது ஆக்டிங் கலெக்டராக இருந்தவன் தூத்துக்குடியில் துணைக் கலெக்டராக இருந்த ஆஷ். இங்கே திருநெல்வேலியில் போராட்டம் வெடித்தது.

வெள்ளைக்காரன் துப்பாக்கிக்குப் பயப்படாதவர்கள் என்பதை நெற்கட்டான் செவலிலும், பாஞ்சாலங்குறிச்சியிலும் நிரூபித்த மண் அல்லவா? பீரங்கிகளுக்கே பயப்படாதவர்கள் அல்லவா? அப்படிப்பட்ட வீரர்கள், பிரிட்டிஷ்காரன் லத்திக் கம்புகளுக்கும், துப்பாக்கிகளுக்கும் பயப்படாமல் மறுநாள் போராட்டம் நடத்தினார்கள்.

திருநெல்வேலியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் நான்குபேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ஒரு தலித் இளைஞர், ஒரு இஸ்லாமிய இளைஞர் உட்பட நான்கு பேர். எண்ணற்றவர்கள் படுகாயமுற்றார்கள். அந்த உணர்ச்சி இன்று எங்கே?

பஞ்சாப்பில் இன்றைக்கு முதல்வராக இருக்கின்ற மாட்சிமை தங்கிய பிரகாஷ் சிங் பாதல் அவர்கள் கட்சி எல்லைகளைக் கடந்து, என் மீது அளவற்ற அன்பைக் கொண்டவர். சமீபத்தில் கூட ஒரு மாதத்துக்கு முன்னர் அவருடைய வீட்டுக்கு விருந்தினராகச் சென்றுவிட்டு வந்தேன். அவர் ஒரு முறை பகத்சிங்கின் பிறந்த நாளில் அவருடைய ஊருக்கு என்னை அழைத்துக் கொண்டு போனார். நானும், அப்பொழுது ஊருக்கு மத்திய அமைச்சராக இருந்த எங்கள் இயக்கத்தின் மூத்த தலைவரான அண்ணன் கண்ணப்பன் அவர்களும், சென்று இருந்தோம். அவர் மரபுசாரா எரிசக்தி துறை அமைச்சராக இருந்ததால் சூரிய வெப்பத்தில் இருந்து மின்சாரம் தருகின்ற திட்டத்தை பகத்சிங் பிறந்த ஊருக்கு தருகின்ற திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப் போயிருந்தோம். முதல்வர் பிரகாஷ் சிங் பாதல் அவர்கள் என்னையும் அழைத்து இருந்தார்கள். நான் சென்று இருந்தேன்.

அங்கிருந்து இந்திய எல்லை பாகிஸ்தான் எல்லை இரண்டு நாடுகளும் சந்திக்கின்ற எல்லையில் பகத்சிங், ராஜ குரு, சுகதேவ் நினைவாலயம் இருக்கிறது. அங்கே போவோம் என்றார்கள். லாகூர் சிறைக்குள் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாகவே அவர்களைத் தூக்கில் போட்டு, உடல்களைத் துண்டு துண்டாக வெட்டி ஒருவருக்கும் தெரியாமல் கொண்டு வந்து நதிக்கரையில் தீ வைத்தார்கள் பிரிட்டிஷ்க்காரர்கள்.

அவர்களது சாம்பலைக் கொண்டு வந்து நினைவாலயம் கட்டி இருக்கிறார்கள். பகத் சிங்கின் தாயாரின் கல்லறையும்

அங்கே இருக்கிறது. இந்த இடத்துக்கு என்னை அழைத்துக் கொண்டு போனார்கள். அன்புக்கு உரியவர்களே, அப்படி ஒரு காட்சியை நான் இந்தியாவில் ஒரு சில இடங்களில்தான் பார்த்து இருக்கிறேன்.

கிட்டத்தட்ட 200 கி.மீட்டர் நான் பயணம் செய்தேன். இலட்சக்கணக்கான மக்கள் அந்த நினைவாலயத்தை நேக்கி வந்து கொண்டே இருக்கிறார்கள். ஆணும், பெண்ணும், வாலிபர்களும், வயோதிகர்களும், கூட்டம், கூட்டமாக எனக்கு தெரிய தேசத்துக்குப் பாடுபட்ட, உயிர்நீத்த தியாகியை, இந்த அளவுக்கு இந்தியாவில் வேறு எந்தப் பகுதி மக்களும் மதிப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதுவல்லவா உணர்ச்சி! அந்த நிகழச்சியில் என்னை அறிமுகப்படுத்தி வைத்து பேசச் சொன்னார். அப்போது பேசும்போது ஒன்றைச் சொன்னேன்.

நான் பகத் சிங் பிறந்த ஊரான கட்கர் கலான் என்ற ஊருக்கு இன்றைக்கு காலையில் சென்று இருந்தேன். அந்த வீரமிக்க மண்ணைத் தொடுகிற பெரும்பேறு எனக்குக் கிடைத்தது. அந்த மண்ணைத் தொட்டு வணங்கினேன் என்று சொல்லிவிட்டு அந்த மண்ணை நான் எடுத்து வந்து இருந்தேன். அந்த மண்ணை எடுத்துக்காட்டி உயர்த்திக் காண்பித்து முத்தமிட்டு வணங்கிவிட்டு நான் பேசினேன். இங்கும் பாஞ்சாலங்குறிச்சி மண்ணை நெற்றியில் பூசினால் பிள்ளைக்கு வீரம் பிறக்கும் என்கிற நம்பிக்கை இந்த நாட்டு மக்களிடத்தில் இருக்கிறது.

சிறையில் அடைக்கப்பட்ட வ.உ.சி.க்கு அங்கேகொடுக்கப்பட்ட வேலையின் காரணமாக உள்ளங்கை கிழிந்து பார்ப்பதற்கு கொப்புளம் கொப்புளமாக கஷ்டப்பட்டுகிற நேரத்தில், அந்தச் சிறை அதிகாரி அதற்கு மேலும் கொளுத்துகின்ற வெயிலில், அவருடைய முதுகில் மாட்டைக் கட்டுவதைப்போல கயிறு கட்டி அவருடைய தோளிலும் முதுகிலும் கயிறுகளைக் கட்டி செக்கு இழுக்கச் சொன்னார்கள். அவர் செக்கு இழுத்தார்.

சிறைவாசிகள் வீர சிதம்பரத்துக்காக போராடுகிறார்கள். கலவரம் நடக்கிறது. அதில் ஒருவன் கொல்லப்படுகிறான். இந்த வீர உணர்ச்சி பொங்கி எழுகிறது அல்லவா? "கண்டேன் காட்சியை கொண்டேன் உவகையை" என்று வஉசி எழுதுகிறார். அங்கிருந்து கண்ணனூர் சிறைக்கு மாற்றப்படுகிறார். இதெல்லாம் அவரது சுயசரிதையில அவர் எழுதியது.

அவருடைய கவிதை.... வஉசியின் கவிதை

ஓர் இரவினிலே ஆறு இரு மணிக்கு
என் அரங்கினுள் யான் நன்கு உறங்குங்கால்
அவன் செறிந்து மிஸ்டர் சிதம்பரம் பிள்ளை என்று
அறைந்த சப்தம் ஒன்று
அநேக தடவை கேட்டு விழித்துப் பார்த்தேன்.
அரங்குமுன் ஜூனியர் சப் அசிஸ்டண்ட் சர்ஜன் நின்று
சௌக்கியம் உசாவிக்
கலெக்டர் ஆஷூவைத் தெரியுமா என்றான்.
நன்றாத் தெரியும் என்றேன். "எப்படி"? என்றான்.
யான் இவண் ஏகியதற்கும் தூத்துக்குடி
சுதேசிக் கப்பல் கம்பெனி
செத்தொழிந்ததற்கும் அவன் காரணம் என்று அறைந்தேன்.
அவனை நேற்று மணியாச்சி ஜங்ஷனில்
சுட்டுக் கொன்று
தன்னையும் சுட்டுச் செத்தான் என்றான்.
"நல்லதோர் செய்தி நவின்றாய் நீ
நலம் பெறுவாய்" என்றேன்.
இவ்வாண்டு காரஹேனேசனில் விடுதலை
இல்லை எனப்பகர்ந்தான்.
விடுதலை என்றும் இல்லை எனினும் நன்றே என்றேன்.

கலெக்டர் ஆஷைச் சுட்டுக் கொன்றனே வீரன் வாஞ்சி. இதோ இங்கே இருக்கின்ற ரயில்வே ஸ்டேஷனில் இருந்துதான் புறப்பட்டுப் போனான். இங்கெல்லாம் வந்து இருப்பான். இந்த மண் வீரம் செறிந்த மண். இங்கிருந்து மணியாச்சி டிக்கெட் வாங்கிக் கொண்டுதான் இரவில் போயிருக்கிறான். அவன் வைத்து இருந்த கைத் துப்பாக்கியில் இரண்டு குண்டுதான் வைத்து இருந்தான். எவ்வளவு நம்பிக்கை பாருங்கள். ஆறு குண்டு போடுகின்ற ரிவால்வரில் இரண்டு குண்டுதான் போட்டு இருந்தான்.

அண்ணா எழுதிய “இரும்பாரம்“ என்ற நூலை நான் படித்து இருக்கிறேன். வில்லியம் டெல் என்கின்ற மாவீரன், தன் அம்பறாத் தூளியில் இரண்டு அம்புகள் தான் வைத்து இருந்தான். அவனுடைய மகனின் தலைமீது ஆப்பிள் பழத்தை வைத்து அந்த நாட்டின் சர்வாதிகாரி கெஸ்லர் சொல்கிறான். “நீ புரட்சி செய்வதற்கு திட்டமிடுகிறாய். உன் ஒரே மகன் பத்து வயது பாலகனை எதிரே நிறுத்தி வைத்து இருக்கிறோம். அவன் தலைமீது ஒரு ஆப்பிள் பழம். நீ அம்பு எய்து அந்த ஆப்பிள் பழத்தைப் பிளக்க வேண்டும். அம்பு தவறினால் உன் மகன் உயிரைக் குடிக்கும்“ என்று இராணுவச் சர்வாதிகாரி கட்டளை இடுகிறான்.

வில்லியம் டெல் அம்பைத் தொடுத்தான். நூறு கெஜ தூரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த அவன் மகனை நோக்கி அம்பு பாய்ந்து சென்றது. ஆப்பிள் பழம் இரண்டாகப் பிளந்து கூடியிருந்த கூட்டம் கரவொலி எழுப்பி மகிழ்ந்தது.

சர்வாதிகாரி கேட்டான் வில்லியம் டெல், உன்னை அம்பைத் தொடுக்கச் சொன்னேன். உன் அம்புறாத் துளியில் இரண்டாவது அம்பை எதற்காக வைத்து இருக்கிறாய்? என்று கேட்டார். அவன் சொன்னான், ‘முதல் அம்பு என் மகன் தலைமீது வைத்த ஆப்பிளுக்குக் குறி வைக்க. குறி தவறினால் அடுத்த அம்பு உன் மார்பைத் துளைக்க’ என்று சொன்னான்.

அவன் கைது செய்யப்பட்டு கைவிலங்கு பூட்டப்பட்டு கப்பலில் ஏற்றப்பட்டான். புயல் வீசியது. கப்பல் கவிழ்ந்து விடும் நிலையில், இவனுடைய விலங்குகளையும், அகற்றினார்கள். கப்பலைச் செலுத்துச் சொன்னார்கள். கப்பலைச் செலுத்தி கரையும் சேர்த்தான். புரட்சியை நடத்தினான்.

அது போலத்தான், வீர வாஞ்சி ஆறு குண்டு போடவில்லை. இரண்டே குண்டு தான் இருந்தது அவன் துப்பாக்கியில். பதட்டம் இல்லாமல் குறி பார்த்துச் சுடுகிறபோது ஒரு குண்டில் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கையோடு அவன் சென்றான். அதே இரயிலில் தான் ஆக்டிங் கலெக்டர் ஆஷ் போகிறான். அவனுடைய சீமாட்டியும் உடன் வருகிறாள். மணியாச்சி ஜங்ஷனில் இரயில் நிற்கிறது. இதில் ஒரு குறிப்பைச் சொல்கிறேன். பாஞ்சாலங்குறிச்சி வம்சாவளியைச்

சேர்ந்த ஜமீன்தார் குடும்பத்தினர் அதே ஸ்டேஷனில் வந்து இருக்கிறார்கள். என்ன அடிப்படை? இது முன்கூட்டியே தெரியுமா? எனக்குத் தெரியாது.

அவர்களும் முன்னும் பின்னும் இந்த பிளாட்பாரத்தில கம்பீரமாக நடந்து கொண்டு இருக்கிறார்கள். இவன் முன்னும் பின்னும் சற்று நடந்துவிட்டு, பெட்டியில் ஏறுகிறான். ஒரே குண்டுதான் பயன்படுத்தினான். ஆஷ் மார்பைத் துளைத்தது. இறங்கி ஓடுகிறான். தன்னை மாய்த்துக் கொள்ள முடிவு எடுக்கிறான். அங்கே இருக்கின்ற கழிப்பறையை நோக்கிப் போகிறான். பெண்கள் கழிப்பறை என்று போட்டு இருக்கிறது. உள்ளே போக கதவு வரை சென்றவன். பெண்கள் கழிப்பறை என்றவுடன் வெளியே வருகிறான். உயிர்பிரியப் போகிற நேரத்தில் கூட அவன் காத்தப் பண்பாட்டைப் பாருங்கள். அடுத்து ஆண்கள் கழிப்பறைக்குச் சென்று உயிர் பிழைத்துவிடக் கூடாது என்று வாய்க்கு உள்ளே கைத்துப்பாக்கியை வைத்துச் சுட்டான். அவன் உயிர் பிரிந்தது.

இந்தக் காலகட்டத்தில் வழக்கை நடத்துவதற்கும், இந்தப் பிரச்சனையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கும் சிறையில் சிதம்பரம் பிள்ளை அவர்கள் தன் சொத்தை விற்று இராஜபாளையத்தில் இருந்த சுப்பையா முதலியார் என்பவர் மூலம் பாண்டிச்சேரிக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்து அனுப்பி இருக்கிறார். அங்கு ஓட்டப்பிடாரம் மாடசாமிப் பிள்ளையைச் சந்திக்கிறார். அன்றைக்கு ஆயிரம் ரூபாய் என்றால் இன்றைக்கு பத்து இலட்சம் அதைவிட அதிகம்.

சிறையில் இருந்தவாறே தகவல் கொடுத்து, ஆயிரம் ரூபாய் பணம் ஏற்பாடு செய்து இந்தப் பணத்தை வழக்கு சம்பந்தப்பட்டவரிடத்தில் பாண்டிச்சேரியில் கொண்டு போய் கொடுத்துவிட்டு வாருங்கள் என்று பணத்தைக் கொடுத்து அனுப்புகிறார். இதற்கு ஆதாரம் இருக்கிறது. ஒன்றல்ல பல ஆதாரங்கள் இருக்கின்றன.

நன்றி மறக்காதவர் சிதம்பரம் பிள்ளை. அவர் தன் மூத்த மகனுக்கு தன் தந்தையாரின் பெயரான உலகநாதன் என்று பெயர் சூட்டினார். அவர் அதிக நாள் வாழவில்லை. சிறிய வயதிலேயே மறைந்து விட்டார். அடுத்த மகனுக்கு ஆறுமுகம்

என்று பெயர் சூட்டினார். காரணம், தூத்துக்குடியில் கப்பல் கம்பெனியைத் தொடங்குகின்ற காலத்தில் ஆறுமுகம் பிள்ளை என்பவர் பேருதவி செய்தவர், பல பேர் "விதித்த தடைகளை எதிர்த்து இடையூறுகளை அகற்றுவதற்கு உதவி செய்தவர் பெயரை ஆறுமுகம் என்ற தனது இன்னொரு மகனுக்கு வைத்தார்."

மற்றொரு மகனுக்கு திவான் போய் சந்தித்தாரே. வ.உ.சி. சுப்பிரமணியம் என்ற வலோஸ்வரனின் அண்ணனை, அவர் சொன்னார் அல்லவா? அப்பாவின் நூல்கள் எங்கே கிடைக்குமோ முயற்சித்துப் பாருங்கள் என்று சொன்னதை எழுதி இருக்கிறாரே. அந்த சுப்பிரமணியன் என்ற பெயரை ஏன் வைத்தார் தெரியுமா? இவர் கோயம்புத்தூர் சிறையில் இருந்தபோது பெரிய புராண நூலுக்கு பதவுரை போட்டு வெளியிட்டாரே, சி.கே.சுப்பிரமணிய முதலியார். அவர்தான் வ.உ.சி. அவர்களுக்கு பேருதவி செய்தவர். வ.உ.சி.யின் துணைவியார் வருகிறபோது, அவரை அழைத்துப் போவது, வழக்கு சம்பந்தமாக பல்வேறு விதங்களில உதவுவது என எல்லாவற்றையும் செய்த அந்த சுப்பிரமணிய முதலியாருக்கு நன்றி தெரிவிக்கத்தான் தன் பிள்ளைக்கு சுப்பிரமணியன் என்று பெயர் வைத்தார்.

அதன் பிறகு ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் 11 மாதம் 12 நாட்கள் சிறையில் கழித்துவிட்டு வெளியே வந்த பிறகு அரிசி விற்றார். நெய் விற்றார். எல்லா சொத்துக்களையும் விற்றாயிற்று. வறுமை கஷ்டம் மீண்டும் வக்கீல் தொழில் செய்வதற்கு சன்னத் யார் தந்தார்? ஐகோர்ட்டில் நீதிபதியாக இருந்து வெள்ளைக்காரன் வாலேஸ் என்பவன் தந்தான். அந்த நன்றியை மறக்காமல் தான் தனக்கு சன்னத் தந்த நீதிபதியின் பெயரை வைத்துத்தான் "வாலேஸ்வரன்" என்று இவர்களுக்குப் பெயர் சூட்டினார்.

அவடைய மகள்களுக்கு ஆனந்த வல்லி, மரகதவல்லி, வேத வல்லி, ஞான வல்லி என்று பெயர் சூட்டினார். வேதவல்லி என ஏன் பெயர் வைத்தார்? தென் ஆப்பிரிக்காவில் வேதியப்பப் பிள்ளை என்று நாட்டு விடுதலைக்காகப் போராடிய பெரும் தீரர், அந்தக் காலத்தில் வ.உ.சி. படுகிற கஷ்டங்களை கேள்விப்பட்டு அவர் ஐயாயிரம் ரூபாயை அனுப்பி வைத்தார்.

அது வ.உ.சி.க்கு வந்து சேரவேயில்லை. பிறகு ஒரு கட்டத்தில் வட்டிப் போட்டு தருகிறேன் என்றார். வேண்டாம் என்று விட்டார். தேவைப்பட்ட காலத்தில் பணம் வரவில்லை. கப்பல் கம்பெனியைத் தொடங்கி இவ்வளவு கஷ்டப்பட்டு இவ்வளவு போராடியும் இந்தப் பெருமகனுக்கு எந்த காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரவாதியாக இருந்து நாட்டின் விடுதலைக்காகப் போராடினாரோ அந்த இயக்கம் அவரை மதிக்கவில்லை. அவர் வெளியேறினார். 1927ஆம் ஆண்டு அவர் சேலத்துக்குச் சென்றார். சேலத்தில் நடைபெற்ற மூன்றாவது அரசியல் மாநாட்டில் பெரியார் கலந்து கொள்கின்ற அந்த மாநாட்டில் வ.உ.சி. கலந்து கொள்கிறார். அவர் தான் மாநாட்டுத் தலைவர்.

அந்த மாநாட்டில் பேச்சை எப்படி தொடங்குகிறார் தெரியுமா? “நான் தேசாபிமானம் அற்றவன் என்றும் தேசபக்தி இல்லாதவன் என்றும் சிலர் புண்மொழி கூறியதையும், நாட்டில் சாத்வீகப் போராட்டம் நடத்தி, விடுதலை சுதந்திரம் கிடைக்க தேச அரசாட்சிக்குப் பலர் போராடும்போது, நீங்கள் பயந்து அச்சப்பட்டு பின்வாங்கி ஓடி விட்டீர்களே என்று ஒரு பாரிஸ்டர் என்னைப் பார்த்துப் புண்மொழி கூறியதையும், அதை எல்லாவற்றையும் விட பிரிட்டிஷ் அரசிடம் கைக்கூலி வாங்கிக் கொண்டு நான் தேசத் துரோகத்தில் ஈடுபடுகிறேன் என்று ஒரு பத்திரிக்கை எழுதியாதையும் நான் மறக்க முடியுமா” என்று சேலத்தில் பேசுகிறார்.

அந்த காலகட்டத்தில் நாட்டுக்காகவே தன்னைத் தந்த உத்தமனைக்கூட களங்கம் சுமத்துவதற்கு சில பேர் இருக்கிறார்களே என்று நான் எண்ணிப் பார்க்கிறேன். அவரது உள்ளம் எவ்வளவு சுக்கல் சுக்கலாக வெடித்து இருக்கும்?

அடுத்து ஆண்டு நாகப்பட்டினத்தில் ஒரு முக்கியமான நிகழ்ச்சி. அங்கே இருக்கின்ற தேசபந்து சமாஜத்தின் ஏழாவது ஆண்டு விழா அதற்கு தலைமை யார்? நமது வ.உ.சி. அவர் கலந்து கொள்ளும் அந்த விழாவை, பெரியாரின் குடியரசுப் பத்திரிக்கை வெளியிடுகிறது. “சுயமரியாதை வீரர்களுக்கு ஆடம்பர வரவேற்பு வ.உ.சிதம்பரம் பிள்ளை அக்ராசனம்” என்று படம் போட்டு வெளியிட்டது.

வைக்கம் வீரரின் படத் திறப்பு. தந்தை பெரியார் படம் திறப்பு, திறந்து வைத்தது யார் தெரியுமா? வ.உ.சிதம்பரம் பிள்ளை பெரியாரும் காங்கிரசை வளர்த்தவர் தானே, காங்கிரசில் இருக்கும் வர்ணாசிரமக் கொடுமையை எதிர்த்து வெளியேறியவர் தானே?

1928ஆம் ஆண்டு பெரியார் படத்தை வ.உ.சிதம்பரம் திறந்து வைத்ததை குடியரசுப் பத்திரிக்கை வெளியிடுகிறது. 20 ஆண்டுகள் கழித்து வ.உ.சி. மறைந்த பிறகு, 1948இல் மே மாதம் 9 ஆம் தேதி தூத்துக்குடியில் திராவிடர் கழகத்தின் 18 ஆம் மாகாண மாநாடு. அந்த மாநாட்டில் வ.உ.சி. படம் திறந்து வைக்கப்பட்டது. அந்த மாநாட்டில் படத்தை திறப்பதாக அறிவிக்கப்பட்டு இருந்தவர் தமிழ்த் தென்றல் திரு.வி.க. ஆனால், அவர் வரவில்லை என்பதால் குத்தூசி குருசாமி அந்தப் படத்தை திறந்து வைத்தார். அந்த உணர்வோடு தான் நான் இங்கே பேசுகிறேன்.

இவ்வளவு தியாகம் செய்தாரே! நாட்டுக்காகப் பேராடினாரே! அப்படிப்பட்ட தீரர் எழுதிக் குவித்தவை. இந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடி அவர் செய்திருக்கிற மகத்தான தியாகம் இதை மதிக்க வேண்டும் நாம் உணர்வுகள் பெறுவதற்கு!

சிவஞான போதத்தில் இவர் என்ன விளக்க உரை எழுதுகிறார் தெரியுமா? அவர் சொல்கிறார், மற்ற உரைகளில் இருந்து என் உரை மாறுபட்டது. மற்ற உரைகளில் பிற சமயங்களைக் குறித்து கண்டனம் இருக்கிறது. அவருடைய குறிப்பு அதுதான். பிற சமயங்களைப்பற்றி எந்த விமர்சனமும் செய்ய அவர் விரும்பவில்லை. பொய்யான உயர்வு தாழ்வு பற்றி நான் பேச விரும்பவில்லை. வேறு எந்த மதத்தைப் பற்றியும் விமர்சிக்கத் தயாராக இல்லை என்கிறார்.

நான் பேசுவது 2008 ஆம் ஆண்டு ஆகஸ்ட 22 ஆம் நாள் அவர் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு, 1935ஆம் ஆண்டில் சொல்கிறார். ஜாதியின் பெயரால் மதத்தின் பெயரால் வேற்றுமைகளை ஏற்படுத்துகிறவர்கள் தான் இந்த நாட்டுக்கு தேச பக்திக்கு தீங்கு செய்கின்றவர்கள் என்று அவர் எழுதுகிறார். அதைவிட இந்தக் காலகட்டத்தில்

பகை உணர்ச்சியும் வேற்றுமை உணர்ச்சியும் வளர்க்கப்பட்டு அப்படிப்பட்ட கொடுமைகள் நடந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த நூலை வெளியிடும் போது இந்தக் கருத்தை வெளியிடுகிறோம்.

ஒடுக்கப்பட்ட மக்களை அவர் சகோதரர்களாகப் பாவித்தார். விருதுநகரைச் சேர்ந்த இராமையாத் தேசிகர் என்பவர் ஒரு தலித், கண் பார்வை இல்லாதவர். அவரை வீட்டிலேயே வைத்து உணவு அருந்தச் சொல்லி வள்ளியம்மையே உணவு ஊட்டுகிறார். ஒரு தலித் இனத்தைச் சேர்ந்தவரை தன் வீட்டிலேயே வைத்துப் பராமரித்து அரவணைத்துக் கொள்கிற இயல்பு வ.உ.சி.க்கு இருந்தது. தன் மனைவி வள்ளியம்மையைப் பற்றியும் வ.உ.சி. நூல் எழுதி இருக்கிறார்.

அவருடைய உணர்வு எப்படிப்பட்டது? காரைக்குடிக்குப் போகிறார் ஜீவாவின் ஆசிரமத்துக்கு. அங்கு ராட்டைகளாக இருக்கிறது. அப்பொழுது ஜீவா கொஞ்சம் அகிம்சாவாதி, தீவிர கம்யூனிசத்திற்கு வரவில்லை. வ.உ.சி. ஜீவாவிடம் கேட்கிறார். இதெல்லாம் என்ன? இதுதான் ராட்டைகள், நூற்பதற்கு என்கிறார். வாள் ஏந்த வேண்டிய கைகளில் கொண்டு போய் ராட்டைகளைக் கொடுத்து இருக்கிறீர்கள்? என்று இவர் சொல்கிறார். ஆதாரம் இல்லாமல் நான் பேசமாட்டேன்.

தூத்துக்குடியில் காங்கிரஸ் கூட்டம். காங்கிரஸ் தொழிற்சங்கத் தலைவர் வரதராஜுலு நாயுடு வந்து இருக்கிறார். அந்த கூட்டத்துக்கு இவர் பார்வையாளராகப் போகிறார்.

அந்தக் கூட்டத்தில் ஒருவர் பேசுகிறார். ஶ்ரீமான் சிதம்பரம் பிள்ளை போன்ற மூத்த காங்கிரஸ் தலைவர்கள் எல்லாம் கதர் சட்டை போடாமல் வருவது எங்களுக்கு மிகுந்த வருத்தத்தைத் தருகிறது என்று பேசி விடுகிறார். எதிரே உட்கார்ந்து இருக்கிறார் சிதம்பரம் பிள்ளை. ஆவேசப் பிழம்பு அல்லவா? மேடை ஏறுகிறார். நான் அணிந்து இருப்பது கதர் அல்ல. கைத்தறி. நான் காந்தியின் கதர் தொண்டன் சிதம்பரம் பிள்ளை அல்ல. நான் சுதேசி சிதம்பரம் பிள்ளை என்றார்.

அவர் திருக்குறளுக்கு 'அறத்துப்பால்' வெளியிட்டார் அல்லவா? முழுக்க முழுக்க அந்தத் தாள் அனைத்தும் இந்த மண்ணில் உற்பத்தியான பொருட்களில் செய்தது. இந்த உணர்வு

அவருடைய ஊனோடும் உதிரத்தோடும் கலந்தது. அப்படிப்பட்ட மாபெரும் தலைவர், இந்த மண்ணுக்குப் பெருமை தேடிக் கொடுத்த தலைவர், நாட்டின் விடுதலைக்காகப் போராடிய தலைவரின் குடும்பத்தினர் எதையும் பார்க்கவில்லை.

இங்கே வந்து இருக்கின்ற வாலேஸ்வரன் அவர்களைப் பார்த்து நாங்கள் பெருமைப்படுகிறோம். பொன்னும் பொருளும் நிலையல்ல, மாடமாளிகைகள் நிலையல்ல. இந்த மண் இருக்கின்றவறரை உங்கள் தந்தையின் புகழ் இருக்கும். இந்த பூமி இருக்கின்ற வரை அவரது தியாகம் இருக்கும்.

தியாகிகளின் உன்னதமான தியாகத்தில்தான் இந்த நாடு வாழுகிறது. அந்தத் தியாகத்தை நான் மதிக்கிறேன். என்னைப் போன்றவர்களுக்கு உணர்ச்சியும், எங்களக்குச் சோதனைகள் சூழ்கிறபோது நெஞ்சில் உறுதியும் ஏற்படுவதற்குக் காரணம் இப்படிப்பட்ட தீரர்களை நினைக்கிற போதுதான். அவருக்குச் சிலை எழுப்ப வேண்டும் என்றார் குட்டி அவர்கள். எல்லா விதத்திலும் தகுதி வாய்ந்த அந்தத் தலைவனுக்கு சிலை எழுப்பும் நிகழ்ச்சிக்கு நீங்கள் எடுக்கின்ற எல்லா முயற்சிக்கும், எளியவன் எந்த விதத்திலும் உதவ வேண்டுமோ எல்லா உதவியும் செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

கட்சி ஜாதி, மத எல்லைகளைக் கடந்து ஒளிவீசும் நட்சத்திரமாக என்றைக்கும் திகழ்கிற வீர சிதம்பரம் பிள்ளையின் புகழ் வாழ்க! வாழ்க! வளர்க திவானின் எழுத்துப் பணிகள்! வெல்க அவரது முயற்சிகள்.

பொதுச்செயலாளர் வைகோ இவ்வாறு உரையாற்றினார்.

திருநெல்வேலி பாளையங்கோட்டை திருவனந்தபுரம் ரோட்டில் வஉசி மைதானத்தில் பிரம்மாண்டமான வஉசியின் வெண்கலச்சிலை 5.9.2010 அன்று திறக்கப்பட்டது. அதில் கலந்துகொள்ள வந்த ஐயா வாலேஸ்வரனோடு எத்தனை எத்தனை அனுபவங்கள்! விரிவஞ்சி நிறுத்துகிறேன்.

வஉசியின் சிவஞான போத உரை நூல் வெளியீட்டு விழா நிறைவடைந்த சில நாட்கள் கழித்து நெல்லை குட்டி என்கிற சண்முகசிதம்பரத்திற்கு வஉசி வாலேஸ்வரன் அவர்கள் எழுதிய மடல் இதோ:

அன்புச் சகோதரர் உயர்திரு. குட்டி அவர்களுக்கு,

ஆசிகள், நலம் நலமே விரும்புகிறேன். உரை நூல் வெளியீட்டு விழாவை மிகச் சிறப்பாக நடத்தியமைக்கு உங்களுக்கும் உங்கள் நண்பர்களுக்கும் பாராட்டுக்கள்.

திருமிகு. வைகோ அவர்கள் எனது தந்தையவர்கள் பற்றி நானே அறியாத பல விஷயங்களைக் கற்று கூறியதும் சிறிதும் அரசியல் கலக்காமல் பேசியதும் தங்கு தடையின்றி ஒரு மணி நேரத்திற்கு மேல் பேசியதும் அவரை ஒரு நேர்மையாளர் என்பதை உறுதிப்படுத்திற்று; சிறந்த பண்பாளர் என்பதையும் நான் உணர்ந்தேன்.

விழாவில், குடத்து விளக்காக உள்ள செ.திவான் அவர்களைப் பாராட்டியது மிகவும் மன நிறைவாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. அவரது சுறுசுறுப்பும், பணிவும் (இவ்வளவு திறமையிருந்தும்) என் உள்ளத்தை நெகழச் செய்தது. அவர் எனக்குப் பல கூரியர்கள் அனுப்பி விட்டார்.

நீங்களும் உங்கள் நண்பர்களும் எங்களை மிக நன்றாக கவனித்துக் கொண்டீர்கள். நன்றி. அதிலும் எங்களைக் கோவிலுக்கு காரில் கூட்டிச் சென்றவரின் பண்பு பாராட்டத்தக்கது.

இவ்வருகையின்போது அன்பான செல்வன் சிறுவனின் வீட்டுப் புதுமனை புதுவிழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது மகிழ்ச்சியாக இருந்தது.

சந்தர்ப்பம் கிடைக்கும்பொழுது தொலைபேசியில் பேசிடக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்

வ.உ.சி. வாலேஸ்வரன் மதுரை-19

செ.திவான் நமது தந்தை வஉசியின் புகழினை உலகெங்கும் எடுத்துச் செல்கிறார். இவருக்கு ஏதாவது உதவி புரிய வேண்டும் என்று எண்ணிய அய்யா வாலேஸ்வரன் எளியேன்

இல்லத்துக்கு வந்தார்கள். எனது குடும்பத்தாருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள். அப்போது எனது துணைவியார் டாக்டர் திவானி ஜஹானராவிடம் உங்க வீட்டுக்காரருக்கு ஏதாவது செய்யனும்மா, எங்கப்பா எழுதிய ‘உயில்’ என்னிடம் உள்ளது. அது உலகம் அறியாதது. அதனை, அவரிடம் கொடுத்து வெளியிடச் செய்ய எண்ணியுள்ளேன் என்றார்கள். அவ்வாறே தந்தார்கள். அடியேனும் எனது முயற்சியால் அதனை வெளியிட்டேன். இன்று பல சைவ சங்கங்கள், நியூ செஞ்சரி புக் ஹவுஸ் நிறுவனத்தார், பல கல்லூரி மலர்கள் வஉசியின் உயிலை மறுபதிப்பு செய்து வருகிறார்கள்.

வஉசி வாலேஸ்வரன் அவர்களை நெல்லையைச் சேர்ந்த எனது நண்பர் காண்பதற்கு மதுரை நாகமலைக்குச் செல்கிறார். டஜன் ஆப்பிள்களை வாங்கிக் கொண்டு சென்று அய்யா அவர்களிடம் கொடுத்தபோது, அந்த நண்பரிடம் உங்களுக்குப் பிள்ளைகள் இருக்கின்றனவா? என்று கேட்டார். அவரும் ஆம் என்றார். இதனை அவர்களுக்கு கொண்டு சென்று கொடுங்கள் என்றார். அய்யா உங்களுக்காக வாங்கி வந்திருக்கிறேன். ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியபோது ஒரே ஒரு ஆப்பிளை மட்டும் எடுத்துக் கொண்டு, மற்றவைகளை கொண்டு சென்றவரிடம் கொடுத்து அனுப்பிய பண்பாளர் வாலேஸ்வரன்.

வ.உ.சி.யின் உயில்

படித்தாலே கண்ணீரை வரவழைக்கும் நெஞ்சத்தை நெகிழவைக்கும் உள்ளத்தை உருக்கும் வஉசியின் உயில் இதோ,

தூத்துக்குடியிலிருந்து மகாஸ்ரீ அ.செ.சு. கந்தசுவாமி ரெட்டியார் அவர்களுக்கு தூத்துக்குடியிலிருக்கும் வ,உ,சிதம்பரம் பிள்ளை எழுதிக் கொடுத்த உயில் சாசன நிருபம்

அன்பார்ந்த ஐயா,

நமஸ்காரம். எனக்கு எனது குடும்பத்தாக்கும் கடவுளையும் தங்களை யொத்த உண்மை தேசாபிமானிகள் சிலரையும் தவிர இவ்வுலகத்தில் வேறு தஞ்சம் ஒருவரிருக்கிறதாக எனக்குத் தெரியவில்லை. நான், இனிமேல் அதிக காலம் ஜீவித்திருப்பேனென்று திடமாக நினைக்க வழிஇல்லை. எனது குடும்ப நிலைமையையும் தாங்கள் முன்னின்று என் குடும்பத்திற்கு செய்ய வேண்டிய காரியங்களையும் இதன் கீழே தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் கீழ்வரும் காரியங்களை செய்து முடித்துக் கொடுத்து என் குடும்பத்தை காப்பாற்றியருளும்படியாக தங்களை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து கேட்டுக் ொள்கிறேன்.

எனது சொத்துக்கள்

எனக்கு எனது மூத்த மகன் ஆறுமுகம் பிள்ளைக்கும் பாகவிஸ்திரமாகி பல வருஷங்களாகின்றன. அந்த தஸ்தாவேஜூ என் மனைவியிடமிருக்கிறது.

பாம்பாய் எம்பெயர் ஆப் இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனியல் ரூபாய் ஆயிரத்துக்கும், ஓரியண்டல் லைவ் அஷ்யூரன்ஸ் கம்பெனியில் ரூபாய் ஆயிரத்துக்கும் எனது ஆயுளை இன்ஸ்யூரன்ஸ் செய்திருக்கிறேன். ஒவ்வொரு கம்பெனியிலும் ரூபாய் ஐநூறுக்கு மேல் எனக்கு இலாபம் (Profits) கிடைக்கக்கூடும். ஆனால் நான் ஒவ்வொரு கம்பெனியிலும் ரூபாய் கடன் வாங்கி இருக்கிறேன். கடனுக்கும் இலாபத்திற்கும்

அனேகமாக சரியாய் போகும். இரண்டு கம்பெனிகளுக்கும் கடைசி பிரிமியமும் (Premium) வட்டியும் கட்டப்படவில்லை. அது கட்டப்பட வேண்டும். மேற்படி இரண்டு இன்ஸ்யூரன்ஸ் தொகையையும் பல வருஷங்களுக்கு முன்னே என் மனைவி பேருக்கு டிரான்ஸ்பர் செய்து வைத்திருக்கிறேன். இரண்டு சங்கிலி நிலமும் பதினாறு மரக்கால் நஞ்சையும் அதன் பக்கத்தில் கிணற்றுத் தோட்டம் என்ற ஒரு நிலமும் இருக்கின்றன. இது தவிர ஓட்டப்பிடாரத்தில் கீழ்க்காட்டில் 1 3/4 சங்கிலி கரிசல் புஞ்சை ஒன்று 3/4 சங்கிலி கரிசல் புஞ்சை ஒன்றும், இருக்கின்றன. என் மக்களால் அவ்வளவு தூரத்திலுள்ள அந்த இரண்டு புஞ்சைகளையும் பயிர் செய்துகொள்ள முடியாது. அவற்றை ரூபாய் ஐநூறுக்கு தங்கள் பேருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

ஓட்டப்பிடாரத்தில் ஒரு பழைய காரைக்கட்டு மட்டப்பா வீடு ஒன்று இருக்கிறது. அதன் மச்சுக்கட்டைகளெல்லாம் இற்றுப் போய் ஆபத்தான நிலைமையில் இருக்கின்றன. மச்சைப் பிரித்தெடுத்து சுவர்களை இன்னும் மூன்றடி உயர்த்தி தேக்கு மரக்கட்டை போட்டும் மேல் பக்கமுள்ள இரண்டு சன்னல்களுக்கு நேராக கீழ் பக்கம் இரண்டு சன்னல்கள் வைத்தும் அரைவீட்டை எடுத்து விட்டும் தாங்கள் புதுப்பித்துக் கொடுக்க வேண்டும். அப்படி செய்த பின் அவ்வீட்டில் என் மனைவி மக்கள் குடியிருந்து வரலாம். ஆத்தூர் பிரமு அம்மாள் ரூபாய் எழுநூற்றைம்பதுக்கு என் மனைவி பேருக்கு ஒரு அடமான சொத்துக்கள் தங்களுக்கு முந்திய அடமானம், அடமான சொத்துக்கள் சுமார் ரூபாய் இரண்டாயிரத்துக்கு விலை போகும். என் மனைவி அடமான தஸ்தாவேஜை தங்கள் பேருக்கு மேடோபர் வாங்கிக் கொள்க. அதற்கு வசூலாகும் தொகையையும் மேலே கண்ட என் புஞ்சைக்கிரயம் ரூபாய் ஐநூறும் அவசியமானால் என் மைத்துனன்மார் குடும்பத்திலிருந்து என் குடும்பத்திற்கு கிடைக்கக்கூடிய ரூபாய் 1500–ம் நான் தங்களிடம் பற்றி வருகிற தொகைக்கு ஈடு செய்து கொள்க. இப்பொழுதும் ரூபாய் இரு நூறு விலை போகக் கூடிய சட்டப் புஸ்தகங்கள் என்னிடமிருக்கின்றன. அவற்றை விற்க வேண்டும்.

எனது கடன்கள்

தூத்துக்குடி நேஷனல் பேங்க் ஆப் இந்தியா லிமிடெட்டுக்கு ஐந்து மாத வீட்டு வாடகை ரூபாய் (135)

தூத்துக்குடி சரோஜினி ஸ்டோர்ஸ் ஜவுளி பாக்கி சுமார் ரூபாய் (30)

வன்னியஞ்செட்டியார் எண்ணெய் கடைக்கு சுமார் ரூபாய் (30)

சில்லரைக் கடன் ரூபாய் (60)

இன்ஸ்பெக்டர் பிள்ளைக்கு ரூ.20 சோமநாத்துக்கு ரூ.16 வேதவல்லிக்கு ரூபாய் 50. ஆம மொத்தம் ரூபாய் 86.

எனது தம்பி மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு சாப்பாடு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்,.

இப்போது செய்ய வேண்டிய அவரசக்காரியம் ருதுவாயிருக்கிற என் மக்களிருவரில் மூத்தவளாகிய சௌபாக்கியவதி ஆனந்தவல்லி அம்மாளுக்கு விரைவில் கலியாணம் செய்து வைக்க வேண்டும். சரியான மாப்பிள்ளை கிடையாததால் தாமதம். இப்போது சுமார் ரூபாய் ஐநூருக்கு அவளிடத்தில் நகைகள் இருக்கின்றன. இன்னும் ரூபாய் ஐநூறுக்கு அவளுக்கு நகை போட வேண்டும். கலியாணப் பந்தல் செலவு ஒரு வருஷத்துக்கு சீர் சீராட்டு செய்யவும் வேண்டும். அவற்றிற்கு ஒரு கம்பெனி இன்ஸ்யூரன்ஸ் பணம் 1000மும் சரியாகப் போகும். சௌபாக்கியவதி மரகதவல்லி அம்மாள் கலியாணத்தை இன்னம் இரண்டு வருஷம் கழித்து நடாத்தி வைக்கலாம். அவளுக்கும் அவளிடமிருக்கிற நகைகளை சேர்த்து ரூபாய் ஆயிரத்துக்கு நகை போட வேண்டும். அவற்றிற்கு மற்றொரு கம்பெனியின் இன்ஸ்யூரன்ஸ் பணம் ரூபாய் 1000–மும் சரியாய் போகும். என் குடும்பத்திற்கு வரக்கூடிய தொகைகள் எல்லாம் தாங்களே வாங்கி வைத்திருந்து கோவாப்பிரேட்டிவ் சொஸைட்டியில் கொடுக்கிற கரண் டிபாஸிட் வட்டி போட்டு கொடுத்து வர வேண்டும். இந்த நிலைமையில் என் மனைவி மக்களுடைய அன்னவஸ்திர கல்வி செலவுகளுக்கு யாதொரு ஐவேசுமில்லை. அதற்கு ஒரு நிதியுண்டு பண்ண நான் முயலுகிறேன். என் நிலங்களில் நஞ்சை தவிர பெரிய புஞ்சை சங்கிலி இரண்டும் தோட்டமும் என் தங்கை அன்னவஸ்திரத்திற்காக விடப்பட்டுள்ளன.

திருச்செந்தூர் மைத்துனன்மார் காரியம்

வீரபாண்டிய பட்டணம் பூபாலராயன் இடமிருந்து ரொக்கமே வாங்க வேண்டும். சொத்து ஒன்றும் வாங்கக் கூடாது. திருச்செந்தூர் உண்டியல் கடை சரசிணை ஐயர் ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மாத்திரம் பெற்றுக் கொள்ளச் சம்மதித்தால் அவரிடமிருந்து என் மைத்துனன்மார் அடமானத்தை விடுதலை செய்து தஸ்தாவேஜ் எழுதி ரிஜிஸ்டர் செய்து வாங்க வேண்டும்.அவர் ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூருக்கு சம்மதிக்காவிட்டால் விட்டு விட வேண்டும். என் மைத்துனன்மார் சகோதரியாகிய சௌபாக்கியவதி ஆறுமுகத்தும்மாளுக்கு நகைப் பாவத்து வகைக்கு கொடுக்க வேண்டிய ரூபாய் ஐந்நூறு அவள் இஷ்டப்படி ரொக்கமாகவோ, நகையாகவோ கொடுத்து ரசீது வாங்கிக் கொள்ள வேண்டியது. என் மைத்துனன்மார்கள் பெரும் செலவாளிகளாய் இருக்கிறபடியால் பாக்கித் தொகையில் யானையப்ப பிள்ளை சத்திரத்துப் பக்கத்தில் மரக்கால் ஒன்றுக்கு ரூபாய் நூறு விலைக்கு நல்ல நஞ்சை கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. அதில் மூன்று கோட்டை விரப்பாடு தங்கள் பேருக்கு கிரயத்திற்கு வாங்கி அவற்றையும் பாக்கி தொகையையும் என் மைத்துனன் மூவரும் மூன்று பங்கு வைத்து தங்கள் மனைவி மக்களுடன் அவர்கள் யாதொரு வில்லங்கத்திற்கும் உள்படுத்தாமல் அனுபவித்துக் கொள்ளும்படிக்கும் அவர்கள் மக்கள் மெஷார் (மேஜர்) யடைந்த பின் அவர்கள் சர்வ சுதந்திர பாத்தியமாக அனுபவித்துக் கொள்ளும்படி தாங்கள் அவர்களுக்கு நன்கொடை தஸ்தாவேஜ் எழுதி ரிஜிஸ்டர் செய்து கொடுக்க வேண்டும். என் பெரிய மைத்துனர் சுப்பிரமணிய பிள்ளை ஒருக்கால் கலியாணம் செய்து கொள்ள விரும்பவில்லையானால் அவன் பாகச் சொத்துக்களை பகிர்ந்து நன்கொடை தஸ்தாவேஜில் எழுதி வைக்க வேண்டும். ஆனால் எனது பெரிய மைத்துனன் தனது வீட்டை வில்லங்கம் செய்யாத காலம் வரையில் அவன் அன்னவஸ்திர செலவிற்கு அவன் பாகச் சொத்துக்களிலிருந்து மற்றைய இருவரும் நபர் ஒன்றுக்கு ரூபாய் ஐந்து வீதம் ரூபாய் பத்து மாதம் தோறும் கொடுத்துவிட வேண்டும். திருச்செந்தூர் வீடுகளில் தெற்கு வீடு சுப்பிரமணியத்துக்கும் வடக்கு வீடு வெங்கிடாசலத்திற்கும் சேர வேண்டும். வடக்கு வீட்டிற்கு

எதிரேயுள்ள காலிமனை தான் மைனர் குஞ்சரத்திற்கு சேர வேண்டியதாக இருக்கிறது. வடக்கு வீட்டையும் தெற்கு வீட்டையும் கிரயம் போட்டு தெற்கு வீட்டிற்கு போகும் கிரயத்தில் அதிகப்படும் தொகையை வெங்கிடாசலத்திற்கும் சுப்பிரமணியம் சொத்துக்களிலிருந்து கொடுக்க வேண்டும். குஞ்சரம் வீடு கட்டுவதற்கு அவருக்கு இவ்வளவு என்று இப்பொழுதே தீர்மானித்து மற்றைய இருவரும் அவருக்கு செலுத்திட வேண்டும். 19 பனை புஞ்சையையும் சமமாக பங்கிட்டு மூன்று பேருக்கும் கொடுத்து விட வேண்டியது. மைனர் குஞ்சரத்திற்கு கார்டியனாக வெங்கிடாசலத்தையும் மேற்படியார் அத்தான் சண்முகம் பிள்ளையும் நியமித்து அவனுடைய வரவு செலவுகளுக்கு சரியான கணக்கு வைத்திருந்து அவன் மெஷாரடைந்தபின் சொத்தையும் கணக்கையும் அவனிடம் ஒப்புவிக்கும்படியாக நன்கொடை தஸ்தாவேஜில் எழுத வேண்டும். பூபாலராயரிடமிருந்து தொகை பூராவும் வசூலாகிவிட்டால் அவருக்கு தாங்களும் நான்... (இந்த இடத்தில் ஒரு வரி சிதலமடைந்துள்ளது) ரூபாய் 1500ம் நான் என் மைத்துனன்மார் குடும்பத்திற்கு சென்ற பத்து வருஷமாக பாடுபட்டு வந்ததற்கு பிரதிபிரயோஜனமாக என் குடும்பத்தாருக்கு கொடுக்க வேண்டும். பூபாலராயரிடமிருந்து வரவு வந்திருக்கிற தொகைக்கும் பற்றாயிருக்கிற தொகைக்கும் பேரேட்டுபடி ஒரு நகல் தயார் செய்வித்து கூடிய விரைவில் என்ககு கொடுக்கும்படி உத்தரவு செய்க.

இதன் பிரதி ஒன்று என் மனைவியிடமும் மற்றொன்று என் மைத்துனன் வெங்கிடாசலமிடமும் கொடுக்கப்பட்டுள்ளன.

எல்லாம் வல்ல இறைவன் அருளால் மேற்கண்ட காரியங்கள் எல்லாம் தாங்கள் இனிது செய்து முடித்து அருள்புரிக.

வ.உ.சிதம்பரம்பிள்ளை

தூத்துக்குடி

26.10.1936

வஉசிக்கும் அவரது மூத்த மகன் வ.உ.சி.ஆறுமுகத்திற்கும் நடைபெற்ற பாகப்பிரிவினை நகல் கிடைத்தால் மேலும் சில விவரங்கள் கிடைக்கக்கூடும்.

வீடு புதுப்பிக்கப்படவில்லை

வஉசி தனது உயிலில் குறிப்பிட்டிருக்கும் ஓட்டப்பிடாரம் இல்லம் வஉசி குடும்பத்தினரால் புதுப்பிக்கப்படவில்லை. பின்னால், தமிழ்நாடு அரசு அதை விலைக்கு வாங்கி அதனை வஉசி நினைவிடமாக அறிவித்தது. அப்போது அந்தக் கட்டடம் புதுப்பிக்கப்பட்டது. அங்கு வஉசி நினைவகமும், நூலகமும் இப்போது இயங்கி வருகிறது.

தம்பி மீனாட்சிசுந்தரம்

வஉசியின் உடன் பிறந்த தம்பி மீனாட்சி சுந்தரம், ராஜநிந்தனை வழக்கில் வஉசிக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப் பெற்றதைக் கேட்டு அதிர்ச்சியுற்று மனநிலை பாதிக்கப்பட்டார். இவர் எங்காவது கடையில் சாப்பிட்டு விட்டுச் சென்றால், அதற்குரிய தொகையினை தன்னிடம் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்று வஉசி அப்போது அறிவித்திருந்தார். தனது உயிலிலும் தனது தம்பிக்கு சாப்பாடு கிடைப்பதற்குரிய ஏற்பாடுகளை வஉசி செய்திருந்தார். வஉசி மறைந்த ஏழு ஆண்டுகளுக்குள் 1943–இல் மீனாட்சி சுந்தரம் காலமானார்.

வஉசியின் சட்டப்புத்தகங்கள்

வஉசி உயிலில் குறிப்பிடும் சட்டப்புத்தகங்கள் என்ன ஆயிற்று என்ற விவரம் தெரியவில்லை.

சீர்திருத்த திருமணம்

1935–இல் தூத்துக்குடி மட்டக்கடை பகுதியிலுள்ள சின்னக்கடை சந்தில் வசித்து வந்த வசந்தா அம்மாளுக்கும், பின்னாளில் இரண்டாம் உலகப் போரின்போது இராணுவத்தில் பணியாற்றிய டாக்டர் சுப்பிரமணியன் என்பருவக்கும் 1935ல் சீர்திருத்த முறைப்படி தூத்துக்குடியில் திருமணத்தை தலைமை தாங்கி நடத்தி வைத்தவர் வஉசி.

1936 இல் தனது வாழ்வின் இறுதியில் இரு பெண் மக்களுக்கு திருமணத்தை நடத்தி வைக்காமலே மறைந்த செய்தி கல் நெஞ்சத்தினரையும் கலங்க வைக்கும் செய்தியாக அமைந்துள்ளது.

வஉசி மீனாட்சியம்மையார்

தனது பிள்ளைகள் தூத்துக்குடியில் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருப்பதால், வஉசியின் துணைவியார் மீனாட்சியம்மையார் ஓட்டப்பிடாரத்திற்குச் செல்லவில்லை. தூத்துக்குடியிலேய தொடர்ந்து வாழ்ந்து வந்தார்.

தனது கணவர் வஉசியின் மறைவிற்குப் பின்னர், குடும்பத்திற்குத் தூண்போல் நின்று ஆண் மகன் போல உழைத்து தனது மகள் மரகதவல்லியின் மறைவால், மிகவும் பாதிக்கப்பட்டார். எத்தனையோ இடர்ப்பாடுகளையும், இன்னல்களையும், இடைஞ்சல்களையும் கல் மனத்துடன் நல் முகத்துடன் தாங்கி வாழந்து வந்தார் மீனாட்சி அம்மையார்.

திருமணம்

வஉசியின் மறைவிற்குப் பின்னர் வஉசியின் துணைவியார் மீனாட்சியம்மையார் மிகுந்த, சிரமங்களைத் தாங்கி, தனது புதல்விகள் இருவருக்கும் எளிய முறையில் திருமணத்தை நடத்தி வைத்தார்கள். மீனாட்சி அம்மையார் ஏறத்தாழ அறுபதாவது அல்லது அறுபத்தைந்தாவது வயதில் கி.பி.*1951*–ல் மறைந்தார்.

என் கரங்களில் வ.உ.சி.யின் உயில் கிடைத்ததும், அதனை வாசித்து முடித்தபோது கண்களிலிருந்து கண்ணீர் பெருகி ஓடியது. அன்றிரவு முழுவதும் தூங்கவில்லை. இன்று நாடெங்கும் வ.உ.சி.யின் பெயரால்ட எத்தனையோ காரியங்கள்.... மணிமண்டபம் இத்யாதி.... இத்யாதி..... வாழும்போது அவரை இந்தச் சமூகம் கவனிக்கவில்லை. ஆதரிக்கவில்லை. கொள்கை உறுதியோடு வாழ்ந்து, இலட்சியவாதியாகத் திகழ்ந்த வ.உ.சி. தனது உயிலினை எழுதிய *23* முழு நாட்களுக்குள் (*26–10–1936; 18–11–1936*) இயற்கை எய்தினார். வ.உ.சி.யைப் போன்று தேசபக்தச் செம்மல்கள் பிறப்பது அரிது.

தந்தை வ.உ.சி.யின் புகழுக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் தனிப்பண்புகளோடு தலை நிமிர்ந்து வாழ்ந்தவர் வாலேஸ்வரன்.

நாட்டுக்காகத் தியாகங்கள் பல செய்த தந்தை வஉசியின் பெயரால் எந்த உதவியையும் பெறாதவர் வாலேஸ்வரன்.

நெல்லையில் நடைபெற்ற சிவஞானபோத உரை விழாவில் விழக்குழுவினர் அய்யா அவர்களிடம் ஒரு அன்பளிப்புப் பொட்டலத்தை கொடுத்தார்கள். அய்யா, என்னிடம் அது என்னது என்று கேளும் என்றார்கள். விழாக்குழுவினரிடம் கேட்டேன். வெள்ளி குத்து விளக்கு என்றார்கள். விலை எவ்வளவு என்றார்கள். இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் வரும் என்று விழாக் குழுவினர் சொன்னதைச் சொன்னேன். யோவ், இது இலஞ்சம் அதனை அவர்களிடம் திருப்பிக் கொடுத்துவிடும் என்றார்கள். அவ்வாறே திருப்பிக்கொடுத்தேன். அப்போது அய்யா அவர்கள் சொன்னார்கள். விழாவில் அன்பளிப்பாக பத்து ரூபாய், இருபது ரூபாய் மதிப்புள்ள நல்ல புத்தகம் தந்தால் அதனைப் பெற்றுக் கொள்வதில் தவறில்லை. இரண்டாயிரம், மூவாயிரம் மதிப்புள்ள பொருளைப் பெற்றுச் சென்றால் இது இலஞ்சமய்யா என்றார்கள்.

நான் அய்யா அவர்களிடம் கேட்டேன். அய்யா இங்கே இப்போது இது பற்றி கேட்டதினால் அவர்களிடம் அதனைத் திருப்பிக் கொடுத்துவிட்டோம். மாறாக நீங்கள் கொண்டு சென்றிருந்தால் என்ன செய்வீர்கள்? என்றேன். விநாடி கூட யோசிக்காமல் இருக்கிறதே இருக்கிறது கூரியர் அதன் மூலம் விழா நடத்தியவர்களுக்கே திரும்ப அனுப்பிவிடுவேன் என்றார்கள். அய்யா அவர்களின் நேர்மையை எண்ணி எண்ணி இன்றும் நெஞ்சம் விம்முகிறது.

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? தியாகத்தை விலை பேசக்கூடாது, என்று இலட்சியத்துடன் வாழ்ந்தவர் அய்யா. பத்திரிக்கை பேட்டிகள் பல இதனை பறைசாற்றுகின்றன.

நிகழ்ச்சிக்கு ஒப்புக் கொண்டால் குறிப்பிட்ட நேரத்தில் வந்துவிடுவார். கூட்ட ஏற்பாட்டாளர்களுக்கு எந்தச் சிரமமும் தரமாட்டார். நகைச்சுவை உணர்வு கொண்டவர். தனது கண்களை தானம் செய்தவர். அவரது கண்கள் சங்கரநேத்ராலயா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு பயன்படுத்தப்பட்டது.

25.7.2015 சென்னை மடிப்பாக்கத்தில் உள்ள தனது பிள்ளை வீட்டில் 88 வயதில் வாலேஸ்வரன் மறைந்தார். 26.7.2015 காலை 9 மணியளவில் மடிப்பாக்கத்தில் அவரது உடலுக்கு தமிழர் தலைவர் வைகோ மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி அறிக்கையும் தந்தார்.

தமிழர் தலைவர் வைகோவின் இரங்கல் அறிக்கை இதோ

இந்திய விடுதலைக்குப் போராடிய ஈடு இணையற்ற தியாகத் தலைவரான கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்களின் புதல்வர் வாலேஸ்வரன் மறைந்தார் என்ற செய்தி கேட்டு மிகுந்த துக்கம் அடைந்தேன். செல்வச் செழிப்பில் வாழ்ந்த சிதம்பரம் பிள்ளை, ஆங்கில ஆட்சியை அகற்றுவதற்காக வீரம் செறிந்த போராட்டம் நடத்தினார். தலை சிறந்த வழக்கறிஞரான வ.உ.சி. தொழிலாளர்கள் உரிமைக்காகப் போராடியதோடு, அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட காலத்தில் அவர்களுடைய பசியைப் போக்குவதற்காக தன்னுடைய சொந்தப் பணத்தை செலவழித்தார்.

திருநெல்வேலி சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு இரட்டை ஆயுள் தீவாந்திர தண்டனை விதிக்கப்பட்டு கோவை மத்திய சிறையில் சித்ரவதைகளை அனுபவித்தார். மாடுகளை இழுக்கும் செக்கை மனிதனான இவர் இழுத்தார். பின்னர் கேரளத்தில் கண்ணனூர் சிறைக்கு மாற்றப்பட்டார். சப் கலெக்டர் ஆஷ்துரை மணியாட்சி இரயில்வே நிலையத்தில் வாஞ் சியால் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி அறிந்தபோது, அந்த வீரச் செயலைப் பாராட்டினார். சிறையில் இருந்து வெளியே வந்தபோது வறுமை வாட்டியது. ஏழ்மையின் பிடியில் அவர் துன்புற்ற நாட்களில் பிறந்தவர் தான் வாலேஸ்வரன்.

அவர் சிறைக்குச் சென்றதால் அவர் வழக்கறிஞர் சன்னத்து பறிக்கப்பட்டது. வெள்ளைக்காரத்துரை வாலேஸ் தூத்துக்குடியில் நீதிபதியாக இருந்தபோது அவருடன் வஉசி கொண்டிருந்த நட்பினால் பின்னர் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக பதிவ ஏற்ற நீதியரசர் வாலேஸ், சிதம்பரம் பிள்ளையின் சன்னத்தைத் திரும்ப வழங்க ஆணையிட்டு மீண்டும் வழக்கறிஞர் தொழிலை மேற்கொள்ள வாய்ப்பளித்தார்.

அந்த நன்றியை மறக்காமல் மகனுக்கு வாலேஸ்வரன் என்று பெயர் சூட்டினார். தந்தையைப் போலவே வாலேஸ்வரன் எளிமையும், நேர்மையும், வாய்மையும், அஞ்சாமையும் மிக்க உயர் பண்பாளர் ஆவார்.

2008ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடைபெற்ற வ.உ.சி. பிறந்த நாள் விழாவில் நான் சிறப்புரை ஆற்றினேன். அந்த நிகழ்ச்சியில் வாலேஸ்வரன் அவர்களும் பங்கேற்றார்கள். அவர் பேசும்போது, "என் தந்தையைப் பற்றி பலரும் அறியாத அறிய செய்திகளை வைகோ கூறினார். அவர் கலந்து கொள்வதால்தான் நானும் இங்கே வந்தேன்" என்று கூறினார்.

2005ஆம் ஆண்டு நெல்லையில் வ.உ.சி. மணிமண்டபம் திறக்கபட்டபோது, தமிழக முதலமைச்சர் அவர்கள் வாலேஸ்வரன் அவர்களை மேடைக்கு வருமாறு அழைத்தும், மேடைக்குச் செல்லாமல், அந்த விழாவிற்கு வருவதற்காக அரசாங்கம் ஏற்பாடு செய்த தங்குமிடமும், கார் வசதியை ஏற்க மறுத்து, எனது நண்பர் குட்டி (எ) சண்முகசிதம்பரம் அவர்களின் இல்லத்தில் தங்கினார். ஒருமுறை ஒரு விழாவில் அவருக்கு வெள்ளியால் செய்த நினைவுப் பரிசு தரப்பட்டபோது அதனை அவர் ஏற்கவில்லை.

செக்கிழுத்த செம்மலின் புகழை நிலை நாட்ட அவர் எழுதி அச்சுக்கு வராத நூல்களை எல்லாம் அச்சில் ஏற்றி கொண்டு வந்த வரலாற்று ஆய்வாளர் செ.திவான் அவர்கள் மீது வாலேஸ்வரன் மிகுந்த பற்று கொண்டவர் ஆவார்.

அவரை இழந்து தவிக்கும் அவரது வாழ்க்கைத் துணைவியார் அலமேலு அம்மையார் அவர்களுக்கும், அவரது இரண்டு புதல்வர்களுக்கும், புதல்விகளுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் 26.07.2015 அன்று விடுத்துள்ள இரங்கல் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழகமெங்கும் சைவ வேளாளர் சங்கம், காங்கிரஸ், தாமாகா, திமுக, சமக, பாஜக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஏராளமானவர்கள் சென்று இறுதி அஞ்சலி செலுத்தினர்.

26.7.2015 மாலையில் சென்னை பெசன்ட் நகர் மயானத்தில் வாலேஸ்வரனாரின் இறுதிச் சடங்கு நடைபெற்றது. நாடெங்கும் பல்வேறு அமைப்புகளின் சார்பில் வாலேஸ்வரனாரின் நினைவேந்தல் நிகழ்ச்சிகள் தொடர்கின்றன.

கொட்டும் முரசு எடுத்துக் குலுங்கும் பேயரசுக்

கட்டை அவிழ்த்து விட்ட காவல்நிலையமாம்

காலத்தின் விடிவெள்ளியாம் வஉசியின்

குலத் தோன்றல் வாலேஸ்வரனாரின் நினைவுகளை

சிறு நூலாக்கியுள்ளேன்.

வருங்காலத்தில் அவர் தம் வாழ்க்கை வரலாற்றுப் பெருநூல்

உருவாக இந்நூல் சிறுதுளியேனும் பயன்பட்டால்

அதுவே இந்நூலின் வெற்றி.

எளியேன் வாழ்வதற்காக எழுதவில்லை
எழுதுவதற்காகவே வாழ்கிறேன்.

செ.திவான்

வள்ளல் வைகோ நூலகம்
ரெகான் சுலைமான் இல்லம்
106F, 4A, திருவனந்தபுரம் சாலை,
நெல்லை, பாளையங்கோட்டை – 627002
5.9.2015



வ.உ.சி.யின் சிவஞான போதஉரை நூல் வெளியீட்டு விழாவில்
தமிழர் தலைவர் வைகோ - வாலேஸ்வரன் அவர்களுடன்

வ.உ.சி. தபால் தலை

தமிழர் தலைவர்

வைகோ அவர்களின் உதவியாளர்

செ.திவான் எழுதிய. பதிப்பித்த

தேசபக்தச் செம்மல் வ.உ.சி. குறித்த நூல்கள்

1. வஉசியின் அழகும் ஆரோக்கியமும்
2. வஉசியின் துன்பத்தின் கற்பனை
3. வஉசியும் பெரியாரும்
4. வஉசியும் தொல்காப்பியரும்
5. வஉசியின் பாடல்கள்
6. வஉசியின் அரசியல் பெருஞ்சொல்
7. வஉசி புகழ்பாடிய முன்னோடிகள்
8. வஉசி நூற்கோவை
9. வஉசியும் பரலி சு. நெல்லையப்பரும்
10. வஉசியின் வள்ளியம்மை சரித்திரம்
11. இலக்கியப் புரட்சியாளர் வஉசியின் இன்னிலை
12. விஓசி கண்ட பாரதி
13. வஉசியும் திருக்குறளும்
14. வஉசியின் சிவஞான போத உரை
15. வஉசியின் சுய சரிதை
16. வஉசியின் உயில்
17. சுதந்திரச் சங்கநாதம்
    சுப்பிரமணிய சிவாசிறைவாசம்
18. வஉசி வாலேஸ்வரன்
19. வஉசியும் ஆஷ் கொலையும்
20. வஉசியும் சைவசமயமும்

விரைவில்...

21. வஉசியும் மதுரைத் தமிழ்சங்கமும்
22. வஉசியும் சுதேசிக்கப்பல் கம்பெனியும்
23. வஉசியும் விவேகபாநுவும்
24. வஉசி வழக்கும் தீர்ப்பும்
25. வஉசியும் திலகரும் காந்தியும்